அமிர்த
# கங்கை

விலை ரூபா 5/-

ஆடி 1986



அமிர்த
**கங்கை**

அமிர்தம்: 1 கங்கை: 7

தொலைபேசி: 22437

தனிப்பிரதி: ரூ. 5-00

வருடச் சந்தா: ரூ. 60-00

**விளம்பர விகிதம்**

| | |
|---|---|
| முன்பக்க பின் அட்டை | ரூ. 1000-00 |
| பின்பக்க உள் அட்டை | ரூ. 750-00 |
| சாதாரண முழுப்பக்கம் | ரூ. 500-00 |
| அரைப்பக்கம் | ரூ. 300-00 |
| கால் பக்கம் | ரூ. 150-00 |

குறுநாவல்,
சிறுகதை,
கட்டுரை (அறிவியல், மருத்துவம், இலக்கியம், தத்துவம், கல்வி, சமயம், வரலாறு) அனுப்ப

எல்லாத் தொடர்புகளுக்கும்

**அமிர்த கங்கை**
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

கௌரவ ஆசிரியர்:
**செம்பியன் செல்வன்**

அச்சும், பிரசுரமும்:
**சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்.**
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இனி நாம் செய்ய வேண்டியது என்ன?

படைப்பாளிகளாக இருந்து படைத்து, விமர்சித்து, இலக்கிய முத்திரையோ, கலைஞர் பட்டமோ பொறித்து நிர்ச்சிந்தையாகக் காலம் கழிக்கப் போகிறோமா?

காலாதிகாலம் எழுத்திலும் பேச்சிலும் - சமூகப் புரட்சி, விடுதலை எழுச்சி, சுதந்திர தாகம், சிவப்புப் புஷ்பங்கள், வசந்தச் சிவப்புக்கள், புரட்சிப் புரவிகள், என்றெல்லாம் வார்த்தைகளில் விளையாடி, வாசகனுக்குச் சூடேற்றிச் சாகசம் புரிந்த எழுத்தாளர்களாகிய நாம் இனி என்ன தான் செய்யப்போகிறோம்?

விழாக்களும், வெளியீடுகளும் வெள்ளி விழாக்களாகி தங்க, வைர விழாக்களை நோக்கி நடைபோட வைத்தும், அவ்விழாக்களில் அரசியல் வாதிகளை விட மோசமான கருத்துக்களை எல்லாம் வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த வாந்திகளைக் கூட வானத்து உண்மைகள் வையகத்திலிறங்கி வந்த அமிர்தவர்ஷங்களெனக் கருதி யாழ்ப்பாணத் தினசரிகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரம் செய்து தம் 'இன வொற்றுமை'யைக் காட்டிக் கொள்கின்றன. ஆனால்—

எங்கள் சமூகம் எங்களை விட்டு விட்டு எங்கோ முன்னே போய் விட்டது தெரியாமல் இன்னமும் எமது பழங் கனவுகளுடனும், நிழல்களுடனும் உரத்துப் பேசிக் கொண்டிருப்பது தான் பரிதாபத்திலும் பரிதாபம்.

எந்தச் சமூகப் பிரச்சனைகளிலும் ஒன்றாமலும், உடன் சேராமலும் — பார்வையாளராக நின்று பார்த்துப் பதிந்ததை விட, படித்துப் பதிந்தவையையே முன்னிறுத்தி தத்துவ விசாரப் போதகர்களாக மாறி, நாங்களே அதிகம் குழம்பிப் போய் விடுவது தான் இன்னும் பெரிய பரிதாபம்.

இந்த நிலை நிச்சயம் மாறியாக வேண்டும். இல்லையெனில் மாற்றியமைக்கப்பட்டு விடும்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் இன்றைய இனப்பிரச்சினை பற்றி மக்களுக்கு வெளியிட்டுள்ள கருத்து என்ன? பொதுமக்கள் என்ற பெயரில் தெருவோர சுவர்களில் எத்தனை எத்தனை கருத்துக்களை மக்கள் அரசுக்கும், இயக்கங்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் முன்னே வைத்தனர். ஆனால்— எழுத்தாள சங்கங்கள் ஏதாவது கருத்துரைகளை நேரடியாக இவ்வாறு வழங்கியதுண்டா?

நாற்பது ஐம்பது பேர் கூடும்- அதுவும் ஒரே இன, கருத்துக் கொண்ட- கூட்டங்களில் ஏதேதோ கருத்துக்களை தெரிவிப்பார்கள். சந்தோஷப்படுவார்கள். அடுத்த நாள் தினசரிகளில் அந்தக் கருத்துக்கள் கூட அடிபட்டுப் போய், சில தனிப்பட்ட எழுத்தாளர்களின் சொந்த விடயங்கள் தான் பிரசுரமாகி இருக்கும்.

எழுத்தாளர்களின் படைப்புகளில் கூட நாட்டின் நடப்பின் நிகழ்வுகள் தான் இன்று ஓரளவு துணிச்சலாகக் காட்டப்படுகின்றனவேயன்றி அவற்றின் விமர்சனங்களோ, சிந்தனைகளோ அதிகம் காட்டப்படுவதில்லை. காட்டுகின்ற திராணி அற்றவர்களாக ஒதுங்கியே நின்று விடுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இதற்கு—

- சில முக்கிய நிகழ்ச்சிகள் - அரசியலிலோ, சமூகத்திலோ - ஏற்படும் போது அவைபற்றிய கருத்துக்களை எழுத்தாளர்கள் இணைந்து வெளியிட வேண்டும்.
- அறிவு ஜீவிகளின் கூட்டம் எனக் கருதப்படும் இவர்கள் எதிர்கால- தொலை நோக்குப் பார்வையில் - சில விளைவுகளை முன் கூட்டியே மக்களுக்கு வழங்கவேண்டும்.
- போராளிகளிடையே எழும் பிரச்சினைகளை யதார்த்தமாகப் புரிந்து கொண்டு ஏற்ற வழிவகைகளைச் செய்ய வேண்டும்.
- நிகழ்காலத்திற்கு ஏற்ற புதிய புதிய கலைவடிவங்களையும், அவற்றிற்குரிய பரிமாணங்களையும் அமைக்க வேண்டும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக 'பழங்கணக்கு'களைத் தள்ளி வைத்துப், புதிய பேரேட்டைத் திருப்ப வேண்டும்.

செம்பியன் செல்வன்.

புலனாய் பத்திரிகைத்துறையை ஈழத்தில் வளர்க்க வேண்டும் என்ற பேரவா அமிர்த கங்கைக்கு உண்டு என்பதனை ஆரம்ப இதழ் முதற் கொண்டே ஏதோ ஒரு விதத்தில் அடிக்கடி வற்புறுத்தி வந்துள்ளோம்.

பரபரப்பான உயிர்ச் செய்தியின் உண்மை நிலையினை உலகறியச் செய்யவும்,

நாட்டின் போராட்டச் செய்திகளை அந்தந்தக் களங்களிலேயே சென்று நேரடியாகப் பெற்று விவரணமாகப் புகைப்படங்களுடன் வெளியிடவும்,

அரசாங்கத்தினதோ, இராணுவத்தினதோ அந்தரங்க எண்ணங்களை முன்கூட்டியே அறிந்து பெறவும், ஊகம் கொள்ளவும்,

இத்தகைய 'உண்மை'ப் பலத்தால் இச்செய்திகளின் மொழிபெயர்ப்புகளே உலகில் ஏனைய பத்திரிகைகளில் அங்கீகரிக்கப்பட்ட செய்திகளாக மாறவும்,

பிரச்சினைக்குரிய அரசியல், சமூக, பண்பாட்டு, கலை இலக்கியப் பிரமுகர்களையும், பொது மக்களையும் பரபரப்பான பேட்டிகள் மூலம் ஒருவரை ஒருவர் அறியச் செய்யவும்,

புலனாய் பத்திரிகைத்துறை ஈழத்திற்கு மிகமிக அவசியம் என்பதே எமது எண்ணம்.

எங்கள் பத்திரிகைத் தாபனமும் இக்கொள்கையை முழுக்க முழுக்க ஆதரித்தாலும், இன்றைய நாட்டு நிலைமையில் இத்தகைய பத்திரிகை முறையைக் கைக் கொள்வது 'இருபக்க இடி' யாகி விடும் என்பதனால் எங்களுக்கு ஒரு புதிய ஆலோசனையை வழங்கியுள்ளது.

'உங்கள் இன்வெஸ்டிகேஷனை இலக்கியவுலகில் முதலில் நடத்துங்களேன்!'

(அதுவரை தென்னகப் பத்திரிகைகளில் காலம் கடந்து போய் நமது நாட்டின் பரபரப்புச் செய்திகளைப் படிப்போமாக)

—அதன் விளைவு

---

## சைனீஸ் புரியாணியும், ரஷ்யன் ஒம்லெட்டும்.

திடீரென நமது காரியாலயத்திற்கு வருகைதந்த அந்த இலக்கியவாதி தனக்கு வந்த அந்தக் கடிதத்தை எம் முன்னே கோபத்துடன் மேசையில் போட்டார்.

கவரைத் திருப்பித் திருப்பிப்பார்த்த நாம், "இது உங்களுக்கு வந்த கடிதமல்லவா?' -என்றோம்.

''பரவாயில்லை. பிரித்துப் படியும்!'' -என உரிமை வழங்கினார்.

"மல்லிகைப் பந்தலின் கீழ், இலக்கியகாரரின் இலக்கியமே கதைக்காத ஒரு பகல் பொழுது ... என்ற முகவரியில் உள்ள இல்லத்தில் காலை 9மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இலக்கியகாரர்கள் சிலர் இந்தப்பகல் பொழுது முழுவதும், கூடிக் கதைக்கவும், "தத்தமது முகமூடிகளைக் களைந்து விட்டுச்சிரித்து மகிழவும் இலக்கியமேதைக்காக ஒன்று கூடலுக்கு... தங்களின் வருகையை அன்புடன் எதிர்பார்க்கிறோம்'' வரவை விரும்பும் 'சுதாராஜ்' 'டொமினிக்ஜீவா' எனக் காணப்பட்டது.

''சென்று வாருங்கள். இக்கடிதம் உங்களை ஒரு இலக்கியகாரனாக அங்கீகரித்திருக்கிறது. அதற்கான வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்''

''உங்களுக்கு எல்லாத்திலும் நக்கல்தான். அதுசரி. இலக்கியம் பேசாமல் இலக்கியகாரர் ஒன்றுகூடி என்ன செய்வது? கஞ்சா அடிப்பதா? அல்லது ஓடிப்பிடித்து விளையாடுவதா? அதுவும் முகமூடிகளைக் கழட்டினபிறகு என்ன விளையாடி, என்ன அவாரஸ்யம் வரப்போகுது... இலக்கியத்திலேயே சுவாஸ்யமா பகுதியே இலக்கியகாரரின் முகமூடி விளையாட்டுத் தானே?... 'என்று பொரிந்து கட்டினார்.

நாம் சுற்றுமுற்றும் பார்த்து எமது முகமூடிகளைத் தேடினோம். ஒன்றுமே கிடைக்கவில்லை. அதனாற்றான் எமக்கு அழைப்பில்லை என்று எம்மைத் தேற்றிக் கொண்டோம். இல்லாவிட்டால் எம்மையும் தேர்ந்திருப்பார்களே! நல்லவேளை, சங்கடங்களிலிருந்து தப்பிவிட்டோம்.

''எங்களை என் செய்யச் சொல்கிறீர்கள்!''

'இதையெல்லாம் கழட்டி எழுதுங்கள். இந்த இலக்கியகாரர்களெல்லாம் எழுதுவது ஒன்று; பேசுவது ஒன்று செய்வது மற்றொன்று''

"கழட்டிறதும் பூட்டிறதும் தான் எங்கட வேலையெண்டு நினைக்கிறியள்போல ..'' அசட்டு சிரிப்புடன் நாம்வழிய,

அவருக்கு கோபம் வந்துவிட்டது.

'சைனீஸ் ரெஸ்தோரண்ட்' டிற்கு கார் அனுப்பி எடுப்பித்த புரியாணி மிகமிகப் பிரமாதம். என்ன இருந்தாலும் சீனாக்காரன் இலக்கியத்தைப் போலவே சமையலிலும் கெட்டிக்காரன் தான்! வெள்ளைக்காரப் பிரபுக்கு கூட உந்தச் சாப்பாடு கிடைக்காது. ஒவ்வொரு புரியாணிப் பைக்கட்டும் என்ன விலை தெரியுமே?...

'ஆனாலும் எனக் கொண்டு புரியேல்ல...?'

'என்ன?'

'சைனீஸ் ரெஸ்தோரண்டுகளிலெல்லாம் இப்ப கூழ் படைக்கிறோம் என்று விளம்பரம் செய்து எங்கட தேசிய உணவுக்குப் போகேக்க, ஈழத்து மண்ணின் வாசனையை நுகர்ந்து, பவுடர்டப்பிக்குள் அடைக்கும் இலக்கியகாரர்கள் புரியாணியில் மயங்குவதுதான்...'

'இன்னும் ஒரு சந்தேகம்...?'

'என்ன?...'

'அம்பது அறுபது எழுத்தாளர்களுக்கு ஆனைக் கோட்டையிலிருந்து கார் அனுப்பி— பெரும்பாலும் யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களுக்கு— புரியாணி எடுப்பித்தவர்கள் தங்கள் ஒன்று கூடலை ரெஸ்தோரண்டிலேயே வைச்சிருக்கலாமே. வீண் செவுதானே. செலவளிக்க ஆள் கிடைத்து விட்டதுக்காக ஊதாரிகளாக மாறுவதா?...

'சிலருக்கு எப்ப எதைச் செய்தாலும்... நல்லதைச் செய்தாலும் ஆயிரம் நொட்டை... திண்டதை மறந்து விட்டு... இப்ப எனக்கு ஒரு யோசனை... ஏனெண்டு தெரியேல்ல. ரஷியாக்காரன் இங்க ஏன் இன்னும் ஒரு ரெஸ்தோரண்டை திறக்கிறானில்ல... அவங்கட முட்டை ஒம்லட் எப்படியிருக்கு மெண்டு பாக்க...'

'அதுவும் எங்கட நாட்டுக் கோழி முட்டையில அவன் போடுற ஒம்லட்டை ருசிபார்க்க வேணும்...'

'சரி... எங்கட மண்ணின் இலக்கியம் தான்— அன்னியச் சாப்பாடு சாப்பிடுற இடத்தில பேசக் கூடாது. எங்கட சாப்பாட்டைப் பற்றியும் கூடவா... அதனாலென்னா...

ஈழத்து இலக்கியம் இனிவரும் வருடங்களில் நோபல் பரிசு பெறுமலா போய்விடப் போகுது.

"நீங்கள் எல்லாம் ஒரேயாக்கள் தானே! கூட்டங்களிலே ஒருவரை ஒருவர் மட்டம் தட்டுவதெல்லாம் உங்கட கெட்டிக்காரத் தனத்தைக் காட்டத்தானே ஒழிய வேற ஒண்டுக்கு மில்லை. உங்களுக்குத் தான் வகைவகையாக முகமூடிகள் இருக்கே தவிர, எங்களுக்குச் சொந்தமுகம் தானிருக்கு. அந்த முகத்தோட தான் மக்கள் முன் போகிறோம். ஏதோ முகமூடிக் கள்ளரை விருந்துக்கு கூப்பிடுவதுபோல இருக்கே என்று கேட்டால் விண்ணானக் கதையள் பேசிறியள்!"

—அவர் கோபத்தில் ஏதோ 'ஞாயம்' இருப்பது போல் பட்டது. அந்தக் கூட்டம்பற்றி வேறு சில-அழைக்கப்பட்ட முகமூடி எழுத்தாளர்களை மெதுவாக விசாரணை செய்த போது — 'இது ஒரு விசர் வேலை. கடிதம் கிடைத்தவுடனேயே குறிப்பிட்ட நாளில் தமக்கு வேறு வேலை இருப்பதாகக் கூறி தப்பிவிட்டதாகச் சிரித்தார்கள்.

எங்களுக்குச் சுவாரஸ்யம் அதிகரித்தது.

இந்த ஒன்று கூடல் எதற்காக, ஏன் கூட்டப்படுகிறது?

வெறும் பொழுது போக்கு அம்சமா? அல்லது ரகஸ்யமாக மிகமுக்கிய முடிவெடுக்க அனுப்பப்பட்ட கடிதமா? —மனம் பரபரத்தது.

C. I. A. K. G. B —என்றெல்லாம் சிந்தனை தறிகெட்டு ஓடியது.

எனவே, கூட்டம் முடிந்த பின் சிலரை, இலக்கிய முகமூடியற்ற நிலையில் சந்திக்க நேர்ந்தது.

'கூட்டம் எப்படி இருந்தது?'

அந்த இடத்திலிருந்த கத்தரித் தோட்டம் அற்புதம். ஆளுக்காள் அதைப் போல எப்படி எங்கட வீடுகளிலில தோட்டம் அமைக்கலாம் என்று தான் நாள் முழுக்கப் பேசினோம்.'

'இலக்கியம் பேச முயன்ற டொமினிக் ஜீவா இரண்டு ரூபா அபராதம் விதிக்கப்பட்டார். அவரைப் போலவே கொழும்பிலிருந்து வந்திருந்த தினசரி பத்திரிகையாசிரியர் தோப்புக்கரணம் போட வேண்டியதாயிற்று.'

'ஆமாம். இலக்கியம் பேசக்கூடாது என்பதற்கு மகாகட்டுப்பாடு.'

'முருகையன் பாடிய பக்திப் பாடல்கள் மிகப் பிரமாதம்.'

'சரி வேறென்ன பிரமாதமாக இருந்தது?'

## குட்டிக் கதைகள்

# ஜீவன் முக்தி

கோடை வெயில்.

கரு வேல மரத்தைச் சுற்றிக் கொண்டு பாம்பு கிடந்தது.

அது சட்டையை உரிக்க வேண்டிய காலம்.

உடலில் பலத்த வேதனை.

பசியே தோன்ருத வேதனை.

அருகில் தேரைகளும், தவளைகளும் கவலையற்றுத் துள்ளித் திரிந்தன. பாம்பிடம் கேட்டன.

''பாம்பே ஏன் இப்படிச் சுருண்டு கிடக்கிருய்?''

''நான் இவ்வளவு நாள் செய்து வந்த பாவத்திற்காக கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்; விரதம் அனுஷ்டிக்கிறேன். உங்களைப் போன்ற ஜீவராசிகளைக் கொன்று வளர்த்த உடலைக் கழட்ட வரம் கேட்கிறேன். என்ற'' போது அதன் உடலிலிருந்து செட்டை உரியத் தொடங்கியது. அதன் உடல் பளபளத்து ஒளி வீசத் தொட கியது.

தவளையினங்கள் கரம் கூப்பி அதன் தெய்வீக ஒளியில் பரவசமாகின. தன்னிலை மறந்தன.

விரதம் முறிந்த பாம்பு ஒவ்வொன்ருக அவற்றை உண்ணத் தொடங்கியது.

—செம்பியன் செல்வன்.

## அடுத்த இதழில்...

● யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
அகில இலங்கை ரீதியாக
நடாத்திய
குறுநாவல் போட்டியில்
பரிசு பெற்ற
நாவல்
முழுமையாக
வெளியாகிறது.

● புதிய தொடர்கதையை
எழுதப் போகிறவர் யார்?

● ஏழு இதழ்களின் பின், சந்தாதாரரைச் சேர்க்க முனைந்துள்ளோம். ரூ 60/- செலுத்தி, ஈழத்து எழுத்துக்களை வளர்க் ; உதவுங்கள் உங்கள் இலக்கிய அறிவையும் பெருக்குங்கள்.

விபரங்களுக்கு: 140, நாவலர்வீதி. யாழ்ப்பாணம்.

# அறிவா பாசமா?

அருந்ததியின் அப்பா அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ருர். சிறுமி அருந்ததிக்கு அப்போது வயது ஐந்து. மிகவும் சுட்டிகையான சிறுமி அவள். சுருண்ட கரிய மயிர்களினூடே முகத்தில் துருதுருத்த விழிகளில் எப்போதும் ஆர்வம் ததும்பி நிற்கும்.

நேரமோ இரவு ஏழு மணி இருக்கும். குடிசைக்கு வெளியில் எங்கும் கும் இருட்டு. குப்பி விளக்கு ஒன்றின் சுடர் காற்றில் அசைந்தாடுகின்றது. மழைக்கால ஈசல்கள் அங்கும் இங்கும் பறந்தடித்துத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

அருந்ததியின் தாயார் கிணற்றடியிற் குளித்துக் கொண்டிருக்கிருர். சிறுமி பாடத்தை மிகவும் கவனமாகக் கேட்டுத் தகப்பனுரின் சிறுசிறு வினுக்களுக்கு விடையளித்துக் கொண்டிருக்கிருள். தகப்பனுர் மற்றெல்லாவற்றையும் மறந்து பாடத்திலேயே ஆழ்ந்திருக்கின்ருர். திடீரென அருந்ததி கூறுகின்ருள், "''அப்பா அம்மாவைப் போய்ப் பாருங்கோ. கிணத்தடியிலை குளித்துக் கொண்டிருந்தவ. இப்ப வாளிச் சத்தம் கேட்கேல்லை.'' இதைக் கேட்டவுடன் தகப்பனுருக்கு ஒரு பொறி தட்டியது. பாடத்திலும் மிகக் கவனமாக வினுக்களுக்கு விடையளித்த பிள்ளை' தானே கூடக் கவனிக்காத நிலையில் தனது தாயாரை வாளிச் சத்தம் மூலம் அவதானித்துக் கொண்டிருந்தது அவரைச் சிலிர்க்க வைத்தது. இது கூர்மையான அறிவா அல்லது பாசமா?


—சீனுச்சாளு

## மன்னிப்புக் கோருகிருேம்

'புத்தக அன்னம்' பகுதியில் சென்ற தழ் நூல் விமர்ச த்தைச் செய்தவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். கவிஞர் முருகையன் எனத் தவறுதலாக (அச்சக இடமாற்றத்தால்) இடம் பெற விசித்திரத்திற்காக இரு பெரும் கல்விமான்களிடமும் மன்னிப்புக் கோருகிருேம்.

செம்பியன் செல்வன்

# இவர்கள்!




இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

கண்களை எரிக்கும் வெய்யில் போட்டிருந்த ரப்பர் செருப்புகளை மீறி கால் பாதங்களை சுட்டது. கைகள் இரண்டிலும் சுமைகளோடு பைகள்.

வாழ்க்கையே சுமையாகிவிட்ட பின்னர் கைகளிலே சுமப்பது பெரிய காரியமில்லை. ஆனால் மனச்சுமை? பொசுக்கும் வெய்யிலை விட மனத்தை சுடும் வேதனைகளின் கொடுமை.

யாரிடம் போய் எதை சொல்ல முடியும். யார் தான் நிம்மதியாக இருக்கின்றார்கள். எவர் தான் சோதனைகளை எதிர் நோக்காமல், பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காமல்.

பொன்னம்மா இதைத்தான் யோசித்தாள் எப்படியும் வாழ்க்கையை கொண்டு நடாத்த வேண்டியுள்ளது வேறு என்ன செய்யலாம்?

பிள்ளைகளைப் பெற்றுத் தான் என்ன? ஊர் சிறக்க வளர்த்து பெயரின் பின்னால் போட பட்டமும் சேர்த்து விரும்பிய படியே திருமணமும் செய்ய தலையாட்டிய பின்னரும்.

குடும்பம் குடும்பமாக அவர்கள் வெளியே போய் இருந்து அன்பான அம்மா, அப்பா என்று கடிதங்கள் மாத்திரம் ஒழுங்காக எழுதுகின்றார்கள். அது மாத்திரம் போதுமா?

வீடும் வளவும், வளவு நிறைய வருமானம் தரும் வளங்களும், பென்சனோடு பிள்ளைகள் அனுப்பும் ஸ்ரேலிங் பவுணும், மார்க்கும் இங்கு காசாகின்றன. என்ன இருந்தும் என்ன?

படுக்கை பஞ்சணையாக இருந்தாலும் தூக்கம் வாரவிட்டால் யாரை நோகலாம். பொன்னம்மாவினதும் அவள் புருஷன் நாகநாதரினதும் நிலைமையும் இது தான்

ஐம்பத்தைந்து வயதினை தாண்டி விட்ட இருவரும் தனிமையாக்கப்பட்டு வெறுமையில் மூழ்கி வீட்டில் யாருமில்லை. அன்பு செலுத்த, பாசத்தை பொழிய தோழமையுடன் கதைக்க.

இருவரும் ஆளை ஆள் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டு மனமும் உடலும் பெலவீனம் அடைந்து அது காரணமாக வேலைகள் செய்ய முடியாமல்.

வீடும் வளவும் முறையான பராமரிப்பு இல்லாமல் அவர்களைப் போலவே சோபை இழந்து வீட்டு வேலைகள் செய்ய துணைக்கு ஆட்களை வைத்திருந்து அவர்களும் முழுமையாக நின்று பிடிக்காமல்.

எல்லா வேலைகளையும் பொன்னம்மாவால் செய்ய முடியாது? நாகநாதர்தான் என்ன செய்வார்.

பொன்னம்மா வழக்கம்போல இன்றைக்கும் கடைக்கும். சந்தைக்கும் போய்விட்டு கைகனக்க பைகளோடு வரும்போது.

கடவுளே எத்தினை நாளைக்குத்தான் இப்படி கஸ்டப்படுத்தப்

போறுய். போடுற குண்டுகள் எங்கடை தலையிலாவது விழக்கூடாதா.' மனம் புலம்ப.

''அம்மா- அம்மா. ''என்றது இளம் குரல் ஒன்று, திரும்பிப் பார்த்தால்.சின்னஞ்சிறு பையன் தன்னை விட பெரிய காற்சட்டை ஒன்றினை இறுக வரிந்து கட்டி பரட்டை தலையும் கறுத்துப்போன மேனியுமாக;

அம்மா என்றதால் இதயத்தின் அடித்தளத்தில் இருந்து பீறிட்டுப் பாய்ந்தது பாசமா? அம்மா என்ற அழைப்பையே கேட்டு எவ்வளவு காலம்?

ஆர்வத்துடன் அந்த சிறுவனை பார்த்த பொன்னம்மாவின் விழிகள் பரவசத்தில் ஆழ்ந்து போய் இருந்தன.

''பையை தாங்கோ அம்மா நான் கொண்டுவாறன். 'என்றுன் அத்தச் சிறுவன்.

கையை நீட்டிக்கொண்டு நின்ற அவனை மிகுந்த நேசமுடன் பார்த்த பொன்னம்மா.

''தம்பி ராசா இது உன்னலே தூக்கேலாது. எனக்கே பாரமாயிருக்கு. நீ எப்படித் தூக்குவாய், பையைத்தூக்காட்டியும் பரவாயில்லை. நீ என்னேடை வீட்டை வா தம்பி.'' என்றுள் ஆசையாக.

''இல்லை அம்மா நான் தூக்குவன தாங்கோ. உதைவிட பெரிய சுமை எல்லாம் நான் தலையில சுமக்கிறனுன்'' என்று விடாமல் சிறுவன் கேட்க.

'இல்லைராசா'உன்னல ஏலாது'. என கனிவுடன் சொன்ன பொன்னம்மாவின் பேசை சிறுவன் கேட்கவில்லை.

''தாங்கோ அம்மா நான் கொண்டுவாறன் எங்கட ஆச்சி முந்திச் சந்தைக்குப் போகேக்க நான் பின்னுல சுமைதூக்கிக் கொண்டு போறனுன். எனக்கு பழக்கம்.''

பொன்னம்மாவால் அவன் பிடிவாதத்தின் முன்னுல் நிற்க முடியாமல் இரண்டிலும் பாரம் குறைந்த ஒரு பையினை அவனிடம் கொடுக்க வேண்டியதாயிற்று.

இவரும் நடக்க தொடங்கினர்.

''ராசா, நீ எங்கை இருக்கிறனி.''

''நாங்கள் உதில கிட்டடியில இருக்கிறம். அப்பாவும் நானும் தங்கச்சியும் தான். முந்தி நாங்கள் கிளிநொச்சியில இருந்தனுங்கள். பிரச்சினையால இஞ்சை வந்து கொட்டில் போட்டு இருக்கிறம். அப்பா கூலிக்கு போறவர்-''

''அப்ப - அம்மா-''

''அம்மா-செத்துப்போனு'' என்றுன் வெகு நிதானமாக.

''என்ன-'' என்று அதிர்ச்சியுடன் கேட்ட பொன்னம்மா ஆதரவுடன் அவன் தலையை தொட்டாள்.

ஓமோம். அம்மாவும் ஆச்சியும் வீட்டில இருக்கேக்க சுட்டுப் போட்டாங்கள். அப்பாவும் நாங்களும் அம்ப வீட்டில இல்லை. ஆச்சியும் அம்மாவும் பாவம் என்று சொல்லும் போதே அவன் குரல் உடைந்து போய்விட்டது.

எதுவுமே பேசாமல் வந்த பொன்னம்மாவுக்கு சிறுவன் மேல் இருந்த பாசம் பன் மடங்காகியது.

''அப்பு - ராசா நீ என்னேடை இருக்கிறியே நான் நல்ல பட்சமாய் இருப்பன் பிள்ளைக்கு எல்லாம் வேண்டித்தருவன்-'' நெஞ்சை உருக்கும் அன்புடன் கேட்க.

''நான் மாட்டன். அப்பா விடமாட்டார். நான் இந்த பையை உங்கடை வீட்டில கொண்டு வந்து தந்து போட்டு திரும்பி போயிடுவன். எனக்கு நீங்கள் நடந்து போனது எங்கடை ஆச்சி மாதிரி இருந்தது. அதுதான் மனம் கேளாமல் ஓடிவந்தனுன்.''

பசுமையாக இருந்த செடியில் வண்ணமாய் ஒரு மலர் மலர்ந்தது போல வரண்டு போய் இருந்த பொன்னம்மாவின் மனதில் அந்த சிறுவன் சந்திப்பாலும் அவன் பேச்சாலும்- விபரிக்க முடியாத பாசம் தளிர் விட்டது.

''தம்பி- ராசா- நீ என்னேடை வந்து இருக்காட்டியும் அடிக்கடி வீட்டை வாறியே-''

''ஓமோம்'' என்றுன் சிறுவன்.

பொன்னம்மாவின் முகம் புன்னகையினுல் பொலிவு பெற்றது. இருவரும் பிரதான வீதியில் இருந்து வீட்டுக்கு போகும் ஒழுங்கையில் இறங்க.

ஒழுங்கையில் இருந்து வீதிக்கு விரைந்து வந்த சைக்கிள் ஒன்று எதுவித கவனமும் இல்லாமல் பையுடன் வந்த சிறுவனை மோதி சரிந்தது.

---

தனது பெஸ்ட் செல்லர்ஸ் என்ற புதிய நூலில் ஜான் சதர்லேண்டு என்னும் ஆசிரியர் உலகின் பிரபல நாவலாசிரியர்கள் எழுதிய புத்தகங்கள் எவ்வளவு விற்பனையாகியிருக்கின்றன என்று புள்ளி விபரம் கொடுத்திருக்கிறுர். 1980ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது இந்த எழுத்தாளர்களின் கூட்டு விற்பனை பின்வருமாறு:

| | |
|---|---|
| ஹெரால்டு ரொபின்ஸ்: | 200 மில்லியன் பிரதிகள் |
| அலிஸ்டர் மக்லீன் | 150 ,, |
| மிக்கி ஸ்பிலேன் | 150 ,, |
| ஃபிரடரிக் ஃபோர்சித் | 50 ,, |
| பார்பரா கார்ட்லண்டு | 100 ,, |
| ஜாக்விலின் சுசன் | 6 ,, (அமெரிக்காவில் மட்டும்) |
| பீட்டர் பெஞ்ச்லி | 10 ,, |

—நன்றி. முத்தாரம்

''ஐயோ- அம்மா-'' என்று விழுந்த அவன் தலையில் இருந்த பையும் சிதறியது.

''என்ரை அம்மாளே-'' என்று கதறிய பொன்னம்மா ஓடிப்போய் சிறுவனை அள்ளி எடுத்து அணைத்து.

''என்ன ராசா உடம்பு நோகுதே-'' என்று துயரத்துடன் தடவினாள்.

அவனுக்கு உடம்பில் காயம் ஏதும் இல்லை. என்றாலும் காலில் பலமான அடி காரணமாக நோ மாத்திரம் இருந்தது.

அதனை பெரிது படுத்தாமல் அடிவாங்கிய அதிர்ச்சியை சமாளித்துக் கொண்டு எழுந்து நின்றான்.

''அறுவான்களுக்கு கண் இருக்கோ- ஒழுங்கையால வரேக்க குதிரையில் வாறமாதிரி வாறாங்களே உவங்கள் நல்லாய் இருப்பாங்களே'' என்று பெரிதாக சத்தமிட்ட பொன்னம்மா.

சைக்கிளில் வந்து சிறுவனை அடித்தவனைப் பார்த்தால் அவன் மாயமாகிப் போய் இருந்தான். அடித்தது மாத்திரம் அல்ல இப்படி தலைமறைவாகியது பொன்னம்மாவுக்கு கோபத்தை உண்டாக்கியது.

கண்டபடி பேசிக் கொண்டு சிதறிய சாமான்களை பொறுக்க முனைய சைக்கிள் ஒன்று வந்து பொன்னம்மாவின் அருகில் நின்றது.



ஒருவர்: என்ன கல்யாண சீசன் எல்லே. உங்களுக்கு கொண்டாட்டம் தானே?

புரோக்கர்: இப்பத்தையான்கள் தாங்களே பேசி முடிக்குதுகள் பிறகென்ன?

கே. விமலா

## சீர்கெட்ட மனிதன்

சீதனம் வேண்டாம் என்கிறான்
மேடை தன்னில்.
நாலு பெண்களுடன் சேர்ந்து
கதைக்கிறான் சீதனம் வேண்டாம்
அவள் வந்தால் காணும் - என்று
வீட்டை முறையாக மாப்பிள்ளை
கேட்டு போக......
கட்டிய வீடும், வெட்டிய கிணறும்
காசு ஐம்பதாயிரம் வேணும் என்கிறான்
அந்த சீர்கெட்ட மனிதன்
பாவம் அது போதாது என்று
அவளுக்கு கூறை தாலி வாங்க
காசும் கேட்கிறான்
சீர் கெட்ட மனிதன் — இந்த
சீதனத்திற்கு பேயாய் அலைகின்றான்
இந்த பூமியில்
சீதனம் ஏன் என்று கேட்டால்
பாவம் அவன் என்ன செய்வான்
அவளை இல்லறத்திற்கு அழைத்து
சென்று வாழ......
இந்த சீதனம் வேண்டுமாம்
சீதனம் இல்லாவிட்டால்
சீர் கெட்டு விடுவானாம்
இந்த சீர் கெட்ட மனிதன் — இவன்
சிந்திக்கத் தொடங்கட்டும்...

- செல்வி: எம். ஞானேஸ் -

சிறுவனை சைக்கிளால் அடித்தவன் தானா? என்று பார்த்த பொன்னம்மா அமைதியான முகம் ஒளி பொருந்திய விழிகளுடன் இளைஞன் ஒருவனைக் கண்டாள்.

''என்னம்மா நடந்தது'' கேட்ட கேள்வியில் அன்பும் ஆதரவும் பணிவும் இருந்தது.

அந்தக் கேள்வியில் தன்னை இழுத்த பொன்னம்மா தன்னிலை மறந்து மனம் உருகியவாறு நடந்ததை சொன்னாள். சொல்லி முடிக்க கண்களில் கண்ணீரும் வந்து விட்டது.

''சரி அம்மா கவலைப்படக் தேங்கோ சில ஆட்கள் இப்படித்தான். யோசினை இல்லாமல் பொறுப்புணர்ச்சி இல்லாமல் நடக்கிறாங்கள்.'' என்று சொல்லிக் கொண்டு விரைவாக சிதறிப் போய் இருந்த சாமான்களை பொறுக்கி பையினுள் வைத்தாள்.

பிறகு இரண்டு பைகளையும் சைக்கிளில் கொழுவிக் கொண்டு'

''வாங்கோ அம்மா போவம்.'' என்று சொல்லிக் கொண்டு சைக்கிளை எடுத்தான்.

இளைஞன் சைக்கிளை உருட்டிக் கொண்டு துணைக்கு வர சிறுவனும் பொன்னம்மாவும் நடக்க ஆரம்பித்தனர்.

வீடு வரும்வரை யாருமே பேசிக் கொள்ளவில்லை. வெளி விருந்தையில் இருந்த நாகநாதர் மனைவியுடன் சிறுவனும் இளைஞனுமாக இரண்டு பேர் கூட வருவதை கண்டு ஆச்சரியப்பட்டு எழுந்து வந்தார்.

'என்ன விஷேசம்'' கேள்வியில் பதட்டம் இருக்கவில்லை. ''அதெல்லாம் பிறகு சொல்லுறன். பிள்ளையளோடை கதையுங்கோ'' என்று நாகநாதரைப் பார்த்து உற்சாகமாக சொன்ன பொன்னம்மா மேலும்.

''வாங்கோ தம்பியள் இதில் இருங்கோ ஒரு நிமிஷத்தில வாறன்.'' எனச் சொல்லிக் கொண்டு வீட்டினுள் புகுந்தாள்.

நாகநாதர் அவர்களை வீட்டின் ஹாலிற்குள் அழைத்துச் சென்று இருக்கச் செய்து அன்புடன் கதைக்க அவர்கள் கூச்சத்துடனும் ஒருவித அச்சத்துடனும் காணப்பட்டார்கள்.

வீட்டினுள் புகுந்த பொன்னம்மா கோப்பி கிளாஸ்களுடன் வெளியே வந்து.

''தம்பிமார்- இண்டைக்கு மத்தியானம் சாப்பிட்டு தான் போக வேணும்.'' என்று சொல்ல.

''இல்லையம்மா நான் அவசரமாய் போகவேணும். இன்னுமொரு நாளைக்கு வாறன்.'' என்றான் இளைஞன்.

''அப்பிடி சொல்லக் கூடாது தம்பி- கட்டாயம் நீங்கள் சாப்பிட்டுத்தான் போக வேணும். நீங்கள் எங்கடை பிள்ளையள் மாதிரி உங்களைப் போல பிள்ளையளோடை நாங்கள் சந்தோஷமாக சிரித்து கதைச்சே எவ்வளவு காலமாய் போச்சு.'' என்று வேதனையோடு பொன்னம்மா சொன்னதை மௌனமாக கேட்ட இளைஞன்.

''ஓம் அம்மா நான் உங்கடை பிள்ளை மாதிரிதான் ஆனால் இப்ப ஒரு அவசர அலுவல் இருக்கு கட்டாயம் போக வேணும்.''

## விசிறிகள்

அமெரிக்காவில் 1933ல் ருடால்ப் வாலண்டினோ என்பவன் மிகப்பிரபலமான கதாநாயகன்.

கன்னியரும் காளையரும் அவனைப் பார்ப்பதையே ஒரு பாக்கியம் என்று கருதினார்கள்.

வாலண்டினோதான் முதன் முதலாகக் கிருதா (சைட்பர்ண்) வைத்துக் கொண்டான். வாலண்டினோவின் கிருதாவை மட்டுமல்ல, ஆடை அலங்காரம் அனைத்திலும் அவனை அப்படியே பலரும் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

பெரியவர்கள் சிலர் இந்த ரசிகர்களைப் பார்த்து **'Fanatics'** அதாவது 'வெறியர்கள்' என்று கூறினார்கள்.

அமெரிக்கர்களுக்கு வார்த்தைகளைச் சுருக்கிச் சொல்வதில் ஓர் ஆசை.

**'Fanatics'** என்ற வார்த்தையைத் தமாஷாக ரசித்த மாணவர்கள் அந்த வார்த்தையைச் சுருக்கி **'Fan'** என்றார்கள்.

தமிழில் இந்த **'Fan'** விசிறி என்று மொழி பெயர்க்கப்பட்டு விட்டது.

—வண்ணப் பூக்கள் என்ற நூலில்
இயக்குனர் ப. நீலகண்டன்

பொன்னம்மாவின் முகம் சோபை இழந்தது. நாகநாதரும் வேதனையுடன் அவர்களைப் பார்த்து.

''தம்பி. எங்கடை பிள்ளையள் எல்லாம் வெளியாலே எத்தினையோ பேரப்பிள்ளையளும் இருக்கு. அதுகளின்ரை படங்களைப் பார்த்துதான் ஆசையாய் கொஞ்ச வேண்டியிருக்கு. எங்கடை மன வேதனைகளை இந்த வயது போன நேரத்தில யாரிட்டை சொல்லி அழுகிறது தம்பி. என்ரை மூத்த பேரனுக்கு இந்த சின்னவனின் வயதுதான் இருக்கும். நேரில பார்த்து பாசத்தை பொழிய எவ்வளவு விருப்பமாக இருக்கும்'' என்று சொல்லி சிறுவனை ஆதரவுடன் பார்த்தார்.

எல்லாவற்றையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

இளைஞன் மெதுவாக புன்னகைத்தான்.

''அம்மா, ஐயா வெளியால இருக்கிற உங்கடை பிள்ளையள் உங்கடை பாசத்தை நினைத்து வேதனைப் படுகினமோ என்னவோ. ஆனால் என்னைப் போன்றவர்கள் சொந்த மண்ணிலேயே- தாய் தகப்பனை வீட்டு பிரிந்து அவர்களின் ஆழமான அன்பினை இழந்து அந்த இழுப்பினால் உண்டாகும் வேதனைகளை எங்களுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு எங்கள் இலட்சியங்களுக்கா செயல்பட்டுக் கொண்டு இருக்கிறம். நான் என்ரை அம்மா அப்பாவை பார்த்தே எவ்வளவுகாலம். ஆனால் அவர்கள் எல்லாம் பார்க்க கூடிய தூரத்திலதான் இருக்கினம். எனக்கு அவையளோடை இருக்கத்தான் விருப்பம்- அம்மாவின் அன்புக்கு ஈடு இல்லை. அப்பாவின் ஆதரவான பேச்சுக்கு. நிகராக எதையும் பதிலீடு செய்யேலாது.

ஆனால் என்ன செய்யலாம் எல்லாப் பாசத்தை விட எங்கள் லட்சியங்கள் மேலானவை. அதனால தான் சொல்லுறன் எங்களைப் போல ஆட்களிடம் நீங்கள் பாசம் வைக்கவேண்டாம். நான் இன்றைக்கு வரலாம், நாளைக்கு நான் வருவேனா அல்லது எங்கே என் உயிர் பிரியுமோ தெரியாது.'' என்று அவன் சொல்லும் போதே விழியோரங்களில் நீர் அரும்பு கட்டியது.

நாகநாதரும் பொன்னம்மாவும் அழுதே விட்டார்கள். ஏன் அந்த சிறுவனும் தான்.

★ நகைச்சுவை ★

# இந்தியா போகாமல் இருப்பேனா?

★ பொ. சண்முகநாதன் ★

**நான்** இந்தியா போக வேண்டும் என்று அதற்கான ஆயுத்தங்களில் ஈடுபட்டு வந்ததெல்லாம் இவர்களுக்கு-அதாவது நான் பின்னால் குறிப்பிடப்போகும் நபர்களுக்கெல்லாம் எப்படித் தெரிய வந்தது? காதும் காதும் வைத்தது போல் அவ்வளவு இரகசியமாக காரியமாற்றி வந்தும் சங்கதி எப்படி இவர்களுக்கெல்லாம் அவுட்டானது?

இந்த வகையில் எனக்கு முதன் முதலில் வாழ்த்துக் கூற வந்த பெருமைக்குரியவர் அடுத்த வீட்டு அருணாசலம்தான். வந்தவர் வாழ்த்துடன் மட்டும் நின்று விட்டால் போதாதா?

''இந்தியா என்றால் தமிழ் நாட்டுக்குத்தானே?'' வாழ்த்துரையைத் தொடர்ந்து அவர் கேட்டார்.

''வேறென்ன? ஆல் இந்தியா என்று நினைத்தீர்களா?'' நான் திருப்பிக் கேட்டேன்.


''அது தான் நல்லது. சென்னைக்கு நீங்கள் அவசியம் போக வேண்டும். அங்கு பார்க்க வேண்டியவை நிறைய இருக்கின்றன. என்றாலும் விமானச் சீட்டு எடுக்கும் போது கொழும்பு திருச்சி என்றுதான் எடுங்கள்.''

அவர் முடிப்பதற்கு முன்னர் நான் கேட்டேன். ''ஏன் திருச்சியில் உங்களுக்கு ஏதாவது அலுவல் இருக்கிறதா?''

''அப்படிக் கேட்டால்! நானா பேர்கப் போகிறேன்? உங்களுக்கு உதவலாம் என்று வந்தால் நீங்கள் அப்படிக் கேட்கிறீர்களே...'' என்ற அருணாசலம் தொடர்ந்து சொன்னார். ''கொழும்பு சென்னை விமானச் சீட்டுக்கு நானூறு ரூபா வரை அதிகப் பணம் கொடுப்பதை விட திருச்சி சென்று அங்கிருந்து ஐம்பது ரூபா பஸ் கட்டணத்துடன் சென்னை செல்லலாமே...அதனால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல பணம் மிச்சமாவதுடன் திருச்சியையும் தரிசித்ததாக முடியும்.''

''ஓகோ, அதற்காகச் சொல்கிறீர்களா?''

''வேறெதற்குச் சொல்லுகிறேன்'' என்றவர் தொடர்ந்து உற்சாகத்துடன் சொன்னார். 'திருச்சியில் ஆனந்தா லாட்ச், மனோகர் லாட்ச் என்று சில லாட்சுகளின் விலாசங்கள் தருகிறேன். அங்கு என்னுடைய பெயரைச் சொன்னாலே 'ஓகோ' என்று உங்களுக்கு வரவேற்புக் கிடைக்கும்.''



''லாட்சுக்கு வாடகைகூட கொடுக்க வேண்டி இராதா?''

எனது கேள்விக்கு அவர் சிரித்து விட்டுச் சொன்னார். 'நாளொன்றுக்கு ஒரு தனி நபருக்குப் பத்து ரூபாதான். கூடக் கேட்டால் என்னைப் பற்றிச் சொல்லுங்கள். அங்கிருந்து ஒரு ரூபா இருபது காசுடன் ஸ்ரீரங்கத்துக்கு பஸ்ஸில் போய் வரலாம். 'உச்சிப் பிள்ளையார் கோவில் கொண்ட இடம் திருச்சி மலையினிலே...' என்ற பாட்டுக் கேட்டிருப்பீர்களே, அந்தப் பாடல் பெற்ற மலைக்கோட்டைப் பிள்ளையார் கோவில் லாட்சிலிருந்து கூப்பிடு தூரத்திலேதான் இருக்கிறது.''

சும்மா சொல்லக்கூடாது அருணாசலம் எனக்கு எவ்வளவு தூரம் பல அரிய தகவல்களைத் தந்து உதவியிருக்கிறார். பக்கத்து வீட்டில் இந்தியாவைப் பற்றி இத்தனை தெரிந்த ஒருவரை வைத்துக் கொண்டு வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதையாக... அவருக்கு நான் நன்றி கூறினேன்.

''வெறும் நன்றியுடன் நின்று விடப் போகிறீர்களா?'' அவர் அப்பொழுதுதான் விசயத்துக்கு வந்தார்.'' அந்தப் பிள்ளையார் கோவில் வீதியில் சிங்காரத் தோப்புக் கோணார் வீதி என்று பெயராக இருக்கவேணும். ஒரு காதி கதர் வஸ்திராலயம் இருக்கிறது. அங்கே எனக்கு இரண்டு 'ஓம் முருகா' சால்வை வாங்கி வாருங்கள். ஒன்று மஞ்சள் நிறமாகவும் மற்றது காவி நிறமாகவும் இருக்கட்டும்.''

''உங்கடை பொரைச் சொன்னால் அவர்கள் அவைகளைத் தருவார்களா?'' நான் சிரிக்காமலே கேட்டேன்.

''அவைகளுக்கு எவ்வளவு இலங்கைப் பணம் வருமோ அதை அப்புறம் நான் இங்கு தருவேன்.''

ஓம் முருகா, அருணாசலத்துக்குச் சாமியாராகப் போகிற வயதிலும் எவ்வளவு கஞ்சத்தனம் பார்த்தீர்களா? சால்வைகளை அவர் கையில் ஒப்படைத்த பின்னர்தானாம் என் கையில் பணம் வருமாம்.

''இந்தியாவுக்குப் போகப் போகிறீர்களாம், மெய்தானே?'' குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்

தேன், புடைவைக் கடைப் பேரம்பலம் வந்திருந்தார்.

"அப்படி ஓர் ஆசைதான். ஆண்டவன் சித்தம் எப்படியோ? திருவருள் கைகூடினால் போகலாம் என்றுதான்..."

"திருவருள் நிச்சயம் உங்களுக்குக் கைகூடும்" என்று 'திருவருள்' ஏதோ தனது கட்டுப்பாட்டுக்குள் தான் இருப்பது போலவும் பழனி ஆண்டவரே ஆசீர்வதிப்பது போலவும் அவர் சொன்னார். சென்னையில் மண்ணடியிலுள்ள மஜ்பா லாட்சில் தங்குவது உங்களுக்கு வசதியாகவிருக்கும். அந்தப் பகுதி கொஞ்சம் சுகாதாரக் குறைவான இடம் என்றாலும் வேறு பல சகாயங்கள் இருக்கின்றன. சங்குக் கம்பெனி' கிப்ஸ் கம்பெனி, ஜே. பி. எம். எல்லாமே பக்கத்தில்தான் இருக்கின்றன..."

"நான் இந்தியா போகின்ற முக்கிய காரணம்..." நான் குறுக்கிட்டேன்.

"முக்கிய காரணம் ஒருபுறம் இருக்கட்டும். இரண்டாம் மூன்றும் பட்ச அலுவல்களாக இதையும் கவனித்தால் நான் பயணம் பயனுள்ளதாக அமையும். வெறுமனே கையை ஆட்டிக் கொண்டு போய் வருவதில் என்ன லாபம் இருக்கிறது "என்றவர் தொடர்ந்தார்" எல்லாவற்றுக்கும் மேலாக சென்றல் பஸ் நிலையத்துக்கு இந்த லாட்சிலிருந்து நடந்து கூடப் போகலாம். சென்றல் பஸ் நிலையத்திலிருந்து எங்கு வேண்டுமானாலும் போகலாம்,



"போகிறது இருக்கட்டும் நீங்கள் வந்தது?" என்று கேட்டேன். சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது போல பேரம்பலம் காரணமில்லாமல் வந்திருக்க மாட்டாரே!

"வந்து... கிப்ஸ் கம்பெனி பற்றி மூன்று பந்திகளுக்கு முன்னர்

## எதிர்பார்ப்புகள்..

காலை இளம் தென்றலது தவழ்ந்துவர
அழகு கொஞ்சும் மலர்கள் எல்லாம் மலர்ந்தாட
பறந்தாடும் பறவைகளோ இனிய இசை பொழிய
இனியவளே இளையவளே உன் வரவை
பார்த்து அன்றே என் வாசல் காத்திருக்கு
காலையில் நீ வரும் சேதியை
கருங் காக்கை வந்து கக்கியது
கரு விழிகள் அசைந்தாடும் காவிரியில்
நீராடி மனதைக் கவர்ந்த மலர் அதை
கூந்தலிற் சூடி நீ வரும் காட்சியை
கனவாய் நான் கண்ட நாள் இன்று
என் முன் நிழலாடுது
நிஜமாக இன்று நீ வருவாய்
நாம் கொண்ட நட்பது காலம் பல மாறினாலும்
கலைந்தோடிடாமல் காவியம் ஆகிட கண்ணே
உன் வரவை காத்திருப்பேன்.

**ஆனந்தி**

சொன்னேன் அல்லவா? அது லாட்சுக்குப் பக்கத்திலேதான் இருக்கிறது. யாரைக் கேட்டாலும் காட்டுவார்கள். நூற்றி நாற்பது ரூபாவுக்கு இங்கு விற்கப்படும் கிப்ஸ் சாரம் ஒன்று அங்கு நாற்பது ரூபாவுக்கு வாங்கலாம்..."

"அது எங்கடை பணத்தில் தொண்ணூறு ரூபாவாகிறதே. சரி, உங்களுக்கு ஒரு சாரம் வேண்டும். அவ்வளவு தானே.?

ஒரு சாரத்துக்கு மினைக்கெட்டு உங்களிடம் வருவேனா? ஒரு டசின் வேண்டும்."

எனக்குத் தலையைச் சுற்றியது. ஒரு கழுதைச் சுமை எனது தோளை அழுத்துவது போலிருந்தது. நான் எடுக்கப் போகின்ற வெளி நாட்டுச் செலாவணியில் இதற்கெல்லாம் பணம் ஒதுக்கினால் எனது திட்டங்கள் எல்லாம் அரோகராத்தான் என்று கவலைப்பட்டேன். எனது மயக்கத்தையும் தயக்கத்தையும் புரிந்து கொண்ட பேரம்பலம் 'அந்த இரகசியம் தனக்கு மட்டும் தான் தெரியும்' என்பது போல் 'அதை' ச் சொன்னார்.

"நான் குடை, ரோச் லயிட், சவுக்காரம், கசற் போன்ற பொருட்களை வாங்கித் தருகிறேன். இவைகளை இங்கு எவ்வளவு பணத்துக்கு வாங்கினேனோ ஏறக்குறைய அவ்வளவு இந்தியப் பணத்துக்கு நீங்கள் அவைகளை அங்கு விற்கலாம் அந்தப் பணத்தில்..."

இவருடைய கதையைப் பார்த்தால் நான் இந்தியாவுக்குப் போனதும் சென்னை திருச்சித் தெருக்களில் இறங்கி 'குடையோ குடை' சோப் வாங்கலையோ சோப்' என்று வியாபாரம் செய்யவேண்டும் போலிருந்தது.

பேரம்பலம் எனது தடுமாற்றத்தை நீக்குவான் வேண்டித் தொடர்ந்து பேசியதாவது.

"விற்கலாம் என்றதும் வியாபாரம் என்றெண்ணி பயந்து வீட்டீர்களாக்கும். சென்னை திருச்சியில் நீங்கள் எந்த லாட்சில் தங்கியிருந்தாலும் இவைகளைப் போட்டி போட்டுக்கொண்டு வாங்குவதற்கு உங்களைத் தேடியே ஆட்கள் வருவார்கள். வேண்டுமானால் நீங்களும் உங்களுக்கென்று இப்படிச் சில பொருட்களைக் கொண்டு போக

லாம். அன்னிய செலாவணியாக பிரயாணிகள் காசோலை, டொலர் நோட்டுக்கள் எடுத்துச் செல்வதை விட இவைகளால் லாபம் இருக்கிறது.''

என்ன இருந்தாலும் பேரம்பலம் ஓர் அசல் வியாபாரி என்பதைக் காட்டிவிட்டார். இல்லாவிட்டால் இந்தியாவிலிருந்து வரும்போது மட்டுமல்ல, இங்கிருந்து போகும்போதுகூட இப்படி ஒரு சுமையை என் தோள்மீது சுமத்த ஒருப்படுவாரா?

இன்று என்னைத்தேடி வந்த நடராசனிடம் நான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

''அது சரி... நான் இந்தியாவுக்குப் போகப்போகிற சங்கதி உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'

''என்மனைவிதான் சொன்னா...' நடா சொன்னான்.

## தண்ணீரின் தாகங்கள்

### சௌமினி

நாங்கள் மெழுகுவர்த்திகளை உற்பத்தி ஆக்குகின்ற
தொழிற்சாலைகள்!
இந்தமண்ணிற்கு ஒளி கொடுக்க உருகிப்போகும்
கண்ணின் மணிகளை பெற்றெடுத்தவர்கள்!
ரத்தத்தையே பாலாய்க் கொடுத்து
அணைத்து வளர்த்து
இன்று
ரத்தத்தையே இம்மண்ணிற்கு நீர் பாய்ச்சும்
செல்வங்களுக்காக
ரத்தத்தையே கண்ணீராய் சொரிகின்ற
மழைமேகங்கள்!
பேரினவாதப் பயிர்வளர்க்க
மனித உரங்களையே
தயாரித்துத் தருகின்ற
ரசாயன கூடங்கள்!
தண்ணீர்த் தடாகங்களையே
பிரசவித்து விட்டு
தாகத்தினாலே வரண்டு சுருள்பவர்கள்!
அதிர்ச்சி தரும் சேதியினைக் கேட்டு
நின்று விடுவதற்காகவே
துடித்துக் கொண்டிருக்கும்
இதயத்துடன்
மரணத்தின் நிழலில்
இளைப்பாறும் நடைப்பிணங்கள்!

பூமியைப் பானையாக்கி
சோறொன்றை ஆக்கி
உந்தன்
பெரும்பசி தீர்க்க என்று
தாயரின் வயிற்றிலெல்லாம்
பெருநெருப்பொன்றை
மூட்டுகின்றாய் காலதேவனே?

''நான் அவவுக்குச் சொல்லவில்லையே...''

''பேரம்பலம் பெண்சாதி அவவுக்குச் சொல்லியிருக்க வேணும்.''

''பேரம்பலம் பெண்சாதிக்கு எப்படித் தெரிந்தது?''

''அருணாசலம் பெண்சாதி அவவுக்குச் சொல்லியிருக்கவேணும்.''

''அருணாசலம் பெண்சாதிக்கு...?''

உங்கள் மனைவி சொல்லிருக்க வேணும்.''

தகவல் பரிவர்த்தனையின் மர்மம் எனக்கு இன்றுதான் தெரிய வந்தது. என் மனைவி உதற்காக இப்படி என்னைப் பழிவாங்க வேண்டும்? ஒருவேளை தன்னை விட்டுவிட்டு நான் தனியாக இந்தியா போவதா என்ற கோபமாயிருக்குமா?

வருகிறவர்கள் எல்லாரும் முதலில் எனக்கு உதவுவது போன்ற பெருநோக்கில் சிலவற்றைச் சொல்லுவார்கள். பின்னர் தாம் வந்த நோக்கத்தை தமது வேண்டுகோளைத் தெரிவிப்பார்கள். அந்த வழக்கத்துக்கு நடராசன் மட்டும் விதிவிலக்கா?

''இந்தியா போகின்ற உங்களுக்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியம் பற்றியும் அதன் அரிய தொண்டுகள் குறித்தும் சில வார்த்தைகள் கூற விழைகின்றேன்...''

இப்படி ஆரம்ப உரையாற்றியவனைப் பார்த்து நான் சொன்னேன். ''சில வார்த்தைகள்தானே, சரி சொல்லுங்கள்.,,

''இந்த வளர்ச்சி வாரியம் பல சுற்றுலா நிகழ்ச்சிகளை நடத்திவருகிறது. நீங்கள் மண்ணடியில்தானே தங்கப்போகிறீர்கள். அங்கிருந்து திருவள்ளுவர் பஸ் போக்கு வரத்து நிலையம் அரைமைல் தூரமளவில் தான் இருக்கிறது. அங்கு சுற்றுலாக்களுக்கான சீட்டுக்களைப் பதிவு

செய்து கொள்ளலாம். இந்தச் சுற்றுலாக்கள் மூலமாக குறைந்த கட்டணத்தில் பல இடங்களை வழிகாட்டியின் துணையுடன் சொகுசுபஸ்சில் சென்று பார்வையிடலாம். உதாரணமாக மாமல்லபுரம் சுற்றுலாவை எடுத்துக்கொண்டால் இதற்கு ஐம்பது ரூபாதான் கட்டணம். இதன் மூலமாக காசிஞ்புரத்திலுள்ள வரலாற்று முக்கிம்வாய்ந்த பல ஆலயங்கள் திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் முதலைப்பண்ணை முதலிய பல இடங்களுக்கு அழைத்துச்செல்லுகிறார்கள். இச்சுற்றுலாவின் ஓர் அம்சமாக காஞ்சிபுரத்திலுள்ள ஒரு பிரபல பட்டுப்புடைவை விற்பனை நிலையத்துக்கும் எம்மை அழைத்துச் செல்கிறார்கள். அங்கு நாம் சலுகை விலையில் புடைவைகள் வாங்குவதற்கும் வசதிசெய்து தருகிறார்கள்...''

நடராசன் தான் வந்த நோக்கத்தை வெளியிடப் போகின்ற அந்த உச்சக்கட்டம் வந்துவிடவே நான் உசாரானேன்.

''எனக்கும் ஒரு பட்டுப்புடைவை...'

இவர் எப்போது புடவை கட்ட ஆரம்பித்தார் என்ற சந்தேகத்துடன் ''எனக்கு அதிலேல்லாம் அனுபவமில்லை...' என்று தயக்கத்துடன் சொன்னேன்.

''என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?' என்றவர் மேலும் தொடர்ந்தார். ''நீங்கள் உங்கள் மனைவிக்கும் அவசியம் அங்கு ஒரு புடைவை எடுங்கள். அதேபோல் இன்னொரு கலரில் அல்லது இன்னொரு டிசைனில் எனக்கும் ஒன்று... அத்துடன் எனக்கில்லாவிட்டாலும் நீங்கள் உங்களுக்காவது அங்கு ஒரு பட்டு வேட்டி எடுங்கள்... இதில்லாவிட்டால் இந்தியாவுக்குப்போனதில் என்ன பயன் இருக்கப் போகிறது? சுற்றுலாவின்போது பல லேடிசும் உங்களுடன் கலந்துகொள்ளப் போவதால் சாரி சிலெக்பண்ணுகிறதில் நீங்கள் அவர்களின் உதவியையும் நாடலாம். என்ன நான் சொல்லுவது புரிகிறதுதானே... வேறென்றுமில்லை, எனக்கு ஒரே ஒரு பட்டுப் புடைவை...''

சிவகாமியின் செல்வன்- காமராசர் பாணியில் அவருக்குச் சொன்னேன் ''ஆகட்டும் பார்க்கலாம்...'

இந்தியா போகாமல் இருப்பேனா? போகத்தான் வேண்டும், ஆனால் ஏற்கனவே திட்டமிட்டவாறல்ல, திடீரென்று ஒரு நாள் யாருக்குமே சொல்லிக் கொள்ளாமல்- மனைவிக்குக்கூட 'கொழும்பில் ஓர் அலுவல்' என்று உச்சிப் போட்டு போய்வரவேணும். ஏற்கனவே இந்தியா போய்வந்த அருணாசலமும் பேரம்பலமும் நடராசனும் எனக்குச் சொல்லிவிட்டா அப்படிப் போய் வந்தார்கள்? என்னவாக இருந்தாலும் சும்மா சொல்லக்கூடாது அவர்களது யோசனைகள் அருமையானவைகள் தாம். அவை நிச்சயம் அப்போது எனக்குக் கைகொடுக்கத்தான் போகின்றன. ●

# விரைவாயெழு

## வளவை வளவன்

வழமைகள் வழமைக்கு
திரும்பாத வழமைகள்
வழமையாய் போன மண்ணில்
அழுகுரல் மேவாத
அமைதியாம் ஓரிடம்
இலையென்று ஆனபின்னர்

தொழுதிடும் கைகளும்
துதிபாடும் கூட்டமும்
தொடர்வதில் சுகமேதடா?
அழுவதற் கென்றேதான்
நாம் பிறந்திட்டதாய்
எண்ணுவோன் அவனிமூடன்

கழுதைக்கும் கனைக்கின்ற
உரிமை இருப்பதை
உணராத மனிதகுலமே!
முழுமைக்கும் நாமென்ற
கீழ்மையில் தானூறி
அழிகின்ற மனிதமனமே!

சோற்றுக்காய் சேற்றினில்
மூழ்கின்ற மனிதர்க்கும்
சோகமே பதிலாவதா?
ஆற்றினில் மீனுக்காய்
வலைவீசி நிற்பினும்
அவன் கூடப் படுபாவியா?

கூற்றுவன் என்றதோர்
காலனுக் கேற்புடைக்
காலங்கள் இங்கு சரிதான்
மாற்றுவோ மென்றெழும்
மானிடர் கையோங்க
மறுக்கின்ற மனித குலமே

மானிடம் பேணிடும்
மாவழி தனில் நாளும்
ஏகிட வழி தேடுவாய்
மானிடம் மண்ணிடை
வாழ்வது திண்ணமே
வழியுண்டு விரைவாயெழு!

# காலச் சுழல்



யாழூர் - அழகராஜன்

'டும்!'

அந்தப் பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டது போன்ற பிரமை ஏற்பட்டது. எனினும் மக்கள் அதுபற்றிக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வெடி ஓசைகளும் அவர்களின் காதுகளுக்கு நன்கு பழக்கப்பட்டிருந்தன.

நகரத்துக்கு வெகு அண்மையில் உள்ள அந்நப் பகுதியில் ஒரு மூலையில் ஓலைக்குடிசையொன்றில் 'அன்றாடங் காய்ச்சி''யான பார்வதி நகரத்துக்கடையொன்றில்நாட்கூலிக்கு வேலைசெய்யும் தன் மகன் மணியனுக்கு காலை உணவுக்காக 'குறுணல் கஞ்சி' காய்ச்சிக் கொண்டிருந்தவள்... அந்த' டுமீல்' ஓசையைக் கேட்டு,

''உந்தக் குறுக்காலை போவான்களை எங்கட ஊர்களில கொண்டு வந்து போட்டதாலை எங்களைப் போல ஏழை பரதேசியடை வயித்தில தான் மண். இண்டைக்கு ரவுண் கடையளெல்லாம் பூட்டியிருக்கும். சனங்களும் வீட்டிலை முடங்கிப் போயிடும். சாமான் சக்கட்டும் வாங்க ஏலாது... கிடந்த ஒரு சொட்டு குறுணியிலையும் கஞ்சி காய்ச்சியாச்சு... எடே... மணியன்! இண்டைக்கு நீ ரவுணுக்கு வேலைக்குப் போக வேண்டாம். வீட்டோட கிட... பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை .. வீணாப் போய்ச் சாக வேண்டாம் ..'

உரத்தகுரலில், பஞ்சத்தையும் பாசத்தையும் காட்டி முணுமுணுத்தாள்.

அவளின் முணுமுணுப்பினைக் கேட்டுக்கொண்டிருந்த மணியனுக்கும் சூடு கிளம்பியது.

''எணேய்!... ஆச்சி... உனக்கென்ன விசரே! உந்நக் குண்டுச் சத்தமெல்லாம் இப்ப எங்கட ஆக்களுக்கு மழை பெஞ்சு விட்ட மாதிரி... இப்ப ஓய்ஞ்சு போயிடும்... சனம் ரவுணுக்கு வரும்... நீ ஏன் நச்சுப் பல்லி மாதிரி விடிய வெள்ளணத்தோடை உன்ர பல்லவியைத் துவங்கி விட்டாய்...'

-அவனது பதில் பல்லுப் படாத குறையாக இருந்தது பார்வதிக்கு.

''உந்த நாளையப் பிள்ளையளுக்கு நல்லது எதுபொல்லாதது எதுஎண்டு சொன்னாலும் விளங்காது. வெள்ளைக்காரன் கண்டுபிடிச்ச துவக்கெல்லாம் இப்ப விளையாட்டுச் சாமான் மாதிரி வந்துட்டுது. ஆர் எவர் எண்டு பார்க்காமல் உயிர்களைக் குடிக்குது... நீ என்னடா எண்டா... ரவுணுக்குப் போய்ச் சூடுவாங்கிச் சாகிறன் பந்தயம் பிடி எண்டு நிக்கிறாய்... எனக்கென்ன நான் நல்லதுக்குத்தான்சொல்லுறன்...ஏதோ யோசிச்சு நடந்தாச் சரி... காலத்தையும் அனுசரிச்சுத்தான் நாங்களும் நடக்க வேணும்''.

''ஆச்சி!... நேற்றும் ஒரு நேரம் தான் வடிவாச் சாப்பிட்டது. இண்டைக்கும் காலமை இந்தக் கஞ்சிதான் தஞ்சம்... வேலைக்குப் போனால் தான் ஏதாவது கஞ்சியைக் கூழை நாளைக்கும் குடிக்கலாம்... கொஞ்சம் ரவுணிலை போய் வரக்கூடிய வசதி இருக்கைக்குள்ளையே ஏதாவது உழைக்க வேணும்... சில வேளை

நாளைக்குப் பிரச்சினை இன்னும் கூடினு ரவுண் பக்கமே போதேலாது. ...பட்டினியாலே சாகவேண்டிவரும். ...அப்பிடிப் பட்டினியாலே போற உயிர் ஆமியின்ர துவக்குக் குண் டாலே போனு என்ன?...''

மணியன் ஏழ்மையின் பாதிப் பால் அளந்து கொட்டினுன்.

பார்வதியைக் கண்டதும்-

''என்ன பார்வதி!... ரவுணுக் குள்ளை ஒரே வெடிச் சத்தமா இருக்கு... என்னவாம் நடக்குது?'' என்று பார்வதி தன்னிடம் விசா ரிக்க வருகிருள் என்று தெரிந்தும் தெரியாதவர் போல் கேட்டார்.

| | | | |
|---|---|---|---|
| மௌனம் | உலகப் | பொது | மொழி |
| மயக்கம் | உலகப் | பொது | நிலை |
| செல்வம் | உலகப் | பொதுத் | தேவை |
| தெய்வம் | உலகப் | பொதுத் | தோற்றம் |
| அடக்கம் | உலகப் | பொதுக் | குணம் |
| ஆசை | உலகப் | பொதுத் | துயரம் |
| பெண் | உலகப் | பொதுக் | கவர்ச்சி. |
| ஆண் | உலகப் | பொது | எழுச்சி. |

எல்லாம் பொதுவான துயரம் காதல்
ஆடை கட்டிய பெண்ணை ரசிப்பது காதல்
அவளை நிர்வாணமாக்கிப் படிப்பது கவிதை
அவளை பிணமாக்கிப் பார்ப்பது தத்துவம்.

அர்த்தமுள்ள இந்துமதம் நூலிலிருந்து
**சி. சண்முகதாஸ் -**

என்னதான்அவன்அளந்துகொட் டினுலும் உள்ளூர அவன் மனம் ரவுண் நிலைமையைச் சற்றுச் சிந்திக் கவே செய்தது. உள்ளம் என்ன தான் நியாயங்களை சாதக பாதக மாக உணர்த்தினுலும் உடலில் உண்டாகும் பசிக்கு சாதக-பாத கங்களை உணர்ந்து நடக்கின்ற சக்தி இல்லையே!

-மணியனின் தீர்மானம் உறுதி யாயிற்று! ''இன்று ரவுணுக்கு போயே தீருவது'' என அவன் முடி வெடுத்தான்.

பார்வதி கஞ்சி காய்ச்சி முடிந்து அடுத்த வளவு மரியார் அண்ண னிடம் ரவுண் நிலைமை பற்றி அறி யச் சென்ருள். மரியார் அந்தப் பகுதியில் உள்ள குடிசை வாசி களுள் கொஞ்சம் மூத்தவர். அத் தோடு அவர் வாக்கு அந்தப் பகுதி மக்களுக்கு தேவவாக்கு. அவர்தான் அங்கு சற்றுஅறிவாளியாக மற்றவர் களால் மதிக்கப்படுபவர்.

''மரியார் அண்ணை!... எனக் குத் தெரிஞ்சா நான் ஏன் உங்க ளட்டை வாறன்...ஊரில நடக்கிற நடப்புகளெல்லாம் உங்களுக்குத் தானே தெரியும்... என்னவாம் நடக்குது?...''

மரியாருக்கு உச்சி குளிர்ந்தது. தானே இந்நாட்டுப் பேரறிஞன் என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டார். அந்த எண்ணத் துடன் வாயிலிருந்த சுருட்டை எடுத்து ஒரு துப்புத் துப்பிவிட்டு மீண்டும் வாயின் மறு பக்கத்தில் அதை வைத்தவாறே,

''இஞ்ச பார் பார்வதி! ரவு ணுக்குள்ள ஆமி பூந்துட்டுதாம். இண்டைக்கு இளந்தாரியளையெல் லாம் அள்ளிக்கொண்டுதான் போவான்கள். என்ன நடக்குமோ தெரியாது!... முந்தியும் ஒருக்கா உப்பிடி அள்ளிக் கொண்டுபோனது உனக்குத் தெரியுமெல்லே... உந்தப் பெடியங்களுக்கும் வேறை வேலை இல்லை. உவுங்களாலை தான் ஆமியும் எல்லாப் பொடியனையும் சுட்டுத் தள்ளுது. எண்டைக்குத்தான்... உது தீருமோ?...''

—ஒரே மூச்சில் தனது அறிவுக் கெட்டியதை அளந்து கொட்டி விட்டு மீளவும் மூச்சை உள்ளிழுத் துக் கொண்டார்.

அப்போது வைத்தியசாலையில் வேலை செய்யும் மரியாரின் மகள் உமா இரவு வேலை முடிந்து வீடு வந்து சேர்ந்தாள்.

மரியார் கேட்டார்—

''அடி... பிள்ளை!... எப்பிடி வந்து சேர்ந்தனீ?... ரவுணுக்குள்ளை ஆமியெல்லோ வந்திட்டுது...''

''அப்பு!... சும்மா வீட்டிலை இருந்து கொண்டு எல்லாம் தெரிஞ்ச மாதிரி ஊர்ச்சனங்களை ஏன் பயப் பிடுத்துறியள்... இவ்வளவு நேரமும் நான் பஸ்ராண்டில் காவல் நிண்டு இப்ப தான் பஸ் எடுத்து வாறன்... அங்கை ஆமியுமில்லை... பூமியு மில்லை... பார்வதி ஆச்சியைப் பாரு ங்கோ... முழியுரு... உப்பிடிக் கதை யளாலை எத்தனை உழைக்கிற சனம் ரவுணுக்குப் போகப் பயத்திலை பட் டினி கிடக்குது தெரியுமா?...''

— மரியாரின் வாயிலிருந்த சுருட்டுத் தடுமாறிக் கீழே விழுந் தது. பாவம் அவர்...

— பார்வதி நீண்ட ஒரு நிம் மதிப் பெருமூச்சுடன் தன் குடி சையை நோக்கி நகர்ந்தாள்.

''எடே... மணியம்! ரவுணிலை ஒண்டுமில்லையாம்... எண்டாலும் நீ கவனமாய் பார்த்துப் போறது நல்லது...''

''என்னணை ஆச்சி திடீரென்று மாறி விட்டாய்! உந்த ஊர்க்குருவி யார் ஏதும் சொல்லிப் போட்டா ரோ?...''

— மணியனுக்கு மனம் சலித் தது ''என்னடா இது? சூழலிலுள்ள ஒவ்வொருவனுடைய கதைகளா லும் மனித மனங்கள் கணத்துக் குக் கணம் மாறுகிறதே'' எனத் தனக்குள் எண்ணி நொந்து கொண்டான்.

— பார்வதி தொடர்ந்தாள்...

"இல்லை... அவரடை பெடிச்சி உமா தான் சொன்னவள்... ரவுனிலை ஒண்டுமில்லையாம்..."

— உமா என்ற பெயரைக் கேட்டதுமே மணியனின் முகத்தில் ஏற்பட்ட பிரகாசத்தை பார்வதி கண்டாள். எனினும் மனதினுள் மாத்திரம் சிரித்துக் கொண்டாள்.

அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களில் மணியன் மிக ஒழுக்கமான இளைஞன். அங்கு வாழும் குமர்களை வைத்திருப்பவர்களுக்கு மணியன் மீது ஒரு கண். அவ்வாறுனவர்களுள் மரியாரும் ஒருவர். இதெல்லாம் மணியனுக்கும் தெரியும். எவ்வளவு பேர் மணியன்மீது கண் வைத்தாலும் மணியனுக்கு உமாவின் மீது ஒரு கண். இது பார்வதிக்குத் தெரிந்திருந்தாலும் அதை வெளிக்காட்டவில்லை.

உமாவின் பெயரை பார்வதி உச்சரித்ததுமே அவனது வயிறு நிறைந்து பசியும் பறந்துவிட்டது. காய்ச்சிய கஞ்சி அப்படியே இருந்தது. அவளின் நினைவு அவனுக்கு உயிருட்டமாக இருந்தது. இந்நிலைமையை ஊன்றி அவதானித்த பார்வதி "இனிச் "சமையல் தேவையில்லை. பசிக்கிற நேரம் பொடிச்சியின்ர பேரைச் சொன்னுக் காணும் உவனுக்கு" என்று மனதில் எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

"ஆச்சி! நான் போட்டு வாறன்... மத்தியானம் நான் ஏதும் அரிசியைப் புளியைக் கொண்டு வாறன் "சமைக்கலாம்" என்றவாறே மணியன் நடையைக் கட்டத் தொடங்கினுன்.

பார்வதி "முருகா! என்ர பிள்ளையை உந்தக் குறுக்காலை பே'வாரட்டயிருந்து நீதான் காப்பாற்ற வேணும்" என்று தனக்குள் வேண்டிக்கொண்டாள்.

உமா ஒய்வு நேரங்களில் பார்வதியின் வீட்டிலேயே பெரும்பங்கைச் செலவிடுவாள். அவள் அங்கு வந்து போவது பார்வதிக்காக மட்டுமல்ல, மணியனுக்காகவுமே. ஆனுல் அதை அவள் மணியனுக்குக்கூட வெளிப்படுத்தவில்லை.

மணியன் தன் வீட்டுப் படலையைத் திறந்து வெளியே கால் வைத்த போது, உமா வாசலில் எதிர்ப்பட்டாள். அதைக் கண்டதும் மணியன் "நல்ல சகுனம்" என தனக்குள் எண்ணிக் கொண்டான், மனதின் அடித்தளத்தில் "குண்டு வெடிப்பைச் சாட்டி ரவுணுக்குப் போகாமல் உமாவோடு கதைத்துக் கொண்டிருந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்" என்ற எண்ணமும் தோன்றத் தவறவில்லை.

"மணியன்... எங்க போறியள் ரவுணுக்கே... அங்க வெடிச் சத்தமெல்லாம் கேக்குது..."

—இந்தக் கேள்வி மணியனின் மனதில் உமா தன்னை வீட்டிலே மறித்து சந்தோஷமாகக் கதைக்க நினைக்கிருளோ என்ற சந்தோஷமான சந்தேகத்தை எழுப்பியது.

"என்ன உமா... நீர் ரவுணிலை ஒண்டுமில்லை யெண்டு சொன்னீராம்... அது தான் நம்பிப்போறன்"

—உமா "ஆம்" என்பது போல் தலையசைத்தாள். மணியன் அவள் விழிகளை சந்திக்கத் துடித்தான். ஆனுல் அவள் தலைகுனிந்தது-முகம் சிவந்தது— அவனுல் அவளது செக்கச் சிவந்த கன்னங்களை மட்டுமே பூரணமாக ரசிக்க முடிந்தது. அதை அவன் தனக்கானது என்றே எண்ணினுன்— அவன் மனம் ஆகாயத்தில் பறந்தது.

உமா "என் சொல்லை நம்பிப் போகுமளவுக்கு என்மீது மணியனுக்கு எவ்வளவு அபார நம்பிக்கை" என்று எண்ணியது மல்லாமல் "மணியனே தன் நாயகன்" என்ற உறவினையும் கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள்.

"சரி... உமா!... நான் வாறன், நீர் ஆச்சியோடை போய் கதையும்..."

—மணியன் அவளின் நினைவுடன் புறப்பட்டான்.

❋ ❋ ❋

அந்த வீதி வெறிச்சோடிக் கிடந்தது. மணியனுக்கு அதைஉணர்கின்ற நிலையை உமாவின் நினைவு மறைத்திருந்தது. அவனுக்கு தான்

## பவனி வரும் நாள் வருது!

**— நெடுந்தீவு லக்ஸ்மன் —**

ஏர் சிறந்து வளம் பொங்கி
எழில் துலங்கச் செங்கோலின்
சீர் நிறைந்து புவி ஆண்ட
சீலமிகு தமிழே உன்
கார் குழலின் யௌவனமும்
கனக மணி முடியும் எங்கே?
நீரோடும் கண்களுடன்
நிற்பதும் ஏன் சொல்தாயே!

பாரில் வனப்பு மிகு
பாவைநீ உன் கண்கள்
நீரில் மிதக்கு மெனில்
நித்திலத்தில் யாமிருந் தென்?
போரில் புறம் காணுப்
பிள்ளைகளைக் கொண் டவள் நீ
பாரில் முன்போ லப்
பவனி வரும் நாள் வருது!

வைக்கின்ற ஒவ்வொரு அடியும் 'உமா... உமா'' என்று தன்னுள் சொல்லிக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டிருந்தது. ஓரிருவர் அவனைக் கடந்து சென்றாலும் அது யார்— எவர் என்ற கவலை கூட அவன் மனதில் எழவில்லை.

—அவன் ரவுணை நெருங்கி விட்டான். இப்போது தான் அவன் சுய நினைவுக்கு வந்து சுற்று முற்றும் அவதானித்தான். அவனைக் கடந்து இளைஞர் கூட்டமொன்று ஆயுத பாணியாக ''டெலிகா'' வான் ஒன்றில் சென்றது. அதைக் கொண்டு ''ஆமியை அடக்கிவிட்டுப் போகிறார்கள். இனிப் பிரச்சினை இராது'' என தன்னுள் சொல்லிக் கொண்டான்.

ஒரு பொடிப்பயல்களும் வேலைக்கு வாறான்களில்லை.''— என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தமுதலாளிக்கு மணியனைக் கண்டதும் மனதிலே உற்சாகம் பிறந்தது. வேலைக்கு வெடிச்சத்தம் கேட்டால் வரமாட்டான்கள் என்று அவரால் சிந்திக்க முடிந்ததே தவிர, நான் சம்பளத்துக்கு வேலை செய்யும் தொழிலாளி ஒரு நாள் நின்று விட்டால் அவன் வீடே பட்டினி என்று சிந்திக்கும் அளவுக்கு அவரின் சமுதாய சிந்தனை வளர்ச்சியடைந்திருக்கவில்லை. மணியனைக் கண்டதும் அவர் கேட்டார்—

''மணியன்...! என்ன ஏதோ பிரச்சினை போல கிடக்கு''

''முதலாளி இன்று லீவு விடப் போகிறாராக்கும். விட்டாலும் வீட்

## விமானம்

விடியும் வேளை அதனில் நாம்
வீட்டி லுறங்கிக் கிடக்கிறோம்
பட படென்ற சத்தம் கேட்டு
பதறி நாமும் எழுகிறோம்

விமான மொன்று வந்தது
விண்ணைச் சுற்றிப் பறந்தது
வீசிக் குண்டை எறியுமோ!
வீடு வாசல் உடையுமோ!

பதறுகின்ற இதயத் தோடு
பதுங்கி நாமும் இருக்கிறோம்
நிதமுமிது நடக்குது
நிம்மதி தான் கிடைக்குமோ?

பறக்கும் விமானம் அதனை நாம்
பார்த்து மகிழ்ந்த காலம்போய்
இறக்கு மெண்ணம் மட்டுமே
இன்று எம்முள் நிறையுதே

**மேகலா சிவப்பிரகாசம்**

அவன் தான் வேலை செய்யும் கடையை நெருங்கி விட்டான். நேரம் வழமையாக அவன் வேலைக்குச் செல்லும் நேரத்தைத் தாண்டியே இருந்தது.

''என்னடா!... ஒரு வெடிச் சத்தம் கேட்டதுமே அதனைச் சாட்டி டில் போய் உமாவோடை அரட்டை அடிக்கலாம்'' என மணியனின் மனதின் ஒரு பக்கம் எண்ண— ''அட, இன்று வேலை நடந்தால் தானே வீட்டில் அடுப்பு எரியும், வயிறும் நிறையும்'' —என மறுபக்கம் எண்ணியது.

முதலாளி தொடர்ந்தார்—

''தம்பி... உந்தப் பிரச்சினையளைப் பார்த்தா நாம நாலு பணம் உழைக்க ஏலுமே?... கடைசி அன்றன்றுடம் கஞ்சி குடிக்கிறதுக்காவது உழைக்க வேண்டாமா?... வா... பேசாமல் நாம நம்மட வியாபாரத்தைத் தொடங்குவம்.''

—மணியன் தனக்குள் உந்த ஆளும் கஞ்சி, கூழ் எண்டு கதைக்குது. கோடிக் கணக்காக சம்பாரிக்கிற மனுசன் ஏழ்மையைப் பற்றிப் பேசுது... நான் சொல்ல வேண்டிய எல்லாத்தையும் உந்த ஆளே சொல்லுறார் என்று தனக்குள் எண்ணிக் கொண்டே வேண்டா வெறுப்பாக ''ஓம்! ஓம்'' என்று தலையசைத்தான்.

என்னதான் வேலைக் கஷ்டம்- மனச்சலிப்பு— சக்தி இழப்பு— வருமானக் குறைவுகள் ஏராளமாக இருந்த போதும், முதலாளிக்கு விசுவாசமான ஒரு தொழிலாளியாக அவர் எதைச் சொன்னாலும் மறுக்காது செய்யும் ஒரு நன்றியுள்ள பிறவியாக மணியன் இருந்தான். இதற்கு அவனின் வறுமையும் ஒரு காரணமாக இருந்தது. முதலாளிக்கும் மணியனின் மீது அபார நம்பிக்கை.

—கடை திறந்து வியாபாரம் ஆரம்பமானது. அந்தக்கடை நகரின் மத்தியில் பிரபல்யமானது. அத்தியாவசியப் பண்டங்களின் உறைவிடம் என்றே அதைச் சொல்லலாம். எந்நேரமும் அங்கு சனக் கூட்டமாகவே இருக்கும். அன்று ரவுணில் பிரச்சினை என்றதும் வழமைக்கு மாறாக, நேரத்துடன் பொருட்களை வாங்கிக்கொண்டு வீடுகளில் ஒதுங்குவதற்காக மக்கள் கூட்டம் முண்டியடித்தது. மற்ற வேலையாட்கள் வராததினால் அன்று மணியன் பம்பரமாகச் சுழன்றான்.

முதலாளியின் காசுப்பெட்டி நிறைந்தது. மூடைகள் குறைந்தன —கடை சற்று வெளித்தது —மணியனின் வயிற்றிலும் பசி ஏறியது. —நேரம் 11மணியைத் தாண்டி விட்டது —சன நடமாட்டமும் குறையத் தொடங்கியது.

## சார்ள்ஸ் டிக்கின்ஸின் ஆவி எழுதிய புத்தகம்

சார்ள்ஸ் டிக்கின்ஸ் ''தி மிஸ்டரி ஆஃப் எட்வின் ட்ருடு.'' என்னும் மர்மக் கதையை ஒரு மாதப் பத்திரிகையில் 12 மாதங்களுக்கு வரக் கூடியதாகக் கணக்கிட்டு எழுதத் தொடங்கினார். ஆறு அத்தியாயங்கள் வெளிவந்ததும் 1980 இல் அவர் இறந்து போனார். தனது கதையைப் பற்றிய எவ்வித குறிப்பையும் அவர் விட்டுச் செல்லவில்லை. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமிருந்த டிக்கின்ஸின் லட்சக்கணக் கான வாசகர்கள் நாவலின் முடிவு என்ன என்று அறியத் துடித்தார்கள்.

1872 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தாமஸ் பி. ஜேம்ஸ் என்ற நாடோடி இளைஞன் ஒருவன் மறைந்து போன டிக்கின்ஸின் ஆவி தான் அரைகுறையாக விட்டுப் போன நாவலை எழுதி முடிக்குமாறு தன்னைப் பணித்துள்ளது என்று அறிவித்தான். 13 ஆவது வயதில் படிப்பை நிறுத்திய அந்த இளைஞன் ஒரு மோசடி ஆசாமி என்று பத்திரிகைகள் எழுதின. 1873 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆந் திகதி புத்தகம் வெளியாயிற்று. பெரும் இலக்கிய ஜாம்பவான்கள் கூட அதைப் படித்துப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்தனர். டிக்கின்ஸின் கற்பனைச் செறிவு, நடை, வளமான சொற் பிரயோகங்கள் அப்படியே நாவலில் இடம் பெற்றிருந்ததைக் கண்டு பத்திரிகைகள் அவன் புகழைப் பாட ஆரம்பித்தன.

இந்த மீதிக் கதையைத் தவிர ஜேம்ஸ் அதன் பின்னர் கதை எதுவுமே எழுதியதில்லை.

நன்றி முத்தாரம். 7. 2. 86.

—முதலாளி நாளையை சிந்தித்தார்.

''மணியன்...! அரிசி மூடை முடியுது... சைக்கிளைக்கொண்டு போய் ஸ்ரோரிலை ஒவ்வொன்றாக இரண்டொரு மூடை அரிசி கொண்டுவந்து கையோட வைச்சுட்டியெண்டால் நல்லதெல்லே... பிறகு நாளைக்கு ஒருக்கா மினைக்கெடாம...''

—மணியன் மூச்சடைத்து நின்றான்.

அவர்களின் 'ஸ்ரோர் றூம்'' நகரின் இராணுவ முகாமை அண்டி இருந்தது. வழமையாக முதலாளி தன்னுடைய காரிலேயே அரிசி சாமான்களை ஏற்றி வருவார். இராணுவ முகாமிலிருந்து ஏதாவது வெடி ஓசை கேட்டுவிட்டால் அன்று அவரோ —அவரது வாகனமோ ''ஸ்ரோர் றூம்'' திசையையும் நோக்காது. அவரின் தொழிலாளிகளே அன்று மூடை ஏற்றும் வாகனங்களாக மாறுவது அங்கு வழமை. ஆனால் அன்று காலை வழமையிலும் மோசமாக போராளிகள் —இராணுவம் மோதல் கடுமையாக இருந்ததினால் முகாமிலுள்ள இராணுவம் வீதியில் தன் தலைக்கறுப்பைக் கண்டாலே சுட்டுவிடுவார்களே என மணியன் பயந்தான். —''சீ ...! தொழிலாளியின் கண்ணீரையே தமது பன்னீராக நினைக்கின்ற முதலாளிவர்க்கம் என்று தான் திருந்துமோ'' என தன்னுள் நொந்து கொண்டான். முதலாளியின் கட்டளையை அவனால் மறுக்கவும் முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டு 'ஆம்' என்று தலையசைத்தான்.

—அவன் சைக்கிளை எடுத்தான். —ஏனோ என்றுமில்லாதவாறு அவன் மனம் நடுங்கத் தொடங்கியது. அன்றைய நிலையில் அவனுக்கு அப்படி இருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இராணுவமுகாமை அண்டிய வீதியால் போகும் எவருக்கும் வெடி விழும் அளவுக்கு போராளிகள் அவர்கள் கோபத்தைக் கிளறிவிட்டிருந்தனர்.

மணியன் பார்வதியாச்சியை நினைத்துக் கொண்டான். உமாவும் மனதின் அடித்தளத்தில் தோன்றி மறையத் தவறவில்லை.

மணியன் தன் ஸ்ரோர் றூமை நெருங்கிச் சென்றான். அவனுக்கு இதயம் கனத்தது. அரசிமூடையை எடுத்தான் —சைக்கிளில் ஏற்றினான்— சைக்கிளில் ஏற்றிய மூடைப் பாரத்தைவிட அவனது மனதில் ஏறிய பயப்பாரம் அதிகமாக இருந்தது. ஒருவாறு மனத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சைக்கிளை மெள்ள உருட்டித் —தள்ளி—உன்னி —ஏற முயற்சித்தான்.

—அப்போது...

வானத்தில் ஹெலிகாப்டர்களும் ''பொம்பர்'' களும் திடீரென வந்து குண்டு மாரி பொழியத் தொடங்கின. காலையில் நடந்த போராளிகளின் தாக்குதலுக்கு பழி வாங்கு முகமாகவே இத் தாக்குதல் என்பதை மணியன் புரிந்து கொண்டான். தன் வாழ்வு முடிந்ததென எண்ணம் மணியனைப் பற்றிக் கொண்டது. அவனையறியாமலே அபார துணிவு ஒன்று அவனிடம் ஏற்பட்டது. எப்படியும் தப்பிவிட வேண்டும் என்ற உணர்வுடன் சைக்கிளை வேகமாக மிதித்தான்.

இப்போது இராணுவ முகாம் பக்கமிருந்தும் ஷெல் அடியும் குண்டு மாரி பொழிந்தது: மணியன்கவனமாகவும், வேகமாகவும் சைக்கிளைச் செலுத்தினானெனினும் முகாம் பக்கமிருந்து வந்த துப்பாக்கி ரவைகளிலொன்று அவனது காலைத் துளைத்தது. நல்ல வேளையாக ஏனைய ரவைகளை சைக்கிளின் பின்னாலிருந்த அரிசி மூடை தாங்கிக் கொண்டது. அல்லது மணியன் பிணம் தான்...

காலில் ஏற்பட்ட காயத்தையும் இரத்தப் பெருக்கையும் பாராது; மணியன் எவ்வாறாயினும் அரிசி மூடையை கடையில் சேர்த்து விட வேண்டுமென்ற கட

மையுணர்வு மேலீட்டினால் கடையை வந்து சேர, கடை மூடப்பட்டிருந்தது.

பொம்பர், ஹெலிகாப்டர் குண்டு வீச்சுக்குப் பயந்த முதலாளி, மணியனின் சிந்தனை சிறிதுமின்றி தான் தப்பினால் போதுமென்று கடையை மூடி விட்டு ஓடி விட்டார் என்பது அப்போது தான் அவனுக்குத் தெரிய வந்தது. மணியனுக்கு அந்த நிமிடத்தில் முதலாளி மீது ஏற்பட்ட ஆத்திரத்திற்கு அளவே இல்லை. "ஏழைகளின் உயிர்களுக்குக் கூடப் பெறுமதியில்லையே'' எனத் தன்னுள் எண்ணி வேதனைப்பட்டான்.

குண்டுமாரி ஓயும் வரை கடைத் தாழ்வாரங்களில் நின்றவர்கள் மணியனின் நிலை கண்டு பதறினார்கள். நடந்ததை அறிந்தவர்கள் முதலாளியை வாயாரத் திட்டினார்கள். மணியனுக்கு ஆதரவு காட்டினர். காலில் இருந்து குருதி அளவுக்கதிகமாக வெளியேறியதால் அவன் மெள்ள மெள்ள தரையில் சாய்ந்தான்.

❋ ❋ ❋

கண் விழித்துப் பார்த்த போது— தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதையும் தனது காலில் சத்திரசிகிச்சை மூலம் ரவை அகற்றப்பட்டு மருந்திடப்பட்டிருப்பதையும் கண்டான். தான் எவ்வாறு வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டேன் என்பதை அறிய ஆவல் கொண்டவனாய் மணியன் கட்டிலின் தலைமாட்டுப் பக்கம் நோக்கினான். அங்கே உமா கண்ணீர் மல்க நிற்பதையும், வேறும் பலர் தன்னைச் சுழநிற்பதையும் கண்டான்.

உமாவைக் கண்டதும் அவனது கால் நோவு எல்லாம் பறந்தது எனினும், அவள் அழுவதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சூழ நிற்பவர்கள், தான் உமாவோடு பேசினால் தப்பாக நினைப்பார்களோ என எண்ணினான்— எனினும் மனத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு—

"உமா!... ஏன் அழுகிறீர்?— எனக்கு ஏற்பட்டது ஒரு சிறு காயம் தான். இரண்டொரு நாளில் மாறி விடும் இதைப் போய் பெரிசாக எடுத்து அழுகிறீரே...''

உமா விக்கித்து நின்றாள். "கடவுளே!... இந்தக் கொடூரமான நிகழ்ச்சியை நான் எவ்வாறு சொல்வேன்!''



தலைமொட்டையர்:- பஸ் ஜன்னலை சாத்துங்கள்
ஒருவர்:- ஜன்னலைத் திறவுங்கள் புளுக்கமாக இருக்கிறது.
மற்றவர்:- அவரின் தலையைக் காத்து குழப்புது.

என்று தனக்குள்ளே, தடுமாறினாள். அழுகை இப்போது சத்தமாக மாறியது.

"உமா!... எவ்வளவு பேர் பார்த்துக் கொண்டுநிற்கிறாங்கள். என்ன நினைப்பாங்கள்?... ஏன் இதுக்குப் போய் உப்பிடி அழுகிறீர்?...''

-மனதில் தைரியத்தை வரவழைக்க முயன்றாள் உமா.

"மணியன்... உங்.— கூட .. ஆச்சியும் ஷெல் விழுந்து...''

-அவள் மேலே சொல்ல முடியாமல் "ஒ 'என்று அழுதாள்.

மணியன் மிகுதியைத் தானே நினைத்துக் கொண்டான். அவனுக்கு வைத்தியசாலைக் கட்டிடம் தலைகீழாகத் தெரிந்தது. அவன் எதுவுமே பேசாமல் கண்களை இறுக மூடிக் கொண்டான். தலையை இரு கைகளாலும் இறுகப் பற்றிக் கொண்டான். அவனது கட்டிலைச் சூழ நின்றவர்கள், நிலைமையைக் கண்ணுற்றுக் கண்ணீர் சிந்தாத குறையாக நின்றனர். மணியனைத் தேற்றினர்.

"விதியே! ஏழைகளின் உயிர்களோடு விளையாடுவதுதான் உன் விளையாட்டா?... நாங்கள் யாருக்கு என்ன துரோகம் செய்தோம்?...'

-மணியன் இப்போது வாய் விட்டு அழுதான். சூழ நின்றோர் பெரும் சிரமத்தின் மத்தியில் அவனது அழுகையை அடக்கினர்.

"உமா!... ஆச்சி இப்ப எங்கை?...'

'இதே ஆஸ்பத்திரியிலை தான்.

"ஆச்சிக்கு என்னவாம்?... டாக்டர் பாத்தவரே?... மறைக்காமல் உண்மையைச் சொல்லும் உமா.''

-மணியன் அழுகையினூடே ஆவல் பொங்கக் கேட்டான்.

-உமாவின் முகம் மீண்டும் சுருங்கியது.

"துன்பத்தின் மேல் துன்பத்தை அவருக்கு நான் கொடுத்துக் கொண்டிருக்கவா என்னை இங்கே அனுப்பினாய்... கடவுளே' என்று கடவுளையும் மனதால் சிறிது நொந்து கொண்டாள்.

மணீயனின் முகத்தில் பயத்தின் ரேகைகள் படர்ந்தன.

"என்ன... உமா?... ஏன் பேசமால் நிற்கிறீர்? எனக்கு நெஞ்சு வெடிக்கும் போலை இருக்கு ...சொல்லும் உமா...'

"பெரிய டாக்டர் இருபது மைல்களுக்கு அங்கால இருந்து வாற வராம் அவற்றை காரை ஆரோ கடத்திக் கொண்டு போட்டினமாம்...அதாலை அவர் வாறாரோ தெரியாதாம்...'

"அப்ப... ஆச்சியின் நிலை?... -மணியனின் இதயம் படபடத்தது.

"எங்கட அப்பு ஒரு ஸ்பெசல் டாக்டரைக் கூட்டிக்கொண்டு வந்து காட்டுறதுக்குப் போயிருக்கிறார்...''

"அவர் எப்ப வருவார்...? அது வரைக்கும் ஆச்சிக்கு ஏதும்?...'

"ஒண்டுமில்லை... வீணாகப் பயப்படாதேயுங்கோ... இந்த ஆஸ்பத்

திரியிலே எனக்குத் தெரிந்த சின்ன டாக்டர்மாரைக் கொண்டு காயங்களுக்கு மருந்து போட்டிருக்கிறன். மயக்கம் தான் தெளிய வேணும்...''

—உமா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மரியாரும் அங்கு வந்து சேர்ந்தார்.

''என்ன... தம்பி— சுகமே? ஆச்சிக்கு ஒண்டுமில்லே... பயப்படாதை... எல்லாம் சுகம் வரும்... நான் இருக்கேக்கை நீ ஒண்டுக்கும் பயப்படாதை...''

மரியாரின் வார்த்தைகள் மணியனின் மனதில் ஒரு ஆறுதல் உணர்வை உண்டு பண்ணியது. காலில் துப்பாக்கிக் குண்டு பட்ட காயம் உண்டு என்ற எண்ணமே ஒரு கணம் அவனிடமிருந்து அகன்று மீண்டது. கடைக் கண்ணால் உமாவை உற்று நோக்கினான். அழுது சிவந்திருந்த அவளது முகம் இப்போது கழுவித் துடைத்த தக்காளிப் பழம் போல் சிவத்து பளபளத்தது. உமா மணியனைப் பார்க்க வெட்கப்பட்டு தலையைக் கீழே குனிந்து கொண்டாள்.

இவற்றைக் கவனிக்காது தனது சுருட்டிலேயே லயித்திருந்த மரியார் தொடர்ந்தார்...

''மணியன்... நீ ஆச்சியைப் பற்றி ஒண்டுமே யோசிக்க வேண்டாம்... அவவுக்கு ஷெல் விழுந்த அதிர்ச்சியிலே சாடையான மயக்கமாம்... அது இப்ப தெளிஞ்சிடுமாம்... நல்ல வேளை ஷெல் வளவு மூலையிலே தூரமா விழுந்துட்டுது... மனுசிக்கு தோளிலே மட்டும் ஒரு சின்னக் காயம்... அதுவும் ஒரு கிழமைக்குள்ள மாறிவிடும். அதுக்குப் பிறகு...''

—சுருட்டில் உண்டான சாம்பலை ஒரு தட்டு உதறித் தட்டி விட்டுத் தொடர்ந்தார்.

''உனக்கு விருப்பமெண்டால்... உமாவை உனக்குக் கட்டி வைச்சு... என்ர சின்ன மாட்டுப் பண்ணையை உனக்குத் தந்து வீட்டோட வைச்சிருக்கலாம் எண்டு யோசிக்கிறன்.''

—மணியன் பெரியவர் முன் மறுமொழி சொல்ல வெட்கி மௌனமானான். ஆனால் அவன் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளியது. உமாவின் நிலையும் அப்படியே.

மணியனின் மௌனம் மரியாருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ''மணியனுக்கு உமாவைக் கட்ட விருப்பமில்லையோ... அல்லது பார்வதி சம்மதிக்க மாட்டாளென்று நினைக்கிறானோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

''மணியன் ஆச்சிக்கும் விருப்பம் வேணுமே எண்டு நினைக்காதை... அவவுக்கு நல்ல விருப்பம். நானும் ஆச்சியும் எவ்வளவோ காலத்துக்கு முன்னாலே இதைத் தீர்மானிச்சுட்டம்...''

மணியனும் உமாவும் தாங்களும் ஒருவருக்கு ஒருவர் தெரியாமலே எப்போதோ தீர்மானித்து விட்டனர் என்பதைத் தத்தமது மனதில் சொல்லிக் கொண்டனர். ஒருவர் ஒருவரைப்பார்த்தனர்— எனினும் கண்கள் மட்டுமா ஆயிரம் கதைகள் பேசின.

—மரியாரின் மகிழ்ச்சி அவர் விடும் சுருட்டுப் புகையின் வேகத்தில் தெரிந்தது.

தூரத்தே... மீண்டும்... துப்பாக்கி வெடியோசைகள் கேட்கின்றன. மணியனுக்கும் உமாவுக்கும் அவை திருமண வீட்டுப் பட்டாசு வெடியோசையை நினைவு படுத்துகின்றன. அவர்கள் சிரிப்பில் வைத்தியசாலை குலுங்குகிறது.

முற்றும்

## புதுமை

அன்று அந்தக் கல்வியாண்டின் முதல் நாள். அந்தக் கல்லூரியில் வகுப்புகள், புதிய மாணவர்களுடன் ஆரம்பமாயின.

அவர் ஒரு சிடு சிடுப்பான ஆசிரியர். அவர் படிப்பிப்பதில் விளங்காதவற்றை மாணவர்கள் கேட்டால் எரிந்து விழுவார். தான் படிப்பிப்பதைக் கேட்டுக் கொண்டு பேசாமல் இருக்கும்படி கூறி விடுவார்.

அந்த முதல் நாளில் எட்டாம் வகுப்புக்குச் சமூகக்கல்விப் பாடத்துக்காகச் சென்றார். பாடத்தைத் தொடங்கு முன் மாணவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: ''எனக்குப் படிப்பிப்பதில் 20 வருட அனுபவம் உண்டு. நான் உங்களுக்கு முழுமையாக விளங்கும்படிதான் படிப்பிப்பேன். உங்களுக்கு ஒரு சந்தேகமும் வராது. எனவே குறுக்குக்கேள்வியொன்றும் கேட்கப்படாது. 'ஒலிவர் டுவிஸ்டைப்' போலிருக்காது சமர்த்தாயிருக்க வேண்டும்'' என்று முடித்தார்.

அப்போது ஒரு மாணவன் எழுந்து நின்று, ''சேர், மன்னிக்கணும். ஒலிவர் டுவிஸ்ட் யார்? விளங்கவில்லையே'' என்று கேட்டான்.

ஆசிரியருக்கு வந்ததே கோபம். ''டே முட்டாளே! முதல் நாளிலே மூதேசி போலேக் கேள்வி கேட்டு என்ர 'மூடை' க் குழப்புறாய். பேசாம இரடா'' என்று ஆர்ப்பாட்டம் செய்தார்.

இது வரை வெளியில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கல்லூரி அதிபர் திடீரென உள்ளே நுழைந்து, ''மாஸ்ரர் உங்களுக்குப் படிப்பிப்பதில் 20 வருட அனுபவமிருக்கலாம். ஆனால் மாணவர்களைப் புரிந்து கொள்வதில் உங்கள் அனுபவம் பூச்சியமே. மாணவர்களுக்கு விளங்கத் தக்கதாக தன்னையும் மாணவர் தரத்திற்கு இறக்கிக் கற்பிப்பவரே உண்மையான ஆசிரியர்'' என்று கூறி விட்டு வெளியேறினார். இந்த எதிர்பாராத தாக்குதலில் இருந்து மீள அந்த ஆசிரியருக்குச் சில நிமிடங்கள் பிடித்தன.

—யோ. றேகான்—



# ஷோபனா

- சத்தியபாலன் -

தன் மீது தீயே சொரியப்பட்டது போல அவள் ஒரு கணம் துடிதுடித்துப் போனாள். தாங்க இயலாத ஒரு அவமான உணர்வில் மனதுள் சினமும் துக்கமும் பொங்கி அடைத்தன.

அம்மாவும் அப்பாவும் வெளியே அமர்ந்திருந்து தாழ்ந்த தொனியில் பேசுவது அந்த இரவின் அமைதியில் அவள் காதில் தெளிவாய் விழுந்தது.

''தரகரின்ர பேச்சைப் பார்த்தால் கூடுதலான சீதனத்தை எதிர்பாத்துத்தான் அவையள் இப்ப சறுக்குமாப் போல படுகுது.''

அப்பா பெரு மூச்சோடு சொல்லிக் கொண்டிருந்தார்.

அம்மா வேதனை தோயும் குரலில் கேட்டாள். ''முதலில எல்லாம் சரியெண்டுதானே சம்மதம் சொன்னவை. இப்ப திடீரெண்டு இதென்ன பேச்சு?''

''பெடியனுக்கு நல்ல சீதனத்தோட வேற இடங்களிலயிருந்தும் பேசி வருகினமாம். முதலில எங்களுக்குச் சம்மதம் சொன்னதால மறுக்கக் கூடாதெண்டு யோசிக்கினமாம்... பொம்பிளைக்கும் முகம் ஒட்டிப் போச்சுதாம். வயது கூடின மாதிரிக் காட்டுதாம்... அதனாலை பெடியனும் கொஞ்சம் பின்நிற்கிறானாம்... எங்கட குடும்பம் நல்லதெண்டுதானாம் எங்களிட்டப் பேசி வந்தவையள்...''

ஏமாற்றம், இயலாமை, நெஞ்சை அழுத்தும் சோகம் இவற்றினது மொத்த உருவாய் வெளிப்பட்ட குரலில் அம்மாவிடம் முறையிடுகிற மாதிரிச் சொல்லும் போது, அப்பா அழுகிற மாதிரி இவளுக்குத் தோன்றியது.

அம்மாவிடமிருந்து சில நிமிஷங்கள் எந்த வார்த்தையுமில்லை.


அவள் மெல்ல மூக்கை உறிஞ்சிக் கொள்வது போலிருந்தது.

''திருநெல்வேலியில எங்கட கவிதாக்கெண்டு இருக்கிற காணியை வித்துப் போட்டு, அவையள் கேக்கிற காசைக் குடுத்தா என்ன? இவள் ஷோபனாவுக்கும் வயசு இந்தப் புரட்டாதியோட இருவத்தொன்பதாகுதெல்லே... இன்னும் எவ்வளவு காலம் அவளை வீட்டோட வச்சிருக்கிறது?'' என அம்மா தொடர்ந்தாள்.

''அதையும் இவளுக்குக் குடுத்துப் போட்டு மற்றரெண்டு பெட்டையளையும் என்ன செய்யச் சொல்லுறாய்?...'' அப்பாவின் குரல் கவலையில் உடைந்து தெறித்தது.

இயலாமையில் நெருக்குண்டு போன அந்த இதயங்கள் தீர்வுக்குப் பாதை தேடித் தவிக்கும் வேதனையை மனதுள் உணர்ந்து தன்னையும் மீறிப் பொங்கி வழிகிற கண்ணீரைத் துடைக்கும் எண்ணம் கூடத் தோன்றாமல் படுக்கையில் கிடந்தாள் ஷோபனா.

ஷோபனாவுக்குப் பேசி வருகிற மூன்றாவது சம்பந்தம் இது. நீண்ட நாட்களாக ஓடித் திரிந்து முயன்று கொண்டு வரப்பட்ட சம்பந்தங்களில் செவ்வாய் தோஷத்தைக் காரணம் காட்டி முதலாவது சம்பந்தம் கலைந்து போனது.



''காற்று வாங்க வந்த இடத்தில அயந்து போய் விழுந்திட்டாய்?''

''பேந்தென்ன? கடற்கரையில காற்றுமில்லை. மீனுமில்லை. ஷெல் லடித்த துண்டுகள்தானே வலையில... வள்ளத்தில அகப்படுது... அது தான்...''

---

இரண்டாவது சம்பந்தம் மாப்பிள்ளையின் குடிப்பழக்கத்தைக் காரணமாய்க் கொண்டு முறிந்தது.

இப்போது இந்தச் சம்பந்தம்- இவளைப் போலவே தோஷமுள்ள சாதகம் பக்கத்து ஊரில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் நல்ல இடத்து மாப்பிள்ளை. ஆரம்பத்திலிருந்தே எந்தத் தடங்கலும் நேராமல் படிப்படியாய் ஒவ்வொரு விடயமும் இணக்கமாய் முடிந்தது. சாதகங்களும் நன்கு பொருந்தி இருப்பதாய்ச் சாத்திரியார் சொல்லியிருந்தார். இவர்களாய்த் தருவதாய்ச் சொன்ன சீதனத்தைவிட அவர்கள் தரப்பில் கேட்கப்பட்ட நகையும் காணியும் எப்படியோ கொடுக்கக் கூடிய விதத்தில் அமைந்திருந்தது. இத்த விடயங்களெல்லாம் நிகழ்ந்தேறிய போது அம்மாவும் அப்பாவும் கொண்ட நிம்மதியும் ஆறுதலும் ஷோபனாவைச் சந்தோஷப்படுத்தின. மூன்று பெண்களைப் பெற்றுவிட்டு ஒரு கச்சேரி லிகிதராய்-தனது ஊக்கத்தாலும் உழைப்பாலும் சேர்க்க முடிந்த சொத்துக்களைக் கொண்டு தனது பெண்களின் வாழ்வில் ஒரு வசந்தத்தைத் தோற்றுவித்து விட மேற்கொண்ட முயற்சிகளில்-தவறிப்போன முன்னை நாள் மகிழ்ச்சியும் கலகலப்பும் மீண்டும் முகத்தில் பளிச்சிடத் திரிகிற அப்பாவைப் பார்க்க இவளுக்கு மகிழ்ச்சியாயிருந்தது.

தனது ஆரம்ப இளமைக் காலங்களில் தான் கற்பனை பண்ணியிருந்த இலட்சிய வாழ்க்கை வெறும் கனவாய்ப் போன துயரத்தை நினைவு கூர்ந்து கொண்டிருப்பதைக் காட்டிலும்- தங்கள் மூத்தபுதல்வியின் வாழ்வில் வசந்தம் வீசப் போகும் திருநாளை எண்ணி மகிழ்ந்திருக்கும் தன்பெற்றோரின் நிம்மதியைக் கண்டு ஆறுதல் கொள்வதில் அர்த்தம் நிறைய இருப்பதாகப் பட்டது - எப்படியேனும் ஒரு சுமையாயிருக்கும் நிலை மாறி அவர்களுக்கொரு ஆறுதலைத் தரும் காலம் வந்ததையிட்டுப் பெரிதும் நிம்மதி கொண்டாள்.

இப்பொழுதோ ஒரு புதிய சிக்கல் முளைத்து விட்டிருந்தது. எல்லாம் சரி வந்து விட்டதென எல்லோருமே நம்பியிருக்கும் வேளையில் இப்படியாய் ஒரு நிலை ஏற்பட்டு அவர்கள் தன்னையே கேவலப்படுத்துவது போல பேசுவதைக் கேட்டு அவள் அவமானத்தால் குறுகிப் போனாள்.

பெண்ணில் அவ்வளவு பிடித்தமில்லாமல் இருக்கும்போது- மேலதிகமாய்ப் பெறப்படும் ஒரு ஐம்பதாயிரம் ரூபாய்க்காக சகல குறைகளையும் மன்னித்துத் தன்னை அங்கீகரிக்கத் தயாராக இருப்பதாகச் சொல்வதை ஜீரணிக்க இயலாமல் ஷோபனா திணறிப் போனாள்.

ஒரு பெண்ணோடு வாழ்வதற்குக் கூலி கேட்பது போல பேரம் பேசி குறையைக் காட்டி விலையைச் சரியாக்குகிற வியாபார உத்திகளே ஒரு வாழ்க்கையை அமைப்பதற்கும் உதவுகின்றன என நினைத்துப்பார்க்கும்போது தனது சுயகௌரவம்-மரியாதை யாவுமே காலால் இடறப்பட்டு விட்டது போல உணர்ந்தாள் ஷோபனா,

இத்தகைய ஓர் ஆணோடு குடும்பம் நடத்துவது எத்தனை வேதனையான விஷயம் என்று தோன்றியது. குடும்பத்தில் ஏற்படுகிற ஒரு சிறு முரண்பாட்டில் தனது குறைகள் எத்தனை பெரிதாக்கப்பட்டு தன் மனமே புண்ணாகித் தவிக்கும் படியான காரியங்கள் நிகழக்கூடும் என்றெல்லாம் அவள் அஞ்சினாள்.

அவளுக்குக் கலியாணம் பேசப்பட்ட சந்தர்ப்பத்தில் பெண் படித்தவளா? சமைக்கத் தெரிந்தவளா? நாகரிகமானவளா? ஆங்கிலம் பேசக் கூடியவளா? என்று துருவித் துருவி விசாரித்து அறிந்து கொண்ட இந்த ஆண்பிள்ளை தனது சுய இயல்புகள் தான் மணக்கப்போகும் பெண்ணில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களை சிறிதேனும் நினைத்துப் பார்க்கவில்லையே என அவள் வேதனையில் வெந்தாள். அன்றைய இரவு முழுவதுமே இத்தகைய குழப்பத்திலும் வேதனையிலும் நகர்ந்து கொண்டிருந்தது. இந்த சமூகத்தில் ஒரு பெண்ணுக்குத் தரப்படுகிற ஸ்தானம்-அதனை ஒரு சுமையெனக் கருதுகிற மனப்பான்மை காலாகாலத்தில் பெண்களை கட்டிக் கொடுக்காவிட்டால் பின்பு பெண்களை கரைசேர்ப்பதே கடினம் என்ற உறுதிப்பட்டுப்போன கோட்பாடு இவையெல்லாம் நமது பெண்களை எவ்வளவுதூரம் அவமதிக்கின்றன என்ற எண்ணமெல்லாம் அவள் மனதில் பிறந்து விடுவதற்குள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணவேண்டுமே என அவளைத் தவிக்கப் பண்ணின.

ஏ/எல் வரை படித்துவிட்டு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காததோடு மேற்கொண்டு தனது படிப்பை தொடராமல் விட்ட தன்னுடைய தவறின் ஆழத்தை- அது ஏற்படுத்திவிட்ட பாதிப்பை அவள் இப்போது உணர்ந்தாள். வீட்டோடு உட்கார்ந்திருக்கிற காரணம்தான் தன்னை ஒரு சுமையென மற்றவர் கருதும்படியாய் ஆக்கியதோ என அவள் ஐயுற்றாள். தன்னையொத்த வயதில் உள்ள பெண்கள் எத்தனையோ பேர் பெற்றவர்களுக்குச் சுமையாயில்லாமல் தொழில்புரிவோராய் வாழ்ந்து கொண்டிருப்பதனை எண்ணிப் பார்த்தாள்.

இப்போது கூட தங்கள் பாடங்களில் சந்தேகம் கேட்க வருகின்ற அயல் வீட்டுப் பெண் பிள்ளைகள்

அவன் வீட்டோடு உட்கார்ந்திருக்காமல் வெளிவாரியாகவே படித்து ஒரு பட்டதாரியாய் ஆகியிருக்கலாமே என்று அவளிடம் குறைப்பட்டுக் கொள்கின்றனர். அவளிடம் உதவி பெற்றுப் படித்த முன்வீட்டுக் கோமதி இம்முறை கொழும்புக்குப் போய் ஜீ. ஏ. கியூ. எழுதி விட்டு வந்திருக்கிறாளே...

எதைப் பற்றியும் ஆழமாக யோசிக்காமல் சும்மா உட்கார்ந்திருந்து இப்போது வெறும் சுமையாக கருதப்படும் நிலை வந்ததே என வேதனை கொண்டாள். தனது வாழ்வின் சந்தோஷமே இன்னொரு ஆணின் கையிலிருப்பதாய்க் கருதி அவனுக்காகத் தவமிருந்து அவன் காலடியில் பொன்னும் பொருளும் அர்ப்பணம் செய்து ஒரு வாழ்வை யாசித்து நிற்கையில் அவன் மிகக் கேவலமாய் அவளை அவமதிப்பது எத்தனை ஈனமான விஷயம் என்ற உண்மை அவள் நெஞ்சில் நெருப்பாய் எரிந்தது. இந்த நினைவுக் குழப்பங்களுக்குள் சிக்கித் தவித்து ஒரு முடிவுக்கு வருகையில் பொழுது விடியத் தொடங்கியிருந்தது. அந்த விடிகாலைப் பொழுதில் தான் அவள் சிறிது தூங்கினாள்.

ஷோபனா துயில் கலைந்தெழுந்த போது நன்கு விடிந்திருந்தது. அம்மா அடுப்படியில் வேலையாயிருந்தாள். ஷோபனா நேராக அம்மாவிடம் போனாள்.

''ராத்திரி என்னம்மா பிரச்சினைப் பட்டனீங்கள்... அப்பா சரியாய்க் கவலைப்பட்டுக் கதைச்சார்...''

ஷோபனாவின் மனதின் தெளிவு அவள் குரலில் தெரிந்தது. அம்மா சில கண நேரங்கள் மௌனமாக இருந்தாள். பின்னர் மெதுவாக ஆரம்பித்தாள்.

''அவர் தரகர் நேற்றைக்கு ஐயாவைக் கண்டவராம். மாப்பிள்ளை வீட்டுக்காரர் சீதனத்தைக் கொஞ்சம் கூட்டிக் கேக்கினமாம்...''

''ஏனாம்... முதலில் எல்லாம் சரி எண்டுதானே சம்மதிச்சவையள்...''

# வெற்றி... வெற்றி...

★ வவுனியா திலீபன் ★

தவழ்ந்தோம்...
நடக்கிறோம்—
பறக்கப் போகிறோம்...
ஆமாம்—
அடிக்க அடிக்க
நாம் தேயவில்லை; வளர்ந்
தோம்!

❈

அலை
கரையை முட்டும் போது
நுரை ஜனிக்கிறது.
நாங்கள்
மிதிக்கப்பட்டதனால் தான்
புரட்சி வெடித்தது!

❈

அன்று—
பறக்க முடியாமல்
சிறகற்று
சிறைக்குள் சிக்குப்பட்டிருந்
தோம்.
இன்று—
சிறையை உடைத்து
வந்து விட்டோம்.
மன மெங்கும்
சிறகுகளின் குருத்துக்கள்!

❈

அலையே ஆனந்த மென
அதன் மேல் நீந்தினால்
அடியினில் பளிச்சிடும்
முத்தினை அள்ள முடியுமா?

❈

விரலை
துப்பாக்கியாகக் காட்டிய
காலம்
விரைந்து விட்டது
விரல்களின் மேல்
முளைத்து விட்டன
துப்பாக்கிகள்!

❈

இறந்த காலம்
நஷ்டம் காட்டவில்லை.
தோல்வித் தூசு
எங்கள்
தோள்களிற் கூட
ஒட்டவில்லை!

❈

சூறாவளியால்
மரம் சரியும் வேளை
ஆணி வேர் மௌனம்.
பக்க வேர் தான்
மரத்தை விழ விடாமல்
நிறுத்தி வைத்திருக்கிறது!

❈

இலை விழுந்த நேரம்
எழுந்திருந்தால்
நிச்சயம்
கிளையை காப்பாற்றியிருப்
போம்
போகட்டும்...
நல்ல சகுனம்
எமது பயணம்.
அடிமரத்திற்கு அழிவில்லை!

❈

பூமி மீது
பூத்து விழுந்த
விழி நீர் விழுதுகள் தான்
வாழ்க்கை விருட்சத்தை
தூக்கி வைத்திருக்கின்றன!

❈

இனி
பாடையில் ஏற்றி விட்டு
ஆடையை அபகரிக்க
எவராலும் முடியாது!

❈

நிஜ நிலவு
நிலத்தில் முகங்காட்டுமா?
வானத்தில் தானே—
அதனால் தான்
நாம் குனியாமல்
அண்ணார்ந்தே இருக்கிறோம்!

❈

ஈழப் பூவின் முக்கிய இதழ்கள்
நம் கை வசம்
இனியென்ன தயக்கம்?
மீதி இதழ்களையும் பறித்து
முழுப் பூவை
முத்த மிடுவோம்!

❈

விழி வானத்தில்
விடியல் சூரியன் உதிக்கட்டும்.
நெஞ்ச வீணை
வெற்றி ராகம் சிந்தட்டும்!

— ● —

''ஓம்... சம்மதிச்சவைதான்... இப்ப கூட்டிக் கேக்கினமாம்...''

அம்மா தன்னிடம் உண்மைக் காரணத்தைச் சொல்லாமல் மறைப்பதைப் புரிந்துகொண்டாள் அவள். 'ஷோபனா' என்று எழிலாகப் பெயர் சூடிக்கொண்டிருந்தாலும் வருடத்திற்கு வருடம் தனது சோபிதங்களெல்லாம் கரைந்து கொண்டிருப்பதனை —முகம் ஒட்டிப்போய்க் கொண்டிருப்பதனை நிலைக்கண்ணாடி அவளிடம் பலதடவைகள் சொல்லியிருக்கிறதே. அந்த உண்மையினை அவள் மறுத்துவிட முடியுமா?

''அப்ப... பிறகு... என்னம்மா முடிவு எடுத்திருக்கிறியள்...?''

செல்லம்மா பெருமூச்செறிந்தாள். சிறிது நேர மௌனத்தின் பிறகு ஷோபனா தொடர்ந்தாள்.

''அம்மா... நீங்கள் உண்மையை என்னட்டச் [சொல்லாமல் மறைச்சாலும் முழுக்கதையும் எனக்குத் தெரியும். பொம்பிளைவடிவில்லாட்டிலும் சீதனத்தைக் கூடத் தந்தால் என்னை ஏற்றுக் கொள்ளுறதாக அவையள் சொன்னால் நீங்களும் அதுக்குச் சம்மதிக்கிறதோ...? என்ர சந்தோஷம், என்ர மரியாதை இதுகளைப் பற்றி யோசிச்சியளோ...? இப்ப சீதனத்துக்காக என்னைக் கட்டுற மனிசன் நாளைக்கு என்னை எப்பிடி நடத்துவான்? என்னால "அந்த மரியாதை கேடுகளைத் தாங்கேலாதம்மா!''

குமுறலாய் வெளிப்பட்ட ஷோபனாவின் வார்த்தைகள் செல்லம்மாவைத் துணுக்குற வைத்தன.

அவளின் வார்த்தைகளிற் பொதிந்திருந்த உண்மைகள் நெருப்பாய்ச் சுட்டன.

''வேற என்னம்மா செய்யேலும் எங்களால...? நீயும் எத்தினை நாள் இப்பிடி வீட்டோட இருப்பாய் .?'' அவளின் குரல் அழுதது.

''நீங்கள் ஒண்டும் செய்ய வேண்டாம். எனக்குக் கலியாணம் பேச வேண்டாம். நான் கலியாணம் செய்யப் போறதில்லை. கலியாணமெண்ட பேரால என்னை ஒருவனுக்கு அடிமையாக்கிவிட நான் சம்மதிக்க மாட்டன். ...நான் தொடர்ந்து படிக்கப் போறன். ஒரு ஆம்பிளையின்ர துணை இல்லாமல் வாழமுடியுமெண்டு காட்டப் போறன்.

''உங்களின்ர கஷ்டத்தில நானும் பங்கு கொள்ளப்போறன். பொம்பிளப் பிள்ளையெண்டால் பெத்ததுகளுக்கு ஒரு சுமை— ஒரு பொறுப்புஎண்ட நிலை மாறவேணும்.

...ஓம் நான் எப்பிடியெண்டாலும் என்ர காலில நிற்க ஆசைப்படுகிறன்...''

குமுறலாய் வெடித்து —ஓங்கிய பிரகடனமாய் ஒலித்துக்கொண்டிருந்த அவளின் பேச்சில் அந்த அம்மா ஒரு புதிய பெண்ணைத் தரிசித்துக் கொண்டிருந்தாள்!

✽

## • இடி அமினுக்காகக் குரல் கொடுக்க வந்திருக்கும் அருமை மகள்

● முன்னாள் உகண்டாவின் சர்வாதிகாரி இடி அமினின் மகள்தான் நான் என்று கூறிக்கொள்ளும் கோலத்தி என்ற பெண் இங்கிலாந்தில் பிரபலமாகி வருகின்றாள்.

ஆறு அடி நாலு அங்குல உயரமும், 250 பவுண்டு எடையுமுடையவள். இடி அமின் பதவி இழந்த போது இங்கிலாந்தில் பட்டப்படிப்புப் படித்து வந்தாளாம் இடி அமின் பதவி இழந்ததால். அவள் இங்கிலாந்திலேயே நிரந்தரமாகத்தங்கிவிட்டாளாம்.

நான் அரச குடும்ப வாழ்க்கையை அனுபவித்தவள். எனவே தொடர்ந்து அரச வாழ்வு வாழ பணத்தைச் சம்பாதிக்கும் முயற்சியில் இறங்கப் போகிறேன் என்று கூறும் கோலத்தி தனது தாயை விட தந்தையை அதிகம் நேசிக்கின்றாள்.


எனது தாயாரை ஒரு நாள் எனது தந்தை கண்டதுண்டமாக வெட்டி குருமா செய்து சாப்பிட்டதாக ஒரு வதந்தி முன்னர் பரவியது. இது முற்றிலும் மாறானது. என் தந்தை என்மீதும் எனது தாயாரின் மீதும் அன்பு வைத்திருந்தார். எனது அம்மா புற்றுநோயால் தான் இறந்துபோனார்.

கோலத்திக்கு இங்கிலாந்தில் பல காதலர்கள் உள்ளனராம்! இடி அமினின் மகளோடு உறவு உள்ளது என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்ளும் இங்கிலாந்து இளைஞர்கள் இவளுடன் தொடர்பு வைத்துள்ளனராம். இவள் இப்பொழுது தனது வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாக எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாளாம்.

இடி அமினுக்கு ஏகப்பட்ட மனைவிகள். கோலத்தி எத்தனையாவது மனைவியின் மகள் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

தகவல்: அ.கொலின்ஸ் டொனல்ட்.

# எரிமலைகள்



★ கே. ஆர். டேவிட்

முத்துக்குமாரசாமி மாஸ்ரர் இப்பாடசாலைக்கு வந்து இரண்டு கிழமைகள் தான் ஆகுகின்றன. நியமனம் கிடைத்ததிலிருந்து, இது வரையில் அவர் சொந்த மாவட்டத்தில் வேலை செய்யவில்லை. ஒவ்வொரு வருடமும் காலந் தவறாமல் இடமாற்ற விண்ணப்பத்தை அனுப்பி விடுவார். முடிவு... தோல்வி தான்...!

இவர் மிகவும் நேர்மையானவர்... இந்த நேர்மை தான் அவரது இடமாற்றத்தில் இவவளவு காலமும் தடைக்கல்லாய் இருந்து வந்தது.

இந்த முறை அவரின் மனைவியின் வற்புறுத்தலால்... நேர்மையிலிருந்து சிறிது தவறி... ஒருவரைச் சந்தித்து... இடமாற்றம் கிடைத்து விட்டது.

''...மாஸ்ரர்... நீங்கள் உங்கடை நேர்மையிலை இருந்து கொஞ்சம் தவறியதாலை...இடமாற்றம் கிடைச்சிது... இன்னும் கொஞ்சம் தவறிப் பாருங்கோ... பெரிய பெரிய பதவியளிலை இருக்கலாம்...'' இப்படி பகிடியாகவும், அர்த்த புஷ்டியாகவும் சில ஆசிரியர்கள் முத்துக்குமாரசாமி மாஸ்ரருக்குக் கூறினர்!

முத்துக்குமாரசாமி மாஸ்ரர் இப்பாடசாலைக்கு வந்த அன்றைக்கே பாடசாலை அதிபர் தற்காலிகமானதொரு நேர சூசியைக் கொடுத்து விட்டார். அதிபர் கடமையைப் பொறுத்த வரையில் மிகவும் கண்டிப்பானவர்.

''மாஸ்ரர்... கடந்த இரண்டு வருஷமாய் இந்தப் பாடசாலைக்கு விஞ்ஞான மாஸ்ரர் நியமிக்கப்படவில்லை... இதுவரை விஞ்ஞான பாடம் படிப்பிக்கப்படவில்லை... அதாலை உங்களுக்கு நிறையக் கஷ்டம் இருக்கும்...'' விஞ்ஞான பாடத்தில், மாணவர்களின் நிலைபற்றி உள்ளதை உள்ளபடி அதிபர் கூறி விட்டார்.

தெரிந்தோ- தெரியாமலோ விஞ்ஞான கூடமொன்று கட்டப்பட்டிருந்தது. அதற்குள் 'பிருசோ' வெற்றுப் பேணியில் செய்யப்பட்ட ஒரு மண்ணெண்ணை விளக்கு மட்டும் இருந்தது...

மறு நாள் முத்துக்குமாரசாமி மாஸ்ரரும், பத்தாம் வகுப்பு மாணவர்களும், சேர்ந்து விஞ்ஞான கூடத்தைத் துப்புரவு செய்தனர்.

''மாஸ்ரர்... தேவையான பொருட்களுக்குரிய ஒரு பட்டியலைத் தயாரிச்சுத் தாருங்கோ... கந்தோருக்கு அனுப்புவம்'' அதிபர் கூறினார்.

பட்டியல் தயாரிக்கலாம் கந்தோருக்கு அனுப்பி வைக்கலாம். அப்பொருட்கள் வந்ததன் பின்பு தான் மாணவர்களுக்கு விஞ்ஞானம் கற்பிப்பதென்றால்...? மாணவர்கள் இன்னும் எத்தனையோ ஆண்டுகள் விஞ்ஞான பாடத்தை இழக்க வேண்டி வரும் என்பது முத்துக்குமாரசாமி மாஸ்ரருக்கு நன்குதெரியும்!...

முத்துக்குமாரசாமி மாஸ்ரர்- ஒரு பட்டதாரி.

அவர் ஆசிரிய நியமனம் பெற்று பதினெட்டு ஆண்டுகளாகுகின்றன... இவ்வளவு காலமும் அவர் பெற்ற ஆசிரிய அனுபவங்கள்?...!

மனித நெஞ்சங்களால் முடியாத ஒரே ஒரு காரியம்— தான் பெற்றுக் கொள்கின்ற அனுபவங்களை மறக்க முடிவதில்லை!

கடந்த இரண்டு கிழமைகளில் இரண்டு நாள் கர்த்தால்.. ஏனைய நாட்களில் மூன்று தினங்கள் 'ஷெல் வந்த பூமி' யாகி... பாடசாலை பூட்டியும், பூட்டாத நிலையில் ஓடினர்... ஐந்து நாட்கள் தான் பாடசாலை நடந்தது.

இன்று இதுவரையில் எந்தக் குளப்பமுமின்றி பாடசாலை நடந்து கொண்டிருக்கின்றது.

இப்போது மூன்றாவது பாடம், பத்தாம் வகுப்பிற்கு விஞ்ஞான பாடம்.

இன்று ஒரு எலியை வெட்டி அதன் உள்ளுறுப்புக்களை விளங்கப் படுத்துவதாக முத்துக்குமாரசாமி மாஸ்ரர் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குக் கூறியிருந்தார்.

இரண்டாவது பாடம் முடிந்த பத்தாம் வகுப்பு மாணவர்கள், மூன்றாவது பாடத்திற்காக விஞ்

ஞான கூடத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றனர். எலியை வெட்டுவதற்கு வேண்டிய உபகரணங்களை உள்ளடக்கிய ஒரு சீலைப் பையைத் தூக்கியவாறு ஆசிரியரும் அந்த மாணவர்களைப் பின் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றார். ஆசிரியரைப் பின் தொடர்ந்து இந்த வகுப்பு மொனிற்றரான சிலுவைராசா நடந்து கொண்டிருக்கின்றான். அவனது கையில் ஒரு வெற்று வீவாப் போத்தல், அதற்கு ஒரு எலி.

இன்றைய பாடத்தின் கருப்பொருள்.

''சிலுவைராடா...'' ஆசிரியர் நடந்து கொண்டே அந்தமாணவனை அழைக்கின்றார்.

''சேர்...''

''நீங்கள் இந்த ஊர்தானா...'

''இல்லைச் சேர்...''

''அப்ப எந்த ஊர்...''

''திருகோணமலையிலை, பன்குளம்..''

''இஞ்சை ஆரோடை இருக்கிறியள்—''

''கோயில் சுவாமியாரோடை...''

''ஏன் பாதிரியாரோடை இருக்கிறியள்...''

'... ' அவன் மௌனமாகவே நடக்கிறான்.

'என்ன சிலுவைராசா..'

'... நான் அகதியாய் வந்த ஒரு அனாதை சேர்...' தனது நிலையை அப்பட்டமாக அவன் கூறுகிறான்.

இவனைப் பெற்றவர்கள் இவனுக்கு எவ்வளவு பொருத்தமான பெயரை வைத்துவிட்டனர்... சிலுவைராசா... இந்த சிலுவைராசாவுக்கு, சிலுவையில் மரித்துப் போன அந்த யேசுராசாதான் இப்பாது சகலதும்? ..

அகதிகளாவதில் நம்மவர்களுக்கு உள்ள அனுபவம்...! கடந்த முப்பது ஆண்டுகள் .. பழுத்த அனுபவம்! என்று கூறுவார்களே... அதுதான்!

'கவலைப்படாதை சிலுவைராசா... 'கியூ'விலை உங்கடை குடும்பம் முன்னுக்கு நிண்டிருக்கு, அதாலை முன்னுக்கு அகதியாய்ப் போச்சு... நாங்கள் பின்னுக்கு நிக்கிறம்... இண்டைக்கோ, நாளைக்கோ... உங்களுக்குப் பின்னாலை நாங்களும் அகதியளாய் வருவம்...' ஆசிரியர் நிதானமாகக்கூறுகின்றார்.

நடந்து கொண்டிருக்கின்றனர்.

மிகவும் நீண்டதொரு கட்டிடம்' அக்கட்டிடத்தின் இடதுபக்கத்தெல்லையோடு ஒரு மேல் மாடிக்கட்டிடம், அதன் வலது பக்கத்தில் விஞ்ஞான கூடம், தெரிந்தோ தெரியாமலோ அரசாங்கத்தால் கட்டப்பட்டு சகலதையும் இழந்து வெறும் சுவர்களோடு மொட்டையாக நிற்கும் ஆசிரியர் விடுதி ஒன்று...! இவ்வளவுதான் இப்பாடசாலைக்குச் சொந்தமான கட்டிடங்கள்.

சனத்தொகை கணப்கெடுப்பாளர்கள் இங்கு வந்தால் நிட்சயம் கஷ்டப்படுவார்கள். ஏனென்றால் கீரைக்கொட்டை முளைந்திருப்பது போல், சனநெருக்கடி மிகவும் கூடிய இடம்! இவர்களுக்கென்றிருப்பது வசதி குறைந்த இந்த ஒரே ஒரு பாடசாலை மட்டுந்தான்!



உனக்கு எப்பவும் பழைய ஞாபகம்தான். நீ இப்படி கோட்,டை எண்டு போட்டுக்கொண்டு கொழும்புக்கு போனா, வழியில நடக்கிற ஆமி செக்கிங்கில' நீ கழுத்தில சுருக்கு மாட்டின கதையாத்தான் முடியப்போகுது.''

'மினிபஸ்ஸில்' பிரயாணம் செய்கின்ற அவதியோடுதான் இங்குள்ள மாணவர்கள் படிக்கின்றனர்...

ஏனைய பகுதிகளைப்போல இப் பகுதிக்கும் சகல அரசாங்க அதிகாரிகளும் வந்துதான் போகின்றனர்...!...? இந்தப்பத்திரிகைகளும் இல்லாவிட்டால், அநேக அரசாங்க ஸ்தாபனங்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள் இருக்கிறார்களா, இறந்துவிட்டார்களா என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும்!...

மாணவர்கள் விஞ்ஞான கூடத்தினுள் நிழைகின்றனர். அவர்களைத் தொடர்ந்து ஆசிரியரும் சிலுவைராசாவும் நுழைகின்றனர்.

சிலுவைராசா தான் கொண்டு வந்த வீவாப் போத்தலை மேசை மீது வைக்கிறான்.

அந்த எலி... பாவம் .. இன்னும் சில நிமிடங்களில் மரணித்து .. பலருக்கு விளக்கப் பொருளாகப் போகின்றது...

ஆசிரியர் மேலோட்டமாக மாணவர்களின் நிலையைக் கணக்கெடுக்கின்றார்... அவர் எதிர்பார்த்தளவிற்கு மாணவர்களிடம் உற்சாகத்தைக் காணமுடியவில்லை! .. இப்படியான செய்கை முறைப்பாடங்களில் மாணவர்கள் எப்போதுமே உற்சாகமாக இருப்பார்கள்...ஆனால் இவர்கள்...? ஆசிரியரின் மனம் சஞ்சலப்படுகின்றது.

உற்சாகமின்றிப் போனதற்கான காரணத்தை அவரால் ஊகிக்க முடியவில்லை ..

தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு வகுப்பைத் தொடங்குகின்றார்.

''எத்தனையோ உயிரினங்கள் இருக்க எலியை மட்டும் தெரிந்தெடுத்து, வெட்டி அதன் உள்ளுறுப்புகளைப் பார்ப்பதன் நோக்கம் என்னவென்றால்... எலியின் உடல் உள்ளுறுப்புகளுக்கும், மனித உடல் ஒள்ளுறுப்புகளுக்கும் நெருங்கிய உற்றுமையுண்டு...

...மனிதனை வெட்டி அவனது உள்ளுறுப்புகளைப் பார்ப்பது கஷ்டமான செயல். அதனால்தான் மனிதனோடு பெரும்பாலும் ஒற்றுமையுள்ள எலியைவெட்டி அதன் உள்ளுறுப்புகளை பார்ப்பதன் மூலம், மனிதனது உடல் உள்ளுறுப்புக்களை நாம் உணர்ந்து கொள்ளலாம்...

...எலியின் உடலுள்ளுறுப்புகளிலிருந்து மனிதனது உடல் உள்ளுறுப்புகளை உணர்ந்து கொள்வதுதான இந்தச் செயற்கைமுறை பாடத்தின் நோக்கம் ஆசிரியர் பாடத்தின் நோக்கத்தை விளக்கி, முக்கிய குறிப்புக்களைக் கரும் பலகையில் எழுத ஆரம்பிக்கிறார்.

சில நிமிடங்கள்...

திடீரென்று வகுப்பில் பலத்த சிரிப்பொலி...!

வகுப்பில் மாணவர்களிடம் உற்சாகமற்றுப் போனதற்கான காரணம் புரியாமல், ஆசிரியர் தனது உற்சாகத்தை இழ்ந்து கொண்டிருந்த நேரத்தில்... திரும்பவும் ஒரு சோதனை...!

சிரிப்பு...!

ஆசிரியர் கரும்பலகையிலிருந்து விடுபடவில்லை, ஆனால் அவரது மனம்...

ஏன் சிரித்தார்கள்?

பத்தாம் வகுப்பு... வளர்ந்த மாணவர்கள்... விசாரித்து தண்டனை கொடுக்கவும் முடியாது...

சிரிப்பதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டுமே... அதை மட்டும் அறிந்து கொள்வதென்று ஆசிரியர் முடிவு செய்கிறார்...

"சிலுவைராசா..." ஆசிரியர் வகுப்புமொனிற்றறை அழைக்கிறார்.

"சேர்" வழமையான பணிவுடன் சிலுவைராசா எழுந்து நிற்கிறான்.

"என்ன சிரிப்பு"

"சேர்..." அவன் தயங்குகிறான்.

"என்ன சிரிப்பு" ஆசிரியரின் கேள்வியில் கோபம் கலந்திருப்பதை சகல மாணவர்களும் உணர்கின்றனர்.

"இண்டைக்கு என்ன பாடந் தெரியுமா எண்டு இவன் ரவி என்னைக் கேட்டான் சேர்... அதுக்கு நான்... விஞ்ஞான பாடத்திலை செய்கைமுறை வகுப்பு எண்டு சொன்னன்...

செய்கைமுறை வகுப்புக்கு என்ன பேரெண்டு திரும்பக் கேட்டான்

...நான் தெரியாதெண்டன்

...அதுக்கு ரவி ஒரு பேர் சொல்லுறான் சேர்"

"என்ன பேர் சொன்னவன்..."

"அது..." சிலுவைராசா தயங்குகின்றான்.

"...சொல்லுங்கோ சிலுவைராசா..."

"...அந்தப் பாடத்துக்குப் பேர்... வன்செயலாம்..."

"என்ன..."

"வன்செயலாம்"

எலியை உயிரோடு அதன் உடலை வெட்டிப் பிளப்பது... அதைத்தான் ரவி வன்செயலென்று கூறினான்...

வகுப்பில் பெரும் அமைதி! ரவி எழுந்து நிற்கிறான்.

ஏன் ரவி அப்பிடிச் சொன்னனீங்கள் என்றொரு கேள்வியை ஆசிரியர் அவனிடம் கேட்கலாம்... ஆனால் முத்துக்குமாரசாமி ஆசிரியர் அதைக்கூட அவனிடம் கேட்கவில்லை!

அவர் என்ன தேவலோகத்துப் பிரசையா?!

'வன்செயல்..' இந்த மண், அவனது மனதில் ஏற்படுத்திவிட்ட பதிவு...!

மரத்துப்போன கைகள் இந்த மண்ணின் 'நாணயக்கயிற்றை' பிடித்திருப்பதனல் ஏற்பட்டவிளைவு!

அவன் ரவி என்ன செய்வான் பாவம்!

"சரி சரி.. பாடத்தைக் கவனியுங்கோ..." ஆசிரியர் சகலதையும் மறந்து, பாடத்தைத் தொடங்குகின்றார்..!

ஆனல் அவரது இதயம்.. அது 'பிளாஸ்ரிக்கில்' செய்த பொருளல்லவே! அது எரிந்துகொண்டுதான் இருக்கின்றது

ஆசிரியர் தான் கொண்டுவந்த ஒரு சீலைப்பைக்குள்ளிருந்து ஒரு வாயகன்ற போத்தலை எடுத்து அதை விளக்குகிறார்.



பெண்: ரமேஷ் வீடு இதுதானா?

பாட்டி: காலம் கெட்டுவிட்டது. பெட்டையளே பெடியனைத் தேடி வரத் தொடங்கியிட்டுதுகள்.

பெண்: அப்பிடியில்லைப் பாட்டி. ராத்திரி ரமேஷ் தெரியாம என்ர பெல்சை மாற்றிப் போட்டுக் கொண்டு வந்திட்டார். அதாலதான்...

"இந்தப் போத்தலுக்குள் உள்ளது 'குளோறபோம்' என்ற மயக்க மருந்து. இப்போது இந்த எலியை இதற்குள் விடப்போகிறேன், விட்ட சில நிமிடங்களில் எலிமயங்கிவிடும் எலிமயங்கினாலும் அதன் உடல்உறுப்புகள் சாதாரணமாக இயங்கிக் கொண்டே இருக்கும்...

..இதே மயக்கமருந்தைத்தான் ஆஸ்பத்திரிகளிலும் சத்திரசிகிச்சையின்போது டாக்டர்கள் நோயாளிகளுக்குக் கொடுக்கின்றனர்..." ஆசிரியர் கூறிவிட்டு அந்தப் போத்தலுள் எலியை விடுகின்றார். சில விநாடிகளில் எலிமயங்க அதை வெளியே எடுத்து, ஆசிரியர் தான் கொண்டுவந்த பலகையில் எலியின் வயிற்றுப்பக்கம் மேல் நோக்கி இருக்கக் கூடியதாக, நாலுகால்களையும்

இழுத்து குண்டுசியால் இறுக்குகின்றார்...

அடுத்து ரவி கூறிய வன்செயல்!

அதைவெட்டுவதற்கு வேண்டிய ஆயுதங்களையும் ஆசிரியர் கொண்டு வந்திருந்தார்.

எலியின் மார்பு வயிற்றுப்பகுதி கிழிபடுகின்றது... எலியின் உள்ளுறுப்புகள் பிதுங்கி மேலெழும்புகின்றன...

அதன் இதயம் துடிக்கின்றது...

பாடத்தின் உச்சநிலை...?

ஆனால் மாணவர்கள்...?

அவர்கள் வகுப்பிலேயே மௌனமாக இருக்கின்றனர்...

அவர்களுக்கு ஆர்வம் இருந்திருந்தால், அவர்களையறியாமலேயே எழும்பிவந்து மேசையைச் சூழ்ந்து கொண்டு, கேள்விமேல் கேள்வி கேட்டிருப்பார்கள்!...

ஆசிரியருக்கு ஏற்பட்ட மூன்றாவது தாக்கம்!

இன்றைய வகுப்பில் தொடர்ச்சியாகத் தனக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும்தோல்விகளுக்குரிய காரணம்?... தனது ஆசிரியவாழ்க்கையில் பெற்றுவிட்ட அனுபவங்கள் யாவுமே பொய்த்துவிட்டதைப் போன்றதொரு பிரமைஅவருக்கு!...

அவர் எதையுமே வெளிக்காட்டிக் கொள்ளவில்லை!

''நீங்கள் அமைதியான மாணவர்கள்...' பலவீனத்தையும், பலமாக்கிக் கொள்கிறார் ஆசிரியர்.

''சரி... எழும்பிவந்து வட்டமாய் நில்லுங்கோ...' ஆசிரியர் எலியின் உள்ளுறுப்புகளைக் காட்டி மனிதனின் உள்ளுறுப்புகளை விளங்கப் படுத்தத் தயாராகுகின்றார்.

சிலர் மட்டும் எழும்பி வருகின்றனர்...

பலர் வகுப்பில் எழும்பி வருகின்றனர்...!அவர்கள் வரவில்லை!...?

ஆசிரியருக்குத் தலை சுற்றி... சுய ஆளுமையே இழக்கின்ற நிலை...



''என்ன! உன்ர கொப்பர் தேங்காயும், பனங்காயுமா தவம் செய்யிறார்?''

''மூன்றாவது கண்ணிருந்தாத் தான் உலக அக்கிரமங்களை அழிக்கலாம் எண்டு யாரோ சொல்லக் கேட்டிட்டு வந்து இப்படி நிக்கிறார்.''

''ஓ!... அதுவும் சரிதான். இந்த இரண்டும் தான் தமிழரைக் காப்பாத்தப் போகுது.''

சீ... இவர்களும் ஒரு மாணவர்களா? .. ஆணவம் பிடித்தவர்கள்... இந்தப்பாடசாலையை விட்டுப் போய்விடவேண்டும்...

இப்படி எத்தனையோ சிந்தனைகள் அவரது இதயத்தில் சீறிவெடிக்கின்றன!...

சில விநாடிகள்...

அவர் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு, வகுப்பில் நின்ற மாணவர்கள் .. ஆசிரியரின் முகத்தைப் பார்க்கமுடியாமல் தலையைத் தாழ்த்திக் கொள்கின்றனர்...

ஆணவம் பிடித்தவர்களென்றால், தலையை நிமிர்த்தி ஆசிரியரை வெறிக்கப் பார்த்திருப்பார்கள். அவர்கள் அப்படியும் பார்க்கவில்லை!...

அது... அவர்கள் தலையைத் தாழ்த்திக் கொண்டது அது பண்புதான்!

அப்படியென்றால், வெட்டப் பட்ட அந்த எலியைப் பார்க்கவராமல் இருப்பதன் காரணமென்ன ...சிலவேளை இதற்கு முன் பார்த்திருப்பார்களோ ..

பணிவின் மொத்தவடிவமான அவன் சிலுவைராசா... அவன் கூட வகுப்பிலேயே நிற்கிறான்!

''சிலுவைராசா...'' ஆசிரியர் அழைக்கின்றார்.

''சேர்...

''...இதுக்கு முன்னம் எலியை வெட்டிப் பார்த்திருக்கிறியளா...''

''இல்லைச் சேர்...''

''இந்த எலியைப் பார்க்க உங்களுக்கு விருப்பம் இல்லையா...'

''......'' சகலருமே மௌனமாக நிற்கின்றனர்.

''சொல்லுங்கோ சிலுவைராசா..'

''அவசியமில்லைச் சேர்.'

''ஏன்...''

''...மனிசன்ரை உள்ளுறுப்புகளையே நான் பார்த்திருக்கிறன் சேர்...'' வேதனைக் கொப்புளங்கள் அவனது வார்த்தைகளில் வெடித்துச் சிதறுகின்றன...

''மனிசன்ரை உள்ளுறுப்புகளைப் பார்த்திருக்கிறியளா...'' ஆசிரியர் ஆச்சரியத்தோடு கேட்கிறார்.

''பார்த்திருக்கிறன் சேர்..''

''எங்கை ''

''.. சிலுவைராசா மௌனமாக ஆசிரியரைப் பார்க்கின்றான். அவனது கண்களில் கண்ணீர் பனிக்கின்றது.

''எங்கடை வீட்டில..''

''வீட்டிலையா...''

''ஓம் சேர் என்ரை அப்பா அம்மாவின்ரை உடலில் உள்ளுறுப்புகளைத்தான் நான் பார்த்தன் '' அதற்கு மேலால் அவனால் பேசவும் முடியவில்லை. நிற்கவும் முடியவில்லை, கதிரையில் அமர்ந்து, மேசை மீது படுத்துக் கொண்டு விம்முகிறான்.

அவனது கண்ணுக்கு முன்னாலேயே அவனது பெற்றோர் வெட்டிப் பிளக்கப்பட்டிருக்கின்றனர்.

யார் வெட்டினார்கள்?...

ஏன் வெட்டினார்கள்..?

இந்தக் கேள்விகளுக்கு அங்கு இடமிருக்கவில்லை!... ஏனென்றால்! இக்கேள்விகளுக்குரிய பதில்கள் விஞ்ஞான கூடத்திலுள்ள சகல இதயங்களிலும் 'இரும்புக்குழம்பாய் கொதித்துக் கொண்டிருக்கின்றன.

இதைக் கேட்டோ என்னவோ அந்த எலியின் இதயம் கூடத் துடிக்கின்றது.

பகுத்தறிவற்ற ஒரு எலியின் இதயம்! ? ஆசிரியரின் உடலிலுள்ள இரத்தம் ஒரு விநாடி உறைந்து... இப்போதுதான் ஓட ஆரம்பிக்கின்றது?

''பார்த்திருக்கிறன் சேர் ''

''எங்கை...''

''எங்கடை ஆக்கள் எங்கையெல்லாம் இருக்கினமோ அங்கையெல்லாம் இதே காட்சியள்தானே சேர்...'' நெட்டு முறிந்து, மரத்திலேயே தொங்கி, வெய்யில் வெக்கையில் வதங்கிப்போன மொட்டுப் போல், அவனது முகம் வேதனையால் வாடி விட்டது.

சிலுவைராசா... வீட்டிலை...

ரவி .. இந்தக் கிராமத்திலை...

தற்செயலாக ஏற்பட்ட ஒரு பசுக்கன்றின் மரணத்திற்குக் கூட ஒரு தண்டனையை அந்த அரசன் வழங்க முற்பட்டிருக்கின்றான்... அதுவும்தான் பெற்ற மகனுக்கு!...?

இங்கு இந்த மாணவர்கள்... இந்த மக்கள்...?

குசுனி அடுப்புக்கல்லிருந்து, பல மைல்கற்களைத் தாண்டி கடற்கரை முருகைக் கற்கள் வரை பசுமை மாறாத மனித இரத்தத்துளிகள்...

சுவாசிக்கின்ற காற்றில் அகால மரணமான மனித உயிர்களின் நெடில்!...!

# சிந்தனைக்கு ஒரு சாசனக் கவிதை

வடக்கே இமயத்தையண்டி எத்தனையோ க்ஷேத்திரங்கள். வடகைலை, பத்ரிநாத், ஸ்ரீசைலம், காசி' கேதாரம் என்று எத்தனையோ. எல்லாவற்றுக்கும் ஒரு இந்து ஸேவாந்திரி யாத்திரை செய்ய முடியுமா என்ன? இந்த எண்ணத்தாலோ என்னவோ தென்னகத்தில் பல தலங்களெழுந்தன. தென்கைலை, தென் மதுரை, தென்னரங்கம், வடபழனி, தென்திருப்பதி என்ற பெயர்கள் இதை நிலைநாட்டுகின்றன அல்லவா. காசியில் இறக்க முத்தி என்பார்கள். நடக்காதகாரியம் அல்லவா இதை யெண்ணினான் ஒரு மன்னன். (ஆம் நம் நாட்டிலும் கதிர் காமத்தை நினைக்கவே முடியவில்லை. பல உபய கதிர்காமங்கள் எழுந்தன. (சின்னக்கதிர்காமமான செல்வச்சந்நிதி போல்வன) எனவே காசிக்குப் பதிலாகத் தென்காசி கண்ட மன்னன்தான் பராக்ரம பாண்டியன். கோயிலுக்கானகால் கோளாயிற்று நல்வேளையில் வேண்டிய ஒழுங்குகள், திட்டங்கள் பண ஒதுக்கீடுகள் எல்லா மாயிற்று. வரைபடமும் பெரியஸ் தபதியிடம் ஒப்படைத்தாயிற்று. ஜாம் ஜாம் என வேலைகள் மின்னல் வேகத்தில். ஆண்டுகள் பன்னிரண்டு சென்றதும் ஆலயம் வானுற வோங்கி வளர்ந்து நின்றது. மன்னனுக்கு ஒரே பெருமிதம். ஆனால் அகம்பாவமில்லை நல்லோரையில் மூலவரை ஆவாகனம் பண்ணி பரிவாரமூர்த்திகளுட்பட அபிஷேகம். மகா கும்பாபிஷேகம் செய்வதற்கான பத்திரிகை வெளியாயிற்று எங்கும் விழாக்கோலம். வேத வொலி கான வொலி, பல்லியம் தமிழிசை. பூரணகும்பம், மகரதோரணம் இப்படி யெத்தனையோ காட்சிகள். அன்று இறுதி நாள். மன்னன் வந்தான். வந்தவன் ஒரு பாடலை அழியா ஓவியமாகத் தீட்டிக் கொணர்ந்துபதிக்கு முன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, பாடலமைந்த கருங்கல்லை முகப்பிலே எல்லார் பார்வையிலும் படியும் படிக்குப்பதிப்பித்தான். அவன் மூலவரையோ அங்குள்ள சிவாசாரியர்களையோ, கோவிலை அமைத்ததச்சர்களையோ வணங்கினனல்லன். யாரை வணங்கினான் என் பதைப்பாடலே சொல்லுகிறது. இதோ அப்பாடல்.

''ஆராயினுமிந்தத் தென் காசி மேவு பொன்னாலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்து அதனை
நேராகவே திருத்திப் புரப்பார் தமை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே''

எத்தனையோ நூற்றாண்டு கட்கு முன்னெழுந்த இப்பாடல். எக்காலத்துக்கும் பொருந்து மன்றோ. இப்போதைக்காக அப்போதே சொல்லிவைத்த பாண்டிய மன்னன் தென்காசியை எண்ணி இக்கருத்தை வெளியிட்டானல்லன். எக்காலத்துக்கும் பொருத்தமான வேண்டு கோளது. எனவே எமது காலத்திலும் நம் கோயில்களைப் பேணிக்காப்பது நம் தலையாய பணியென்றாலும், எமது இன்றைய சூழ் நிலையில் எம் பங்களிப்பு என்ன என்ற வினாவுடன் இருந்தாலும் வெளிநாட்டார் ஆட்சியிலும் மோசமான தொரு நிலையில் நம்சமயத் தொன்மையைப் பேணி வளர்க்கப் பின்னிற்காது சேவை செய்தல் இக்காலகட்டத்தில் இன்றியமையாதது. எனினும் கேளிக்கைகளும், ஆடம்பரங்களும் இல்லாத அமைதியான தொண்டு ஒன்றே நமக்கு வேண்டுவதாகும். இனிப் பாடலைப்படித்துப் பார்ப்போம்.

-முருகவே.

''ரவி... நீங்களும் மனிசன்ரை உள்ளூறுப்புகளைப் பார்த்திருக்கிறியளா '' ஆசிரியர் அடுத்தமாணவனைக் கேட்கிறார்.

''பார்த்திருக்கிறன் சேர்...''

''எங்கை...''

''...இந்தக் கிராமத்திலை [ எத்தனையோ தடவைகள்பார்த்திருக்கிறன்''

''மோகன் .. நீங்களும் மனிசன்ரை உள்ளூறுப்புகளைப் பார்த்திருக்கிறியளா ..''

மோகன் .. சகல இடங்களிலும்...

வீடு .. கிராமம் .. சகல இடங்களிலும் . மனித உடல்கள் பிளக்கப்பட்ட காட்சிகள் .. ?

பசுக்கன்றின் மீது தேரை ஏற்றியதற்குப் பிராயச்சித்தமாக அதே தேரைத் தனது மகன் மீது ஏற்றும்படி பணித்த அரசனது தார்மீக சிந்தனைகள் இப்போதும் பாதிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன...

கண்ணீர் காவியங்களைச் சுமந்து நிற்கும் அந்த மாணவர்களை முத்துக்குமாரசாமி ஆசிரியரால் நிமிர்ந்து பார்க்கமுடியவில்லை!

ஆசிரியரின் உடலிலுள்ள மயிர்த்துளைக் குழாய்களால் வியர்வைக்குப் பதிலாக, இரத்தம் கசிந்து கொண்டிருக்கின்றது.

வகுப்பு முடிவை அறிவிக்கும் பாடசாலை மணி அடிக்கின்றது.

# பாஸிஸம் வளர்ந்த வரலாறு...

## 'புதுமைப் பித்தன்'



## பேஸிஸ்ட் ஜடாமுனி

### 11. "பேஸிஸ்டி கம்பாட்டி மென்டோ"

முஸொலினி தன் யுத்த டயரியில், 1915-ம் வருஷம் அக்டோபர் மாதம், "இங்கு களத்திலிருக்கிறவர்கள் எல்லோரும், என் ஊருக்குப் போகிறேன்!' என்று சொல்வதில்லை, இத்தாலிக்குப் போகிறேன்!' என்று தான் சொல்லுகிறார்கள்" என்று குறித்து வைத்திருக்கிறான். இது கொழும்பு சிங்கப்பூர் சென்ற நம்மவர்கள் 'இந்தியாவுக்குப் போகிறேன்!' என்று சொல்லுகிற மாதிரி. சமாதானம் ஏற்பட்டதும் தேசத்தில் இந்த உணர்ச்சி குறைந்துவிட்டது. அபேத வாதிகள் கூக்குரல் எழுந்தது. ருஷியா, ஜெர்மனி, ஹங்கேரி முதலிய இடங்களில் தீவிரவாதிகளுக்கு ஏற்பட்ட வெற்றி இவர்களுக்கு அதிக நம்பிக்கையை உண்டுபண்ணியது. சர்க்காரும், அதன் யதார்த்த பலவீனத்தைக் காட்டியது; அசட்டையாகவும் இருந்தது.

இத்தாலியெங்கும் ஒரே கோஷம்! "தொழிற்சாலைகளெல்லாம் தொழிலாளர்களுக்கே! நிலங்களெல்லாம் விவசாயிகளுக்கே!"

இத்தாலிய டெலிகேட்டுகள் பாரீஸ் சமாதான மகாநாட்டுக்குச் செல்லுமுன் மந்திரி சபையில் பிளவு ஏற்பட்டது. அபேதவாதிகள் அதைப் பூரணமாக உபயோகப்படுத்திக் கொண்டனர். பாங்கி நெருக்கடியின் விளைவு மாதிரி நகரத்தில் எங்கும் ஒரே பீதி. மாஸ்கோ நகரத்திலிருந்து அபேதவாதிகளுக்கு உதவி வர ஆரம்பித்தது. இத்தாலிய அபேதவாதிகள் தைரியமாக வெளியில் இறங்கினர். எங்கு பார்த்தாலும் மாஜி ஸோல்ஜர்கள் பாடு ஆபத்து! அபேதவாத முத்தாய்ப்புகள் அவர்களுடைய நெற்றியிலில்லாவிட்டாலும் முதுகில் கொடுக்கப்பட்டன. 'ஸ்டிரைக்' மும்முரம் சொல்லி முடியாது; காட்டுத் தீ போல் தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை பரவியது. "எல்லாம் நமக்குத்தாண்டா!" என்று நினைக்க ஆரம்பித்துவிட்டனர் தொழிலாளர்கள் யாவரும். முதலாளிகள் அப்படி நினைக்கவில்லை. முஸொலீனி, அவன் பத்திரிகை, அணி வகுப்புச் சிதறிய ஸோல்ஜர்களின் கும்பல் எல்லாம் இருக்கும் பொழுது அவர்களுக்கு என்ன பயம்? பத்திரிகை உறுதியான ஸ்தாபனமாயிற்று. அதைச் சிற்றித் தேசியவாதிகள், வருங்கால வாதிகள் (!), 'டி அனன்ஸியோ' கட்சியினர் யாவரும் ஒன்றுக் கூடினர்.

1919-ம் வருஷம் இத்தாலிய யூனிடேரியன் அபேதவாதிகள் ருஷியத் தீவிரவாதிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபிதமாயிற்று. மிலானில் 'சிவப்புத் 'தினம்' கொண்டாடினார்கள். அபேதவாத லெட்சியப்படி, தேசியக் கொடி கிழித்து அவமதிக்கப்பட்டது. மாஜி ஸோல்ஜர்கள் வாய்க்கு வந்தபடி ஏசினார்கள். நெடுங்காலத் தவிப்புக்கப்புறம் கைப்பற்றப்பட்ட தேச எல்லைகள், திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இதன் எதிரொலி எல்லா நகரங்களிலும் கேட்கலாயிற்று.

மிலானில் ஸெப்போலெரோ மைதானம். 1919, மார்ச் 23ம் தேதி பெனிட்டோ முஸொலீனி தனது இருநூறு சகாக்களையும் கூட்டினான். 'பேஸிஸ்டி கம்பாட்டி மென்டோ' ஸ்தாபிக்கப்பட்டது. கட்சியின் சின்னம், ஈஸாப் கதையில் ஐக்கியத்தால் ஏற்படும் பலத்திற்கு உதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் விறகுக் கட்டு. பெனிட்டோ பூர்வத்தில் எலிமென்டரி பாடசாலை உபாத்தியாயரல்லவா? விறகுக் கட்டுக் கதை கூட ஞாபகமில்லாமலா போகும்! மற்றும் கட்சியின் திட்டம் வருமாறு:

1. யுத்தத்தில் தலையிட விரும்பியவர்களையும், யுத்தத்தில் வெற்றி கொடுத்தவர்களையும் ஒன்று கூட்டிச் சமாதானத்திற்கு ஏற்பட்டு வரும் அபாயத்தைத் தொலைப்பது.

2. பேஸிஸ்ட் ஸ்தாபனங்களை நாடெங்கும் ஆரம்பித்தல். யுத்தத்தில் தலையிட விரும்பியோர் நடத்தும் மகாநாட்டிற்கு அவை பிரதிநிதிகளை அனுப்பும்.

3. அந்த மகாநாடு, தேசத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராயும்.

4. அந்த மகாநாட்டின் விளைவாக ஓர் எதிர்ப்புக் கட்சி (பேஸிஸ்ட் கட்சி) ஆரம்பிக்கப்படும். அது இப்பொழுதுள்ள கட்சிகளின்

கொள்கைகள், மனப்போக்குகள், நம்பிக்கைகள், சித்தாந்தங்கள், விருப்பு வெறுப்புக்கள் எல்லாவற்றையும் எதிர்க்கும்.

5. இந்த பேஸிஸ்டுகளின் ஸ்தாபனம் இத்தாலிய தேச மக்களின் ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கப் பூர்வாங்க முயற்சியாக இருக்கும். இதில் மாஜி ஸோல்ஜர்களை ஏராளமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பழைய கட்சிகள் யாவும் செத்து விட்டன; அவைகளைப் புதைப்பது கஷ்டமில்லை.



ஒருவர்: என்ன பெரிய மீன் வாங்கிறீங்கள்?

மற்றொருவர்: பெரிய மீனுக்குள் மோதிரம் இருக்கிறதாம்.

ஒருவர்: என்ன?

மற்றொருவர்: ஆம்.

ஒருவர்: நெடுந்தீவிலே வெட்டிய சனத்தை மீன் சாப்பிடுகிறதாம்.

முடிவாக...

பிரச்சினைகளை எழுப்புவது எங்கள் நோக்கமல்ல; அவற்றைத் தீர்த்து வைப்பதே எங்கள் வேலை.

இப் பிரச்சினைகளைக் கிளர்ச்சி மூலம் முடிவுகட்டும் ஸ்தாபனம் எங்களுடையது தான்.

கிளர்ச்சி மட்டிலும் போதாதென்றால், சந்தர்ப்பங்களும், சம்பவங்களும், எங்கள் விருப்பமும் முடிவு கட்டுகிற பிரகாரம் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் ஸ்தாபனமாக இதை மாற்றுவோம்.

பேஸிஸ்ட் ஸ்தாபனம் நீடூழி வாழ்க! — சீக்கிரம் காரியத்திறங்கி விடுவோம்.

23, நவ. 1918. முஸொலினி

முஸொலினி, முதன் முதலில் தொழிற்சாலைகளில் தன் வேலையை ஆரம்பித்தான். யுத்தம் நின்றதும் கலைக்கப்பட்ட படைவீரர்கள் ஏகமேனியாகத் தொழிற்சாலைகளில் நுழைந்திருந்தனர். இத்தாலியில் மூன்று விதமான தொழிலாளர் சங்கங்களுண்டு. 1. தொழிலாளர் சம்மேளனம்; 2. இத்தாலிய ஸின்டிக்கல் சங்கம்; 3. இத்தாலியத் தொழிலாளர் சங்கம். மூன்றாவது ஸ்தாபனம் யுத்தத்தில் தலையிட வேண்டுமென்று கிளர்ச்சி செய்தவர்கள் நிறைந்தது. யுத்த காலத்தில் இருந்த தேசிய உணர்ச்சி பின்னர் ஏற்பட்ட ஏமாற்றத்தில் மறைந்தது. 1919ம் வருஷத்திலிருந்து ஸின்டிக்கல் தொழில் ஸ்தாபனங்கள் 'ஸ்டிரைக்' நடத்துவதில் முனைந்தன. அவற்றின் நோக்கங்கள் யாவும் அரசியல் விஷயங்களில் கலந்தவை. வேலை நேரப் பிரச்சினைகள் யாவும் காற்றோடு பறந்தன. தொழிலாளர் சம்மேளனத்திலிருப்பவர்கள் யாவரும் மாஜி ஸிடிக்கல்-வாதிகள். இவர்களும் மாஜி-ஸோல்ஜர்களும் தான் பூர்வத்தில் பேஸிஸத்திற்குப் பலம் கொடுத்தவர்கள். இந்த நிலையில் கீரைக் கடைக்கு எதிர்க்கடை போட்டார்கள் அபேதவாதிகள்.

1919 ஜனவரி மத்தி. லியோனிடா பிஸோலிட்டி, தான் மந்திரி சபையைவிட்டு ராஜினாமாச் செய்த காரணத்தையும், யுத்தத்திற்குப்புறம் சர்க்கார் கைக்கொண்டிருக்கும் கொள்கையையும் விளக்க, மிலானில் 'ஸ்காலா' கொட்டகையில் பேசப் போகிறான். எங்கு பார்த்தாலும் ஒரே கும்பல். லியோனிடாவைத் தொடர்ந்து, என்ன பேசுகிறான் என்பதைக் குறிப்பெடுக்க நிருபர்களும் வந்திருக்கிறார்கள். கூட்டத்தில் 'தால்மேஷியா வாழ்க!' 'சமாதானம், சமாதானம்! சமாதானம் நீடூழி வாழ்க!' என்ற கூக்குரல். கூட்டத்திற்கு வந்து திரண்ட பெண்களும் அதே பல்லவிகளைப் பாடுகிறார்கள்.

பின், சிறிது அமைதி. பிஸோலிட்டியும் அவனைச் சூழ்ந்து, யுத்தத்தில் காலும் கையும் போன, மெடல்களைத் தாங்கிய படை வீரர்களும், மேடைக்கு வருகிறார்கள். ஒரு புறம் ஆரவாரமான வரவேற்பு! மற்றொரு புறம் ஊளையும் உறுமலும்!

முஸொலினியும் சகாக்களும், தடிக் கம்பு சகிதம் சண்டைபோடுவதற்குத் தயாராக ஒரு பக்கத்தில் நிற்கிறார்கள். மண்டபத்திற்கு வெளியே தேசியவாதிகள், மாஜி அர்திதிப் படையினர் - யாவரும் கறுப்புக்கொடி தாங்கி, கூப்பாடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

முஸொலினி, ஒரு பெஞ்சியின் மீது ஏறிக்கொண்டு, ''அவன்பேசக் கூடாது, அவன் பேசவேகூடாது!'' என்று கூப்பாடு போடுகிறான். ஏதோ ஒரு மாதிரியாகக் கூச்சல் ஓய்வதற்கு அரைமணி நேரமாயிற்று. அந்த அமைதியும் ஐந்து நிமிஷந்தான். பிஸோலிட்டி பேசுவதற்காக வாயைத் திறந்தான். உடனே இரைச்சல் ஆரம்பித்துவிட்டது. அந்தக் கூப்பாட்டுக்கிடையே அவனது பேச்சும் அரைகுறையாகக் கேட்டது: ''யுத்தம் இத்தாலியின் பலத்தைப் பெருக்கியது; பியூம் இத்தாலிக்குச் சொந்தமென்பது நியாயந்தான்; ஆனால் தால்மேஷியாவை இத்தாலிய தேசம் என்று கருதுவது சரியல்ல. வடக்கு டைரால் பிரதேசத்தை இத்தாலி சேர்த்துக்கொள்வதும் விவேகம் என்று கருத முடியாது'' என்றெல்லாம் அடுக்கிக் கொண்டு போனான். அப்புறம் அமெரிக்கப் பிரஸிடெண்டு வில்ஸனையும், அவரது லட்சியக் குழந்தையான சர்வதேச சங்கத்தையும் வானமளாவப் புகழ ஆரம்பித்தான். ஆஸ்திரிய ஏகாதிபத்திய வரம்புக்குள் புதிதாக உருவெடுத்திருக்கும் தேசங்களுக்கு நியாயமும் நேர்மையும்வழங்கவேண்டுமென்றதன்கொள்

கையை விரிக்க ஆரம்பித்தான். உடனே கூப்பாடு எல்லை கடந்தது!

"அவன் தன்னை விற்றுக் கொண்டான்!"

"துரோகி, துரோகி!"

என்ற ஆரவாரம்! தேசியவாதிகளும் முஸொலீனியின் சகாக்களும் மேடைமீது பாய்ந்துவிட்டனர். பிரசங்கியார் மேடையைவிட்டு ஓடிப்போக வேண்டியதாயிற்று. விளக்கு அணைந்தது. அடிதடி! இருட்டோடு இருட்டாக ஊர்வலங்கள்! யுத்த கீதங்கள்! வெளியே ஹோட்டல்களில்கலகக்காரர்களின் கூட்டங்கள்!

வில்ஸனை ரோமாபுரி வரவேற்கிறது! அதே தினத்தில் 'போபோலோடி' 'இத்நாலிய' பத்திரிகையின் தலையங்கம் அதிதியைப் பின்வருமாறு வரவேற்றது:

"வீரர்களே, அஞ்சாதீர்கள்! அவசியமானால் நமது நகரத்துப் பையாஜாக்களிலும் தெருக்களிலும் டிரெஞ்சுகள் (பாசறைகள்) வெட்டி' உங்களைப் பாதுகாப்போம். நான்கு வருஷங்களாகப் போராடி உலகத்திற்கு வெற்றி தந்த மக்களுக்குப் போதகாசிரியர்கள் தேவையில்லை. கௌரவ போஷகர்களை அவர்கள் ஏற்கமாட்டார்கள். வேண்டுமானால் வில்ஸன் அமெரிக்காவுக்குப் பிரசங்கம் செய்யட்டும் அங்கு அவரைச் சட்டை செய்கிறவர்கள் ஒருவருமில்லை. இங்குவந்த அவருடைய கேவலமான மோடிகளை நம்ரத்தத்தில் ஏற்றவேண்டாம்!"

இந்தத் தலையங்கம் வெளிவந்த அன்றுதான் ரோமாபுரி வில்ஸனைக் கௌரவப் பிரஜையாக ஏற்றுக் கொண்டது! தேசிய அபேதவாத சித்தாந்தங்களை ஒட்டவைத்து நெட்டுருப்பண்ணிய அறியாத கிராமவாசிகளிடையே முஸொலீனியின் திட்டம் காட்டுத் தீபோல் பரந்தது. அவனுடைய அகண்டாகாரமான கனவின் வித்து இத்தாலிய நாட்டில் எப்படி முளைக்க ஆரம்பித்தது என்பதற்கு டஸ்கனி மாகாணத்திலுள்ள ஒரு பேஸிஸ்ட் 'சர்க்கா' ரின் அறிக்கையைக் கீழே குறிப்பிடுவோம்.

பேஸிஸ்ட் இலட்சியம் யுத்தத்தில் மாண்டவர், காமடைந்தவர் பேரால் பிறந்தது. நாங்கள் உழைப்பவர்களை எதிர்த்துப் போராடவில்லை. ஆனால், புனிதமான சிந்தனைகள் என்ற பெயரால் பொதுமக்களிடை வெறுப்பைச் சாகுபடி செய்பவர்கள் மீதே போர் தொடுத்திருக்கிறோம். மற்றவரைப் பிடுங்கித் தின்னும் பூர்ஷுவாக்களை எதிர்க்கிறோம். ஆனால் பொருளுற்பத்திக்கு ஆதாரமான பூர்ஷுவாக்களைப்பாதுகாப்போம். ஆட்சி எந்தவிதமானதாயிருந்தாலும் பிடுங்கித்தின் பவர்கள்தான் அதிருப்தி வித்துக்கள்.

"தொழிலாளர் விஷயம், கைத்தொழில், போக்குவரவு, சுகாதாரம் இவற்றின் தேசிய நிபுணர் கௌன்ஸில் அமைக்க நாங்கள் விரும்புகிறோம். அவ்வத் தொழில்களில் ஈடுபட்டிருப்போர் பிரதிநிதிகள் யாவரையும், எஜமானர்கள் உள்பட, கூட்டிவைத்துச் சட்டம் அமைக்க அதிகாரம் கொடுக்க விரும்புகிறோம். யார் ஆளுகிறது என்பது தற்கால, வருங்காலத் தர்ம ஒழுக்க நியதிக்கும், பொருளாதார நலன்களுக்கும் கீழ்ப்பட்டது. அதாவது, சரித்திரத்தின் தொடர்பையும், யதார்த்த நிலைமையையும் உணர்ந்த தேசமக்களின் கூட்டுறவு இது. ஆகையால், நாங்கள் இதை ஆதரித்து, தற்போது இருந்துவரும் அமைப்பை எதிர்க்கிறோம்.



சிங்கம்:- எங்கை இந்த வாளியுடன் போகிறாய். குளிக்கவோ?

குலம்:- இது எனது வெளிநாட்டு மச்சான் அனுப்பிய பாய்க்

சிங்கம்:- ? ? ?

"புதிய தேவைகளுக்கு ஏற்ப, முக்கியமாக வயது முதிர்ந்த தொழிலாளர், அல்லது விவசாயிகள், அல்லது வேலை செய்ய முடியாதவர்கள் முதலியோருக்கு வசதி செய்வதற்காகச் சமூகச் சட்டங்கள் எற்படுத்த விரும்புகிறோம்.

"மாஜி ஸோல்ஜர்கள், யுத்தத்தில் காயமடைந்தவர்கள், முதலியோருக்கு நாம் காட்டும் நன்றியறிதலுக்கு அறிகுறியாக அவர்கள் சங்கங்கள் யாவற்றையும் ஒன்றுபடுத்த விரும்புகிறோம்.

"மூலதனத்தில் மீது அதன் அளவிற்கேற்ப விகிதம் உயரும்வரித் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

"யுத்த ஆயுதக் குத்தகைகளையெல்லாம் மறுபடி பரிசீலனை செய்து யுத்தத்தில் கிடைத்த லாபங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

"அந்நிய நாட்டு விவகாரங்களில் பின்வரும் விஷயங்களை நாங்கள் விரும்புகிறோம். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை மீண்டும் பரிசீலனை செய்து மாற்றியமைக்கப்பட வேண் வேண்டும். அதாவது பெரியதுவேஷங்களையும், புதிய யுத்தங்களையும் ஏற்படுத்தக் கூடிய அதன் ஷரத்துக்களை மாற்றவேண்டும். லண்டன் உடன்படிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். பியூம் இத்தாலியோடு சேர்க்கப்படவேண்டும். லண்டன் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள இத்தாலியின் நலன்கள் காப்பாற்றப்பட வேணடும். இத்தாலி தேசத்தை மேற்கத்தி முதலாளித்துவ தேசங்களின் பிடிப்பிலிருந்து, நமது சர்வதேசப் பொருளாதார உற்பத்திச் சத்திகளை வளர்ப்பதின் மூலம், படிப்படியாக விடுதலை செய்யவேண்டும். நமது வடக்கு, கிழக்கு எல்லைகளை வற்புறுத்துவதன்மூலம், பகைத் தேசங்களான ஆஸ்திரியா, ஜெர்மனி, பல்

தேரியா, துருக்கி, ஆகியவற்றை ஒரே சமமாக, ஏற்றத் தாழ்வில்லா மல், தௌரவமாக நடத்துதல்; சோவியத் தென் கிழக்கு ஐரோப்பிய சர்க்கார்களும் உட்பட கீழ்ப் பிரதேசத்து மக்களுடன் உறவை வளர்த்தல்: காலனி உரிமைகளையும் தேசத்தின் தேவைகளையும் மீண்டும் வற்புறுத்துதல்-இவையே வேலைத்திட்டம்.''

தேசத்தின் பொருளாதார நிலைமையைச் சிறிது கவனித்தால் தேசத்தின் குழப்பத்திற்குக் காரணம் தெரியும், இத்தாலி யுத்தத்தில் ஈடுபட்டபொழுது வாட்டிகன் (ரோமாபுரி குருபீடம்) இடைவிடாது எதிர்த்தது. யுத்தத்தின் வசதியால் ஆரம்பித்த ஆயுதத் தொழிற்சாலைகள் ஏராளமான லாபத்தையடைந்தன. ஆனல் அதைத் தொடர்ந்தாற் போல் 'ஸ்டிரைக்' குகளும் கலகங்களும் நடந்தன. யுத்தத்தினல் சர்க்கார் செலவு அதிகமாயிற்று. யுத்தம் முடிந்தும் செலவு குறையவில்லை. கைத் தொழில்களுக்கும், ஏழைகள் உண விற்காகவும் ஏராளமான மானியம் கொடுக்கவேண்டி வந்தது. பொது மக்களின் செலவு, விலைவாசி உயர்ந்தமையால், அதிகரித்தது. அதன் விளைவாக எங்கும் தொழிலாளர் சச்சரவுகள். 1917—18-ம் வருஷத்தில் சர்க்கார் செலவில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் லையர் துண்டு விழுந்தது. பொது மக்கள் கஷ்டமும் குழப்பமான நிலைமைக்குச் சாதகமாகவேயிருந்தது.

முஸொலீனி அபேதவாதிகளுடன் போர் தொடுத்து விட்டான். அதற்கு 'போபோலோ டி இத்தாலியா' பத்திரிகையின் பைண்டு வால் யூம்களே அத்தாட்சி!

1919-ம் வசந்த காலத்தில் இத்தாலி முழுவதும் பொது 'ஸ்டிரைக்'. சர்க்கார் லெனினைக் கௌரவிக்கக் கூடாது என்று விடுத்த உத்தரவிற்குப் பொதுவுடைமைவாதிகள் அளித்த பதில்தான் நாடெங்கும் 'ஸ்டிரைக்கு' கள்! போலீஸார் பொதுவுடைமைவாதிகளைத் தாக்கினர். போலீஸ் கொடுமையை எதிர்த்தும் 'ஸ்டிரைக்கு' கள் வளர்ந்தன. மிலான், டூரின், பாரி, மெஸிஞ, ஜெனேவா, மைஸா, நேபிள்ஸ், பெருகியா முதலிய இடங்களில் கடைகள் சூறையாடப்பட்டன. பிஸன்ஸியோ பள்ளத்தாக்குக் அருகில், 1919-ம் வருஷம், ஜூலை மாதம் அபேதவாதக் குடியாட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இரத்தம் சிந்திய பின், உணவுப் பொருள்களின் விலையை 50/. குறைப்பதாகச் சொல்லிக் கிளர்ச்சிக்காரர்களைச் சமாதானப் படுத்தவேண்டியதாயிற்று. இது எங்காவது நீடித்திருக்க முடியுமா? இந்த ஏற்பாட்டை ரத்துச் செய்ததினல் மறுபடியும் கலகம். ஆகஸ்டு மாதம் அராஜகர்கள் வெடிகுண்டு வீச்சில் இறங்கினர்கள். பொதுவுடைமைப் பிரசாரம், யுத்தத்தில் பின்வாங்கிய துரோகிகளுக்கு மன்னிப்பு, இத்தாலிய ராணுவம் கலைக்கப்பட்டது,— இவை யாவும் குழப்பத்திற்குப் பன்மடங்கு பலம் அளித்தன.

1919-ம் வருஷம், அக்டோபர் மாதம் முதலாவது பேஸிஸ்ட் காங்கிரஸ் பிளாரன்ஸில் கூடியது. தேசத்திலுள்ள பொதுவுடைமைப் பிரசாரத்தைத் தொலைத்து, மாஜிஸோல்ஜர்களுக்கும், வெற்றி தந்த வீரங்களுக்கும் அவர்களது தியாகத்தை மதித்து உரிய ஸ்தானத்தை அளிர்பது என்பதுதான் முஸொலீனியிப் தலைமைப் பிரசங்கத் திட்டம். காங்கிரஸுக்கு 45,000 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பொதுவுடைமை வாதிகள் திட்டத்தைத் தாக்கினர்கள் காங்கிரஸ் ரிவால்வர் யுத்தத்தில் முடிந்தது.

காங்கிரஸ் நடைபெறும் சமயத்தில்தான் பொதுத் தேர்தல் ஆரம்பமாயிற்று. பேஸிஸ்டுகளும் தங்கள் திட்டத்தைச் செயலில் நடத்திக் காட்ட அபேட்சகர் பத்தொன்பது பேரை நிறுத்தினர்கள். முஸொலீனி பிரடாப்பியோ தொகுதியில் நின்றன். ஐயாயிரம் வோட்டுக் கூட அவனுக்குக் கிடைக்கவில்லை. மற்றப் பதினெட்டுப் பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பொதுவாக, அபேதவாதிகளுக்குத்தான் வெற்றி. மிலான் பேஸிஸ்டுகள் ஊர்வலமாய் வந்து 'போபோலோடி இத்தலியா' பத்திரிகை நிலயத்தைத் தாக்கினர்கள் ஒரு வெடி குண்டு வீசப்பட்டது. 12 பேருக்குக் காயம். போலீஸார் 30 பேஸிஸ்டுகளைக் கைது செய்தார்கள். முஸொலீனியும் கைது செய்யப்பட்டான். கைகளில் விலங்குகள் போடப்பட்டு, காவலில் வைக்கப்பட்டான், அபேதவாதிகள் தூண்டுதலில் பிரதம மந்திரி நிட்டி இந்த வேலை செய்ததாகப் பொது ஜனங்கள் ஆட்சேபித்தனர். 24 மணி நேரத்திற்கப்புறம் முஸொலீனி விடுதலை செய்யப்பட்டான். சட்டசபைக்குச் சென்ற அபேத வாதிகள் மன்னர் ஆட்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். டிசம்பர் மீ விக்டர் இமானுவல் பார்லிமெண்டைத் திறக்கச் சபைக்குள் பிரவேசித்த பொழுது, அவர்கள் யாவரும் ஒரேயடியாக வெளியேறினர்கள்.

அடுத்த வருஷமும் ஸ்டிரைக்-தொத்து வியாதி பற்றிக் கொண்டது. ரயில்வே, தபால் தொழிலாளர்கள், பொது சர்வீஸ்களிலிருக்கும் சிப்பந்திகள் யாவரும் 'ஸ்டிரைக்' செய்து நெருக்கடியை ஏற்படுத்தினர்கள். கராராவில் கல் உடைக்கும் தொழிலாளர், பெஸாராவில் அச்சுத் தொழிலாளர், வெரோனவில் டிராம்வே



''அம்மா! நான் விளையாடப் போறேன்.''

''அதுக்கென்னடா கண்ணு!''

''அன்புடன் துப்பாக்கி தந்தென்னை அனுப்பு''

தொழிலாளர், புரேனுவில் பாங்குச் சிப்பந்திகள், மிலான் போலா என்ற விடங்களில் இரும்புத் தொழிலாளர்— எங்கும், யாவரும் 'ஸ்டிரைக்' செய்தனர். இத்தாலிய பொதுவுடமைக்கட்சி, அதன் தேசியக் கௌன்ஸில் கூட்டத்தின் போது ஸோவியத் அமைப்பைப் போல் கட்சியை மாற்ற வேண்டுமென்று தீர்மானித்தது.

மிலான், அரிஸோ, அங்கோனு முதலிய இடங்களில் ரயில்வே பாதைகளில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டன. பேஸிஸ்டுகள் கிரிமோனுவில் 'சிவப்பு' ஊர்வலத்தைக் கலைத்தார்கள். பிளாரன்ஸில் அவர்கள் தோற்கடிக்கப் பட்டார்கள். நிட்டி (பிரதம மந்திரி) யின் சர்க்கார், ஒழுக்கத்தையும் அமைதியையும் நிலைநாட்டத் தவறியது. ஆனல், பழி யெல்லாம் பேஸிஸ்டுகள்மீது! சர்க்காரின் விசித்திரப் போக்கே போக்கு! 'ஸ்டிரைக்'கின் போது மிலான் பகுதியில் பேஸிஸ்ட் தொழிலாளர்கள் வேலையை விட்டு விலகாமலிருந்தது ஒரு குற்றமாம். பைஸா நகரத்தில் பொதுவுடமைவாதிகளே நியாயத்தின் காப்பாளர்களாக நின்று வேலையை விட்டு நீங்காதவர்களைச் சுட்டுக் கொன்றனர். பிப்ரவரி மீ 'ஸ்டிரக்' குகள் வளர்ந்தனவே யொழியக் குறையவில்லை. ரசாயனத் தொழிற்சாலையில் வேலை செய்த இரண்டு லட்சம் தொழிலாளர்கள் 'ஸ்டிரைக்' செய்தனர். மார்ச் மாதம் பொது ஸ்தாபன சிப்பந்திகள் வேலைக்குச் செல்லவில்லை. பீட்மண்டிலும் நேபிள்ஸிலும் பொதுவுடமைவாதிகள் தொழிற்சாலைகளைக் கைப்பற்றினர். நிட்டி சர்க்கார் குப்புறக் கவிழ்ந்தது: மறுபடியும் அதைத் தூக்கி நிறுத்த வேண்டியதாயிற்று! சர்க்கார் இலாகாவில் ஒவ்வொரு இனத்திலும் துண்டு விழுந்தது. மிலான் மேயர் அபேதவாதி; அப்படியிருந்தும் அவர் தேசியக் கொடியை உயர்த்தியதால் அவருக்கு வேலை போயிற்று. இப்படியாக அபேதவாத வெறியாட்டம் எல்லை கடந்தது. முஸொலினியின் கட்சியினரும் சாதுக்களல்லர் அவர்களும், அவர்களைப் போன்ற எதிர்ப்புக் கட்சியினரும் சர்க்காரின் வேலைகளைத் தாமே செய்ய ஆரம்பித்தார்கள். அதாவது, சொந்த ஹோதாவில் ஆயுதம் தாங்கிப் பொதுவுடமை வாதிகளோடு சண்டையிட்டார்கள். இவ்வளவும் இத்தாலிய சர்க்காரின் பலவீனத்தையும், செத்தும் சாகாத அதன் தன்மையையுமே காண்பித்தது. தேசம் யார் கையில் சிக்குகிறதோ அவர் தான் இனிமேல் ராஜா!

1920, மே மாதம், நிட்டி, பிரதம மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்தார். ஜூன் மாதம் அவரது மந்திரி சபை குடிப்போயிற்று. அப்போது தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 140 கோடி லையர் துண்டு விழுந்தது. பேஸிஸ்டுகள் நிட்டியை எதித்துத் தேசமெங்கும் போராடினுர்கள். நிட்டியின் போலீஸ் படை, நிராயுதபாணிகளான மாணவர்கள் தேசிய கீதம் பாடிய குற்றத்திற்காக, அவர்களைச் சுட்டது.

1919-ம் வருஷம் ஆம்ஸ்டர்டாம் இண்டர் நேஷனல்' ஓர் அகில ஐரோப்பிய 'ஸ்டிரைக்' நடத்தித் தொழிலாளர் யாவரும் ருஷியாவை ஆதரிப்பதைக் காட்டிக்கொள்ள விரும்பியது. பிரிட்டிஷ் தொழிலாளர் அதற்கு இணங்கவில்லை. பிரெஞ்சுக்காரர் ஓர் அரைகுறை 'ஸ்டிரைக், நடத்தினர் ஆனல், அந்த வேலை நிறுத்தத்தில் தலை குப்புறக் குதித்தது இத்தாலி தேசமே! இத்தாலியத் தொழிலாளர்கள், தங்கள் ஐக்கியத்தை நிரூபித்து, தேசத்தைப் படுகுழியில் ஆழ்த்திவிட்டார்கள்.


இந்தக் குழப்பத்திலே இன்னெரு நபர் வந்து சேர்ந்தான். அவன்தான் 1915-ம் ஷ விரட்டப்பட்ட கியோலிட்டி. இத்தாலியின் குணகுணங்களுக்கு அவன் நல்ல பிரதிநிதி. அதன் பலவீனத்தையும் அதன் வார்த்தை மாறும் தன்மையையும் அவனும் ஒருங்கே பெற்றிருந்தான் 1920-ம் ஷ ஜூலை மாதம் மறுபடியும் அவன் அரசியலில் புகுந்தான். அவனுடைய வருகை குழப்ப நெருப்பிற்குப் பெட்ரோல் ஊற்றியது. கட்சியோடு கட்சியை முட்டவிட்டு' ஆட்சியைப் பலப்படுத்த அவன் முயன்றான். அபேதவாதிகளைத் தொலைக்க பேஸிஸ்டுகள் உதவியைக் கோரினுன். சில சந்தர்ப்பங்களில் உதவி மறுக்கப்பட்டது.

பேஸிஸ்டுகள் பலம் அதிகரித்தது. அபேதவாதிகள் மேலும் ஐக்கியப்பட்டு, நெருங்கி, அணிவகுத்துப் போராடத் தயாரானுர்கள். காட்டு மிருகங்களின் தன்மையையும், மதுவுண்ட வெறியனின் குரூர உன்மத்தத்தையும் ஒருங்கே பெற்றது இந்த பேஸிஸ்ட் - அபேதவாதச் சண்டை. மிருகத் தன்மையும், குரூரமும், கொலை வெறியும் இத்தாலிய சமூக சரித்திரத்தின் பக்கங்களைக் கறைப்படுத்தின. வேனிற் காலம் முழுமையும் பெராராவும், பொலோனுவும் யுத்தப் பாசறைகளாகவே விளங்கின. இத்தாலிய தேசியக் கொடி மண்ணில் புரண்டது; காலித்தனம் ஆரம்பித்தது! கடைகள், தொழிற்சாலைகள், துறைமுகங்கள், கிடங்குகள் - எல்லாவற்றின் மீதும் வெடி குண்டு வீச்சு! வேலைநிறுத்தங்கள் வேறு! தொழிலாளர்களுக்கு 70 லட்சம் லையர் நஷ்டம்; ஐந்து கோடி லையர் மதிப்புள்ள பொருள் உற்புத்தி வீணுயிற்று! ●



பேச்சாளர்: சபையோருக்கு வணக்கம். நான் பேச எடுத்துக்கொண்ட விடயம், 59ம் ஆண்டு என்ன நடந்தது… 62ம் ஆண்டு என்ன நடந்தது?…
சபையோர்: என்ன நடந்தது!
பேச்சாளர்: என்ன நடந்தது…?

தொடர் நவீனம் :



# தீம் தரிகிட தித்தோம்

**செங்கை ஆழியான்**

அத்தியாயம்: ஏழு

அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் இந்தக் கடலுக்கு ஓய்வே கிடையாதா? யன்னலூடாக பரந்து விரிந்து கிடக்கும் சமுத்திரத்தையும், கரையில் ஓயாது மோதி நுரை மலர்களைச் சிந்தும் அலைக்கரங்களை பார்த்தவாறு சுரேந்திரன் அமர்ந்திருந்தான்.

கடற்பரப்பில் காலைக்கதிர்கள் பரப்பிய ஒளி வெள்ளத்தில் மீன் பிடிக்கும் பாய் விரித்த ஓரிரு வள்ளங்களும், அவற்றிற்கு அப்பால் ஆழ்கடல் வீதியில் கொழும்புத் துறை முகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் பாரிய கப்பலொன்றும் பார்வையில் பட்டன. பம்பலப்பிட்டிப் புகையிரத நிலையத்திற்குள் வருவதும் போவதுமாக இருந்த றெயின்களின் இரைச்சல் அச்சூழலின் அமைதியைக் குலைப்பனவாக அவனுக்குப்பட்டது. அப்புகையிரத வீதிகளுக்கு அப்பால், கடலரிப்பைத் தடுப்பதற்காகக் குவித்திருக்கும் கருங் கற்றிணிவுகளில் அவனும் சோமாவும் பல தடவைகள் மாலை வேளைகளில் அமர்ந்திருந்துள்ளார்கள்.

மாலைக்கதிரவனின் அஸ்தமனத்தில், தமது எதிர்கால வாழ்வின் உதயத்திற்கு அவர்கள் அத்திவாரமிட்டார்கள். எவ்வளவு கனவுகள்... எவ்வளவு நம்பிக்கைகள்...

அக்கா கடிதம் எழுதியுள்ளாள்.

'...தம்பி, நீ உங்கு ஒரு சிங்களப் பெண்ணுடன் சிநேகிதமாக இருப்பதாக இங்கு கதைக்கிறார்கள். அதைக் கேள்விப்பட்டதும் தளர்ந்து போனேன்...'

அக்காவின் நம்பிக்கை அவன் தான்; யாழபபாணச் சமூகத்தின் கிடுகு வேலிகளுக்குள் இருந்து பெருமூச்சு விடும், அவன் தமக்கையைப் போன்ற ஆயிரமாயிரம் குமர்களின் எதிர்கால நம்பிக்கைகள் கூடப்பிறந்த சகோதரங்களில் தான் இருக்கின்றது.

அவன் அக்கா அதற்கு விதி விலக்கல்லள்.

'...அண்ணை கட்சி கூட்டமென்று திரிகிறார். நீயாவது ஒழுங்காக எங்கள் குடும்பத்தைக் கவனிப்பாயென எல்லோரும் நம்பியிருந்தோம். அந்த நம்பிக்கையில் மண் விழுந்துவிட்டது...'

அவன் ஒரு பெண்ணைக் காதலிப்பதால், அவர்களது வாழ்வின் நம்பிக்கைகள் ஏன் தளரவேண்டும்? அவன் ஒரு சாதாரண கிளறிக்கல் சேவன்ற் அவன் உழைப்பது, அவனுக்கே கொழும்பில் சீவிக்கப் போதவில்லை. அப்படியிருக்க மாதா மாதம், மணியோடரில் ஒரு சிறு பணம் அனுப்பத் தவறுவதில்லை; அதைவிட அவனால் வேறு என்ன செய்துவிட முடியும்? அக்காவிற்கு ஏற்ற ஒரு மாப்பிள்ளையை விலைக்கு வாங்க அவனால் முடியுமா?

அவனது கற்பனை வேறு விதமாகச் சிந்திக்கத் தொடங்கியது.

...இந்த 1956 ஆம் ஆண்டின், உலகம் எவ்வளவு முன்னேறிவிட்டது. யாழ்ப்பாணம்தான் முன்னேறவில்லை. இன்றும் குமர்கள், வீட்டிற்குள் தான் முடங்கிக் கிடக்கின்றனர். பாடசாலைக்குப் போய் விட்டு வந்தால், அதன்பின் வெளியில் அவர்கள் தலைகளைக் காண முடியாது. கொளுத்தும் வெயிலில் கால் நடையாக மாணவிகள் பாடசாலைகளுக்கு நடந்து போக, மாணவர்கள் பலர் சயிக்கிள்களில் பாடசாலை போகிறார்கள். இந்தப் பெண்களும் சயிக்கில்களில் ஏறிச் சவாரி செய்தால், என்ன? பெற்றார் அனுமதிக்க மாட்டார்கள். தன் மனைவியைக் கூட சயிக்கில் பாரில் ஏற்றிப் பயணம் செல்லக் கணவன் சயிக்கிலை உருட்டிக் கொண்டு அல்லது மெதுவாகச் சவாரி செய்து கொண்டு போவதை அவன் கண்டிருக்கிறான். பெண்கள் வீதிகளுக்கு வரவேண்டும். அப்போது தான் பெற்றாருக்கும் கூடப்பிறந்த சகோதரர்களுக்கும் சுமை ஓரளவாவது குறையும்...?

'சாய், இப்படி எண்ணக் கூடாது' என தனக்குத் தானே கூறிக் கொண்டான். கொழும்புப் பெண்களைப் போல, யாழ்ப்பாணப் பெண்கள் மாறிவிடக்கூடாது.

இன்று அலுவலகமில்லை; ஆதலால், சற்று ஓய்வாக இருந்துவிட்டு, ஆஸ்பத்திரிக்கு நாகராசனைக் காணச் செல்லவேண்டும். அவனுடைய படுக்கை, வெறுமையாக அறையில் கிடக்கிறது. அவன் அறையில் இல்லாதது, கொடுந் தனிமையாகப்படுகிறது; பின்னேரம் சோமாவைச் சந்திக்க வேண்டும்.

அக்காவின் கடிதம் மீண்டும் நினைவில் வருகிறது.

'...போயும் போயும் நீ ஒரு சிங்களத்தியோடு சிநேகிதமாக இருப்பதை அறிந்து அம்மா அழுகிறு. ஐயா இடிந்து போனுர். கொஞ்சமாவது நீ யோசித்துப் பார்க்கவில்லை. அண்ணனைக் கொழும்பில் சிங்களவர்கள் அடித்து உதைத்தார்கள். நீ கண்ணுல் கண்டாய். அதற்குப் பிறகும் அப்படிப்பட்ட சிங்களவரோடை சகவாசம் வைக்க உன்னுல் முடிகிறதே...'

அக்கா பக்கம் பக்கமாகக் குமுறிக் கொட்டியிருந்தாள். அவளை அவனுல் சமாதானப்படுத்த முடியாது. அதற்காக அவனை நம்பியிருக்கும் சோமாவை அவனுல் இழக்கவும் முடியாது.

நாகராசன் சுகப்பட்டு வந்ததும் அவனேடு கலந்து பேசவேண்டும். சோமாவை விரைவில் திருமணம் செய்துகொள்வதைத் தவிர வேறு மார்க்கமுமில்லை.

அவன் உடைகளை மாற்றிக் கொண்டு, ஆற்பத்திரிக்குப் போகும் எண்ணத்துடன் படிகளில் இறங்கிக் கீழே வந்தபோது, ஹோலில் இருந்த ரெலிபோன் மணி ஒலித்தது. ஓடிப்போய் றிசீவரைக் கரத்தில் எடுத்தான்.

''ஹலோ...''

''மிஸ்ரர். சுரேந்திரன் பிளீஸ்...''

''ஸ்பீக்கிங்...''

நாகராசன் வேலை செய்யும் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து அவனை அழைத்தார்கள். எதிர்முனையில் சிறிது தயக்கம் தெரிந்தது; சில கணங்கள் தாம்.

'சுரேந்திரன்... உங்கள் பிரெண்ட நாகராசன் இன்று அதிகாலை மரணமானுர்...''

''ஓ... கோட்...'' என்று சுரேந்திரன் வீரிட்டான். அப்படியே இடிந்து போய், கரங்களால் தலையில் அறைந்தபடி கதிரையொன்றில் 'பொத்'தென அமர்ந்தான்

# மருத்துவம்

1. சிலருக்கு வாயின் ஓரத்தில் எச்சிற் புண்கள் இருக்கும். இவர்கள் எதையும் சாப்பிட முடியாமல் அவதிப்படுவார்கள். இதற்கு துளசி இலையை அரைத்து தேங்காய் எண்ணெயில் குழைத்து எச்சிற் புண்கள் மேல் தடவி வந்தால் மறைந்து விடும்.

2. நாட்டு மருந்துகளில்:- சீரகத்தை சர்க்கரையுடன் தினமும் தவருமல் சாப்பிட்டு வந்தால் தேகம் திடம் பெறும். உதட்டுப்புண் உதட்டு வீக்கம் எது இருந்தாலும் குணமாகி முகம் பொலிவுடன் விளங்கும்.

3. நீரிழிவு நோயாளிகள் அதைக் குறைக்க கொய்யாப் பழம் நன்ருக சாப்பிடலாம்.

4. **Parellaysis** என்னும் பக்கவாதநோய் பரவாமல் தடுக்கும் சக்தி பச்சை வெங்காயத்திற்கு இருக்கிறது. வெங்காயச் சாறு இரத்தத்தை இரத்தக் குழாய்களில் தங்கு தடையின்றி செலுத்த உதவுகின்றது. இருதய தாக்குதலுக்கு காரணமான கொலஸ்டிரோலைக் குறைக்கும் சக்தியும் பச்சை வெங்காயத்திற்கு இருக்கிறது.

தகவல்:-

**செல்வி திரௌபதி சிவலிங்கம்**

## 2

பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கவின் பிரதமர் இல்லம் அன்று மாலை கலகலப்பாக விளங்கியது அவருடைய மகனின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக, அங்கு பிரமுகர்கள் கூடியிருந்தார்கள்.

தமிழ்த்தலைவர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், சுந்தரலிங்கம், செல்வநாயகம் ஆகியோரும் காணப்பட்டனர்.

பிரதமர், சுந்தரலிங்கத்தைக் கட்டியணைத்து வரவேற்ருர், கலகலப்பாக அவருடன் பேசினுர்.

''பாராளுமன்றத்தில் எப்படி ஒருவரை யொருவர் திட்டிக்கொள்கிருர்கள் சண்டைபிடிக்கிருர்கள் இங்குபார்த்தால் எவ்வளவு அந்நியோன்யமாக இருக்கிருர்கள் பார்த்தீரா?...'' என ஒரு எம். பி. இன்னெருவரிடம் கூறினுர்.

''அது தான் அரசியல்..'' என்ருர் மற்றவர்.

''இன்னமும் கொழும்பில் இனக் கலவரம் பூரணமாக அடங்கவில்லை அதைச் சிறிது கவனிக்க வேண்டும் என்ருர் ஒரு தமிழ்த்தலைவர்,

''அதைப் பாராளுமன்றத்தில் பேசுவோம் இந்த மாலைப்பொழுதை அரசியல் கலக்காது இனிமையாகக் கழிப்போம்.. ''

''வெளியில் இருஇன மக்கள் அடிபடுகிருர்கள்... அவலப்படுகிருர்கள். இங்கு தலைவர்கள் ஒன்ருக் கூடிக் களிக்கிருர்கள்... என்ருர் ஒரு எம். பி.

''அடிபடுவது தொண்டர்கள் தாம்... தலைவர்களல்லர்''

''அதை சிங்கள மக்களும் தமிழ் மக்களும் புரிந்து கொள்ளவில்லையே?...''

'புரிந்து கொள்ளக்கூடாது...அது தான் அரசியல்...''

''அவ்விடத்தில் சிரிப்பொலி எழுந்தது.

## 3

அதிகவிலை பெண்கள் விடுதியின் விருந்தினர் அறையில் சோமாவும் சுரேந்திரனும், ஒருவரையொருவர் பார்த்தபடி நீண்ட நேரம் எதுவும் பேசாது அமர்ந்திருந்தனர்,

இருபது நாட்களுக்குப்பிறகு அன்று தான் அவர்கள் சந்திக்கின்றுர்கள்.

''சோமா... உன்னைச் சந்தித்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன... பல தடவைகள் முயன்றேன் முடியவில்லை.

சோமாவின் விழிகள் திடீரென கலங்கின. கரங்களுள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மத் தொடங்கினுள்.


''சோமா...'' அவன் துடித்துப் போய் அவளை அழைத்தான்; ''என்ன சோமா... என்ன? . என்ன நடந்தது . ?''

அவள் ஓரிரு நிமிடக் கழிவில் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் விழிகள் நீரைச் சிந்தின.

''சுரேன்... என் அண்ணன் இறந்து போனுன்? ..''

உண்மையில் அவன் இதயம் ஒரு கணம் அதிர்ந்ததை அவனுல் உணர முடிந்தது. அவனுல் எதுவும் பேசவே முடியவில்லை. விஜயபாலவின் மீது ஆரம்பத்தில் அவனுக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. பின்னர் அவன் காடையர்களோடு சேர்ந்து தன்னைத் தாக்காதுவிட்ட அந்தச் செயலின் விளைவாக ஓரளவு மனிதவுணர்வு உள்ளவன் என்ற எண்ணம் ஏறிட்டிருந்தது.

''என் நண்பன் நாகராசனும் கலவரத்தில் கொல்லப்பட்டு விட்டான், சோமா... சிங்களக் காடையர்கள், பஸ்சிலிருந்து அவனை வெளியே இழுத்துப்போட்டு அடித்துக் கொன்று விட்டார்கள்... ஆஸ்பத்திரியில் அவன் இறந்து போனுன்...''



ரமேஷ்:- என்னப்பா உன்ரை மகன் கண்ணேடு போகிருன்.

செல்லர்:- என்ன கண்ணேடு போகிருஞ?

ரமேஷ்:- ஆம்

செல்லர்:- அது என்னப்பா?

ரமேஷ்:- அது தான் அவங்கட துப்பாக்கியாம்.

சோமா அவனை ஆழமாக ஊன்றிப் பார்ப்பதாகப் பட்டது; அவள் விழிகளில் அவன் முன்னர் எப்போதும் காணுத ஒரு வித வெறியுணர்வின் நிழலாட்டத்தைக் கண்டான்.

''சிங்களவர் மட்டுமா, சுரேன் காடையர்கள்? தமிழர்களில் காடையர் இல்லையா?... மருதானையில் சும்மா நின்றிருந்த அண்ணனைத் தமிழர்கள் தாக்கினுர்கள்...''

''நம்பமுடியாது, சோமா? உன் அண்ணன் விஜயபால, சிங்களக் காடையரோடு சேர்ந்து, தமிழரைத் தாக்கியதை நான் என் கண்களால் கண்டேன்... நான் வந்த பஸ்சிலிருந்த அத்தனை தமிழரதும் பொருட்களைப் பறித்தெடுத்துக் கொண்டு, அவர்களை உன் அண்ணனும் ஏனையோரும் கதறக் கதறத் தாக்கினுர்கள்...''

''பொய்... நான் நம்பமாட்டேன். செத்துப்போன அண்ணன் மீது வீணுகப் பழிசுமத்த வேண்டாம்... பொறுகியன்ட்ட எப்பா, சுரேன்! பொய் சொல்ல வேண்டாம்... [என் ]அண்ணன் அப்படியல்ல... மருதானையில் சும்மா நின்ற அண்ணனை, ஒரு தமிழன் பாய்ந்து, தொண்டையில் கடித்துக் குதறி... வெறி ராய்... தெமிளயக்கோ... பறைவல்லோ... பறைநாய் சோமா வீரிட்டலறினுள்.

அவள் அலறலில் அந்த விடுதி ஒரு கணம் கிடுகிடுத்துப் போயிற்று. சிலர் ஓடி வந்து எட்டிப்பார்த்தார்கள்.

''என்ன... என்ன?...''

''ஒன்றுமில்லை..., என்று கண்களைத் துடைத்துச் கொண்டாள், சோமா.

சுரேந்திரன் சிலையாகிவிட்டான் இதயத்தில்' ஆயிரமாயிரம் சன்னங்கள் நுழைந்து வெளியேறிய உணர்வு; அயர்வு.

''நான் பொய் சொல்லவில்லை, சோமா... நாகராசனின் மரணத்திற்கும் விஜயபாலதான் காரணம்... ஏன் அப்படி ஒரு துவேஷம் அவனுக்குத் தமிழர்மீது...?''

சோமா வீருட்டென்று இருக்கையைவிட்டு, எழுந்தாள். அவள் உடல் வெடவெடவென நடுங்கியது.

''என் அண்ணனை எனக்குத் தெரியும். வீணுப்பழிகூற வேண்டாம். தமிழரே இப்படித்தான்... போயிடுங்க... தயவுசெய்து போயிடுங்க... என் அண்ணன் மீது பழி போடும் உங்களோடை... எப்படி...? ஏன் என் அண்ணனைப் பழிகூறி... போயிடுங்க... பிளீஸ் போயிடுங்க...''

சோமா, விருந்தினர் அறையை விட்டு வெளியே வந்து, மாடிப்படிகளில் ஏறித் தன் அறைக்கு விரைந்து ஓடிச்சென்றுன்.

''சோமா...'' என்று அழைக்க எழுந்த ஆவல், தொண்டைக்குள் தடைப்பட்டுச் சிதைந்தது. மனம் கலங்கிச் சேருகியது. மெதுவாக விடுதியைவிட்டு, வெளியே வந்தான்.

காலி வீதியை நோக்கி நடக்கும்போது, துயரத்தின் இருள் போர்வை அவனை மூடியதுபோல ஒரு தவிப்பு அவனை ஆட்கொண்டது.

அவன் காலி வீதியில் ஏறிய போது, -பிரதமர் மாளிகையில் சிரிப்பொலி எழுந்தது.

—முற்றும்—

# சிறுவர் கலைக் களஞ்சியம்



சீனச் சுற்றுப் பயணக் கடிதங்கள்.

## தொழிற்சாலைத் தொழிலாளர்களுடன்

2

பீக்கிங்
ஜூலை. 73.

அன்புள்ள சுமதிக்கு:

நாங்கள் அடுத்த நாட்காலை பத்து மணியளவில் சாங்சுன் நகரத்தை அடைந்தோம். இது சீனுவில் கிறீன் மாகாணத் தலைநகரம். முழு சீன வினதும் தலைநகரம் பீக்கிங் என்பது உங்களுக்குத் தெரியும். சீனுவில் தைவான் உட்பட 22 மாகாணங்களும் 5 சுயாட்சிப் பிரதேசங்களும் உண்டு. ஒவ்வொன்றிலும் தலைநகரம் உண்டு.

சாங்சுன் நகரத்தில் நாம் புகையிரதத்தை விட்டிறங்கியதும் நாலு ஐந்து சினத் தோழர்கள் எம்மைக் கூட்டிச் செல்ல வந்திருந்தார்கள். நாங்கள் புகையிரத சிப்பந்திகளுக்கு கைகுலுக்கி நன்றி கூறிப் பிரியா விடை பெற்றேம். பின் சாங்சுன் நகரப் புதிய நண்பர்களுடன் கை குலுக்கி அறிமுகமானேம். அவர்கள் எங்களுடைய சூட்கேசுகளைத் தாம் எடுத்துச் சென்ருர்கள். குசலம் விசாரித்து புகையிரதப் பயணம் களைப்பா என்று கேட்டார்கள். புகையிரத நிலையத்திலுள்ள ஓய்வறையில் சற்று நேரம் ஓய்வெடுக்கச் சொல்லித் தேநீர் தந்தார்கள்.

சீன மக்கள் எங்களைப் போல் சிவப்பான தேநீர் குடிப்பதில்லை. தேநீரில் சீனி பால் கலப்பதில்லை. பச்சை இலைத்தேயிலை, பூத்தேயிலை ஆகியவற்றைக் குடிக்கின்ருர்கள். இதில் ஒரு விசேஷம் என்னவென்ருல் தேயிலையைப் போட்டு வெந்நீரை ஊற்றிக் குடிக்கின்றேம். பின் அதே தேயிலை இருக்க வெந்நீரை ஊற்றி ஊற்றி நாள் முழுவதும் குடிக்க முடியும்.

சாங்சுன் புகையிரத நிலையத்திலிருந்து மூன்று கார் மூலம் நாம் ஒரு பெரிய ஹோட்டலுக்குச் சென்றேம். அங்குதான் நாம் வாழ்ந்தோம்.

சாங்சுன் ஒரு பெரிய தொழிற்துறை நகரம். தொழிற்துறை நகரம் என்ருல் பெரிய தொழிற்சாலைகள் உள்ள நகரம் என்று அர்த்தப்படும். காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு நீங்கள் சென்றிருக்கிறீர்களா? கார் உற்பத்தி செய்யும் ஆலை, ரசாயன உர ஆலை முதலிய தொழிற்சாலைகள் இங்குண்டு.

மூன்று நாட்களுக்கு மேலாக இந்நகரத்தில் தங்கியிருந்தபோது நாம் லொறி, கார் உற்பத்தி செய்யும் ஒரு ஆலையைப் பார்த்தோம். எமது நாட்டில் இன்னும் இத்தகைய ஆலை இல்லை.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் எம்மை மகிழ்ச்சியுடன் வரவேற்ருர்கள். ஒவ்வொரு பகுதிக்கும் கூட்டிச் சென்று காட்டினுர்கள். விபரமாக விளக்கிக் கூறினுர்கள். தொழிற்சாலையின் பல்வேறு சிறு பிரிவுகளை வேலைக்கூளரிகள் (**work shops**) என்று அழைப்பார்கள்.

சீனுவில் தொழிலாளர்களின் அந்தஸ்து இலங்கையிலும் பார்க்க வித்தியாசமானது. இலங்கையில் தொழிலாளர்கள் தாழ்ந்தவர்களாக கருதப்படுகின்ருர்கள். ஆனுல் சீனுவில் அவர்கள் முக்கியமானவர்கள்; நாட்டின் எஜமானர்கள். தொழிற்சாலைகளை நடத்துவதில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. நாங்கள் சென்றவிடமெல்லாம் ஆண் தொழிலாளர்களும் பெண் தொழிலாளர்களும் கைதட்டி, கைகாட்டி எமக்கு வரவேற்புத் தெரிவித்தார்கள்.

தொழிற்சாலைகளைப் பார்த்து முடிந்தபின் தொழிலாளர்கள் வாழும் இல்லங்களுக்கு எம்மை அழைத்துச் சென்றார்கள். தொழிலாளர்களுக்கெனப் பல குடியிருக்கும் கட்டிடங்கள் உண்டு. இவை அநேகமாக நாலு ஐந்து மாடிக் கட்டிடங்கள். இவற்றில் மின்சார வெளிச்சம், காஸ் அடுப்புடன் கூடிய குசினி, பைப் நீர் முதலிய வசதிகள் உண்டு. சில தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் உள்ள சாப்பாட்டு விடுதிகளில் சாப்பிடுகிறார்கள். அநேகமாக தொழிற்சாலைக்குச்சொந்தமான வீடுகளில் தொழிலாளர்கள் வாழ்கின்றார்கள்.

தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லும்போது குழந்தைகளை விட்டுச் செல்ல பாலர் பராமரிப்பு நிலையங்கள் இருக்கின்றன. தொழிற்சாலைகளில் சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் மருத்துவ நிலையங்கள் உண்டு.

சாங்சுனில் நாம் இன்றும் மருத்துவக் கல்லூரி, கலைப் பயிற்சிக் கழகம் ஆகியவற்றைப் பார்த்தோம். மருத்துவக் கல்லூரியில் நால்வருக்கு ரண சிகிச்சை (ஒப்பரேஷன்) செய்வதைக் கண்டோம். ரணசிகிச்சையை நான் அப்பொழுது தான் முதற் தடவையாகப் பார்த்தேன். இதுபற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகின்றேன்.

அன்புடன்
தம்பி மாமா

# தீம் தரிகிட தித்தோம் - ஒரு வாசகர் கருத்து

''என்கடையில் வந்து தோசை சாப்பிட்டவர்களே என் கடையை அடித்து உடைத்தார்கள். உவங்களைச் சும்மா விடமாட்டன்'' என நடராசா பொருமினார்.

''என் அப்பனுக்குப் பிறந்த ஒருவன் கூட கடையைக் கொள்ளையிட்டான்... வேசை மோன்''

—இவ்வாக்கியங்களை நான் வாசித்தேன். உயர்ந்த ஓர் இலட்சியத்தை மக்கள் பால் ஜனரஞ்சகப் படுத்தலே இத்தகைய உள்ளடக்கமான கதை நாவலாசிரியரால் எழுதப்படுகின்றது என்பது உண்மையாயினும் சொற்பிரயோகங்கள் இலட்சிய நோக்கை சீரழித்துவிடும் என்பது எமது அபிப்பிராயம்.

தென்னிலங்கையில் நம்மவர் பலர் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தொழிலதிபர்களாக இருந்து வந்துள்ளனர். அவர்கள் அனைவரும் அல்லது பெரும்பான்மையோர் சிங்களப் பெண்களை வைப்பாட்டிச்சிகளாக வைத்திருந்தார்கள் என நாவலாசிரியர் கருதுகின்றாரா? அத்தகையதோர் மன உணர்வை வாசகர் மத்தியில் நாவலாசிரியர் ஏற்படுத்த முனைகிறாரா?

அதுமட்டுமன்றி தந்தையின் பலவீனங்களை மகன் அறிந்து வைத்திருந்தானா? தன் தந்தைக்குத்தான் அக்குறிப்பிட்ட பேர்வழி பிறந்தான் என்பது நடராசா எவ்வாறு அறிந்தான். தந்தை மகனுக்குச் சொல்லிப் போட்டு போனவரோ? தன் தந்தைக்கு அவன் பிறந்தான் எனில் ஏலவே நடராசாவுக்கு ஏன் ஓர் சகோதர பாச உணர்வு ஏற்படவில்லை. இத்தகைய வார்த்தைப் பிரயோகங்களும் கதைப்போக்கும் இளஞ்சந்ததியினர் மத்தியில் ஓர் குழப்பமான சிந்தனை உணர்வைத் தோற்றுவிக்கும். அதாவது 1983 ஆம் ஆண்டு யூலைக் கலவரத்தின் முன் தென்னிலங்கையிலே கொடிகட்டிப்பறந்த எம்மின முதலாளிகள் பலர் சிங்களப் பெண்களுடன் தகாத உறவு வைத்துக் கொண்டவர்கள் என்பதாகும்.

ஏனெனில் எதிர்காலத்தில் நிச்சயமாக தென்னிலங்கையில் இத்தகைய தமிழ் முதலாளிகள் தோன்றப் போவதில்லை. தோன்றாத பட்சத்தில் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் எதிர்காலச் சந்ததியினருக்கு இருக்கப்போவதில்லை. உண்மை நிலையினை அறியவும் முடியாது.

அடுத்து வேசை மோன் என்ற சொற்பிரயோகம், யாமும் தமிழ் மொழியினை சிறப்புப் பாடமாகப் பல்கலைக்கழகத்தில் கற்றவன்தான். தமிழ் இலக்கியம் பற்றிய அறிவு ஓரளவுண்டு. இந்நிலையில் இச் சொற்பிரயோகம் அமிர்த கங்கையை ஓர் மஞ்சள் பத்திரிகையாக சில வாசகர் கருத இடமளித்து விடும். எனவே எதிர்காலத்தில் நாவலில், சிறுகதைகளில் இடம்பெறும் சொற்பிரயோகங்கள் எவ்வளவு தூரம் தமிழ் கூறும் நல்லுலகத்தில் வரவேற்கப்படும், வரவேற்கப்படாது என்பதனையும் தங்கள் ஆசிரியர் குழு கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதும் எமது, அபிப்பிராயமாகும்.

சுண்டுக்குளி — ச. பாலசுந்தரம்

(வாசகரின் கருத்துப்பற்றி, பிறரிடமிருந்தும் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன— ஆ.ர்)

## புலிக்குக் கிடைத்த பெண்டாட்டி

அஸ்ஸாமியக் கதை

ஒரு கலியாணத்தை முடித்து வைத்து விட்டுப் பிராமணர் ஒருவர் காட்டுவழியாக வந்து கொண்டிருந்தார்.

வழியிலே ஒரு புலி எதிர்ப்பட்டது. 'பிராமணரே எங்கே போய் விட்டு வருகிறீர்?' எனக் கேட்டது.

'நான் ஒரு கலியாணத்தை நடத்திக் கொடுத்து விட்டு வருகிறேன்'— என்றார்.

'அப்படியானல் எனக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து கலியாணம் செய்து கொடும்' என்றது புலி.

'உனக்கா?' என்று கேட்ட பிராமணர், பயத்தால் நடுங்கி, 'இப்போது நேரமில்லை. வீட்டில் மனைவி காத்திருப்பாள். ஒருவாரம் கழித்து என் வீட்டுக்கு வா. கலியாணம் செய்து வைக்கிறேன்'' என்றார். புலி அவரைப் போக விட்டது.

பயத்துடன் வீட்டிற்கு வந்த பிராமணர் மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினர். அதற்கு அவள் 'ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். புலிவந்தால் நான் கூறுகிறபடி நடவுங்கள், என ஆறுதல் கூறினாள்.

ஒருவாரம் சென்றதும் புலி அவர்கள் வீட்டை நோக்கி வந்தது. ''கலியாணத்துக்கு தயாரா?'' என்றது. 'தயார்' என்றனர் இருவரும்.

பிராமணர் முதலில் ஒரு பீப்பாவைக் காட்டி இதற்குள் போகும்படி புலியிடம் கூறினர். ஏன் என் என்றது புலி. திருமணச் சடங்கில் ஒரு அங்கம் என்றார் புரோகிதர். புலி உள்ளே சென்றதும் அதனை ஒரு மூடியால் மூடினர். புலி மீண்டும் ஏன் எனக் கேட்க, முன்பு போல் பதிலளித்தார். பின்னர் அந்தப் பீப்பாவைக் கொண்டு போய் ஓடும் நதியில் போட, புலி காரணம் கேட்க, இதுவும் திருமணச் சடங்குதான் என்றார்.

நதியில் மிதந்த பீப்பா, கரை தட்டிய போது எதிர்பாராத விதமாக பெண்புலி கண்டு, அதனை எடுத்துத் திறந்தது. இரண்டும் ஒன்றையொன்று விரும்பி திருமணம் செய்து கொண்டு, பிராமணருக்காக ஏராளமான பரிசுகளுடன் அவர் வீட்டை நோக்கிப் பயணமாகின.

இரு புலிகளைக் கண்ட பிராமணர் பயத்தால் ஓட்டமெடுக்க, புலிகள் இரண்டும் அவர் மனைவியிடம் காரணம் கேட்டன.

''இதுவும் திருமணச் சடங்கில் ஒரு அம்சம்'' —எனக் கூறினள் அவர் மனைவி.

## நாஸிருதீன் ஹோஜா

நாஸிருதீன் ஹோஜா ஒருநாள் தனது கழுதையைத் தேடிக் கொண்டு போனன். அது கிடைக்கவேயில்லை. எங்கோ காணமல் போய்விட்டது.

வழியில் நண்பன் ஒருவன் அவனிடம் துக்கம் விசாரித்தான்.

ஆனல் அதற்கு ஹோஜா கவலைப்படாமல் கடவுளுக்கு நன்றி கூறினன்.

நண்பன் கழுதை காணமல் போனதற்காக கடவுளுக்கு நன்றியா என ஆச்சரியப்பட்டான்.

அதற்கு ஹோஜா கூறினன்.

''நான் வழக்கமாக அந்தக் கழுதையில் தான் சவாரி செய்வது வழக்கம். அது காணமல் போன போது நான் அதன் மேல் சவாரி செய்திருந்தால், நானுமல்லவா காணமற்போயிருப்பேன்.

## உங்களுக்குத் தெரியுமா?

(1) விமானம் கண்டு பிடித்தது யாரால்? எந்த ஆண்டு?

(2) தொலைபேசியை கண்டுபிடித்தவர் யார்? எப்போது?

(3) றேடியோவைக் கண்டுபிடித்தவர் யார்?

(4) கிராமபோன், மின்விளக்கு, திரைப்படம் ஆகியவற்றை கண்டு பிடித்தவர் யார்?

(5) நூல் நூற்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

(6) குளோரோபோம் என்ற மயக்க மருந்து கண்டுபிடித்தவர் யார்?

(7) எக்ஸ்-ரே என்ற ஒளிக்கதிரைக் கண்டு பிடித்தவர் யார்?

(8) ரேடியம் கண்டு பிடித்தவர் யார்?

(9) நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

(10) அம்மை நோயைத் தடுக்கும் மருந்து கண்டு பிடித்தவர் யார்?

### விடைகள்

(1) றைட் சகோதரர்கள் 1903 ஆண்டு

(2) அலக்சாண்டர் கிரஹாம் பெல்... 1876 ஆண்டு

(3) மார்க்கோனி

(4) தாமஸ் அல்வா எடிசன்.

(5) ரிச்சர்டு ஆர்க்ரைட்

(6) ஜேம்ஸ் சிம்ப்சன்

(7) ராண்ட்ஜன்

(8) மேரிக்கியூரி அம்மையார்

(9) ஜேம்ஸ்வாட்

(10) எட்வேட் ஜென்னர்

—தொகுப்பு கீதன்—

# சோதிடரின் மகன்

★

### காஷ்மீரக்கதை

★

மன்னன் ராஜசிம்மனின் அரண்மனை சோதிடராக விளங்கினார் சோமசேகரர். அவருக்கு ஒரேயொரு மகன் இருந்தான். தந்தையிடம் சோதிடம் பழகிவந்தாலும் அக்கலையில் அதிக தேர்ச்சி பெற்றவனல்லன்.

ஒருநாள் சோதிடர் மரணப்படுக்கையில் வீழ்ந்தார். அவர் பிழைப்பது கஷ்டம் என வைத்தியர்கள் கைவிரித்து விட்டார்கள். மன்னன் அவரைப்பார்க்க வந்தான். மன்னருக்கோ சோதிடரிடம் அதிகப்பிரியம்.

"மகாராஜா! எனக்குப்பின் என்னிடத்தில் என் மகனை அமர்த்துங்கள்'' என சோதிடர் வேண்டினார்.

''அப்படியே ஆகட்டும்!''— என வாக்களித்தான் மன்னன்.

## 2

சோமசேகரர் இறந்ததும் அவர் மகன் அரசவைச் சோதிடனானான். இது ஏனைய சோதிடர்களுக்குப் பொறாமையைக் கிளப்பிற்று நாங்கள் இருக்க ஒரு அற்பக் கொசுப் பயலுக்கு அரசவைப் பதவியா? எனப்பொருமினர். எனவே அவன் திறமையற்றவன் என மன்னனுக்கு நிரூபிக்கக் கூடி ஆலோசனை செய்தனர்.

"ஏ' கொசுப்பயலே... உனக்குத் தைரியம் போதாது என்று அரண்மனையில் ஒரே பேச்சு... ஆதலால் அவர்களுக்கு நீ ஒரு வீரன் என்பதனை நிரூபிக்க வேண்டும்' என்று கூறினார்கள்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்''?

"இன்று அரசர் சிம்மாசனத்திலிருக்கும் போது அவர் தலையிலிருக்கும், கிரீடத்தைப் பறித்து எறிந்து உன்வீரத்தைக் காட்டவேண்டும்.''

சோதிடர் மகன் விபரமறியாத சிறுவனானதால் அரண்மனைக்குப் போனவன், திடீரென எழுந்து அரசனின் கிரீடத்தைப் பற்றி எடுத்து அவை நடுவே எறிந்தான்..

அரசன் கோபத்துடன் எழுந்தான். அவையே ஒரு கணம் கலகலத்துவிட்டது. ஆனால்—

எறிந்த கிரீடத்திலிருந்து ஒரு பாம்பு வெளிப்பட்டு, நெளிந்தோடியது.

மன்னன் சோதிடர் மகனைக் கட்டிப்பிடித்து, "என் உயிர்காத்த உத்தமன்; நீ ஒரு உன்னத சோதிடன்!'' எனப் பொன்னும் பொருளும் கொடுத்துப் பாராட்டினான்.

## 3

பொறாமைக்காரர் அப்பொழுதும் திருந்தவில்லை. இன்னோர் நாள் அவனை அழைத்தார்கள்.

''நீ அன்று புத்திசாலி என்பதனை நிரூபித்து விட்டாய். ஆனால் தைரியசாலி என்பதனை நிரூபிக்கவில்லை. உன்னால் முடியுமானால் இன்றிரவு மன்னர் படுக்கப்போகும் பொழுது அங்கு நீ புகுந்து அவரை வெளியே இழுத்துவா பார்க்கலாம்'' என்றனர்.

அதன்படியே சோதிடர் மகனும் அன்றிரவு மன்னனின் படுக்கையறைக்குள் புகுந்து, படுக்கையிலிருந்த மன்னனை பலாத்காரமாக வெளியே இழுத்து வந்தான்.

மன்னன் மகாகோபம் கொண்டு "ஆ என்ன துணிச்சல் உனக்கு? உனக்கு மரணதண்டனையே வழங்குகிறேன் பார்!'' —என்று குதித்தான். அப்பொழுது.—

மன்னனின் படுக்கைக்கு மேலிருந்த விதானம் உடைந்து அவன் படுக்கையில் விழுந்தது.

மன்னன் மகிழ்ச்சியோ தாங்க முடியாததாக இருந்தது. இளஞ் சோதிடன் மீண்டும் அதில் புகழும் அரசனின் அரவணைப்பும் பெற்றான்.

## 4

இந்த வெற்றிகளை பொறாமைக்காரர்களால் தாங்கமுடியவில்லை. நடந்தவற்றைக் கூறி, எல்லாம் தற்செயல்தான் எனக்கூறினார்கள். அரசனால் நம்பமுடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் அவர்கள் கூறுவனவற்றையும் புறம் தள்ள முடியவில்லை.

---

### அந்தஸ்து

இலையில்
ஈரம் இருப்பதனால்
கிளையில் இணைந்து
திளைக்கிறது...
உலர்ந்தால்...?

—எஸ். பி.

---

'சரி அவனைச் சோதிக்கலாம் அழைத்து வாருங்கள்'' என்றான். சோதிடனின் மகன் அவன் முன்னே வந்ததும் தன் கைகளை நீட்டி 'இதற்குள் என்ன இருக்கிறது சொல் பார்க்கலாம்!'' என்றான்.

சோதிடன் மகனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. இனி தன் ஆயுள் அவ்வளவுதான் என்றுபட்டது. தப்ப ஒரு மார்க்கமும் புரியவில்லை. தன்னை மற்றவர்கள் ஏளனமாக அழைக்கும் கொசு என்ற பட்டப் பெயரே மனதில் தோன்ற—'கொசு நீ நல்லா மாட்டிக் கொண்டாய்!' என்றான். மன்னன் கையை விரித்தான். கொசு ஒன்று பறந்து போயிற்று.

"இவர்களின் பொறாமைப் பேச்சைக் கேட்டு உன்னைச் சந்தேகித்தேனே!'' எனக் கூறி பரிசில்கள் வழங்கியதோடு, மற்றவர்களை நாட்டைவிட்டுத் துரத்தினான்.

●

# 'சத்யஜித்றே'
# பத்திக் சந்த்

பத்திக் அமைதியின்றிக் காட்சியளித்தான். காலையிலிருந்து ஒரே பரபரப்பு. இன்று மத்தியானம் மெய்டன் என்ற இடத்தில் ஹருண் தனது கண்களைக் கட்டிக் கட்டிக்கொண்டு பந்தெறிந்து பிடிக்கும் வித்தையைச் செய்யப் போகிறான். அவன் பத்திக்கின் அறைக்கு ஒவ்வொருநாளும் வருவான்; சில வேளைகளில் இருதடவைகள் கூட வருவதுண்டு, பத்திக் ஹருணுடைய அறைக்குப் போன நாளில் இருந்துதான் ஹருண் இவ்வாறு ஒழுங்காக வருகிறான். அன்றிரவு எவ்வித இடையூறுகளும் இன்றிப் பத்திக் தன் இடத்திற்கு வந்ததும் ஹருணின் திறமையினாலேதான். கல்கத்தாவின் ஒழுங்கைகள், வீதிகளையெல்லாம் ஹருண் எவ்வளவு அச்சொட்டாக அறிந்து வைத்திருக்கிறான்! யாராவது அவனைத் தொடர்ந்து வரமுயன்றிருந்தாலும் அவன் சென்றவளைவுகள் இடுக்குமுடுக்குகளை அறியாமல் ஏமாறித்தான் போயிருப்பார்கள்.

பத்திக்கிடம் வரும் ஒவ்வொரு சமயத்திலும் அவன் அந்த இருமனிதரையும் கண்டதுண்டா என்று ஹருண் விசாரிக்கத் தவறுவதில்லை. அவர்கள் அவன் முன்பு தோற்றவில்லை. அவனுக்குத் தேனீர்க்கடையில் இடைவிடாத வேலை. வெளிச் செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதனால் அவன் அவர்களைக் காணவில்லை.

இப்பொழுது பத்திக் தனது தொழிலில் கூடியதேர்ச்சி அடைந்திருந்தான். தொடக்க நாட்களில் இரவில் படுக்கச் செல்லும் பொழுது அவன் விரல்கள் விறைத்துப் போவதுண்டு. இப்பொழுது அந்தவிறைப்பு இல்லை வேலை முடிந்ததும் இரண்டு பந்துகளை வைத்துக் கொண்டுஅவன் பயிற்சி செய்வான். பந்துகளில் ஒன்று சிவப்பு, மற்றது மஞ்சள்' இவை ஹருண் கொடுத்த பரிசுகள்.

"நீ இப்பொது பழகிவரும் கலை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தில் பயிலபபட்டது. இல்லை இது படைப்பின் ஆரம்பத்திலே, கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயிலப்பட்டு வந்துள்ளது."

பத்திக் வியப்படைந்தான்; ஹருண் விளையாட்டாகச் சொல்வதாகவே நினைத்தான். ஆனால் ஹருண் விளக்கினான்.

"நாம் வாழும் பூமி என்ன? இதுவே ஒரு பந்துதான். கிரகங்களும் பந்துகள்தாம். வியாழன் புதன், சுக்கிரன், சனி இவை எல்லாம். இவை சூரியனைச் சுற்றிச்சுழல்கின்றன. சந்திரன் பூமியைச் சுற்றிச் சுழல்கிறது. பூமி சூரியனைச் சுற்றிச் சுழல்கிறது ஆனால் ஒன்றுடன் ஒன்று எக்காலத்திலும் மோதிக்கொள்வதில்லை. நினைத்துப் பார். இதிலும் பெரிய கண்கட்டு வித்தை உண்டா? இரவில் வானத்தைப் பார்த்தாயானால் நான் சொல்வதன் உண்மை விளங்கும். இந்தப் பந்துகளை எடுக்கும் பொழுதெல்லாம் அதை நினைத்துக்கொள்"

அந்த இருமனிதர்களும் பிறகு வரவேயில்லை. ஆனால் ஹருணுக்கு அவர்கள் பற்றிய அச்சம் நெஞ்சில் நிலையாகிவிட்டது. சில வேளைகளில் அவன் பெரிதும் குழம்பிக் காணப்பட்டான். ஆனால், ஹருணை வருத்தும் விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாததால் பத்திக் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஹருணின் கண்ணில் ஒளிவிடும் அந்தச் சுடரானது அடிக்கடி மங்குவதையும் நம்பிக்கையீனம் இருளாக அவனைச் சூழ்வதையும் பத்திக் கண்டான்.

மெய்டனுக்கு அவர்கள் வந்த பொழுது பத்திக்கின் உள்ளத்தில் இந்தச் சிந்தனை எதுவும் இல்லை. ஹருண் கடந்த ஞாயிற்றுக்கிழமை வித்தை நடத்திய இடத்தில் சிறுவர்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். பத்திக் அவர்களில் சிலரை அடையாளம் கண்டு கொண்டான். அம்மைத் தழும்புடன் கூடிய ஒற்றைக் கண்ணன், தொலைவில் சிறுவனாகத் தோன்றும் வயது முதிர்ந்த குள்ளன், முன்வாய்ப்பல் துருத்திக் கொண்டிருக்கும் லுங்கிஅணிந்த காடையன் இவர்களை அவனால் அடையாளம் காணமுடிந்தது. ஹருண் வந்தபொழுது பிள்ளைகள் கைதட்டி ஆரவாரித்தனர்.

ஹருண் தரையில் அமர்கையில் வானத்தை நோக்கினான். பத்திக்குக்கு அதன் அர்த்தம் விளங்கியது. மேற்கு அடிவானத்தில் கருமேகங்கள் திரண்டவண்ணம் இருந்தன. மழை அன்றைய வித்தையைக் குழப்பிவிடலாம். 'கடவுளே! மழை பெய்யாதிருக்க' அருளும் ஹருண் தமது கண்கட்டு வித்தையால் சூழவிருக்கும் சனங்களை மகிழவைக்கட்டும். அவர் சென்றமுறை சம்பாதித்த பதினெட்டு ரூபா முப்பத்திரண்டு பைசாவிலும் அதிகமாகச் சம்பாதிக்கட்டும். இந்தக் கூட்டத்தில் யாராவது வெளிநாட்டவர் மட்டும் இருக்கக்கூடுமானால்... ஐந்து ரூபா, பத்து ரூபா என்று வீசி எறியக்கூடியவர்கள் வேறு யார்?'

ஹருண் வழக்கமான ஆயத்தங்களைச் செய்கையில் தொலைவில் இடி முழங்கியது. நூல் எறிந்து மூங்கிற் கோவில் சுற்றும் விளையாட்டை முடிக்கப் போவதாய் ஹருண் பத்திக்குக்குச் சைகை காட்டினான். அந்தக்கோல் இப்பொழுதும் ஹருணின் நாடியில் சுழன்றவண்ணம் இருந்தது. பத்திக் சனக்கூட்டத்திலிருந்து வெளிப்பட்டு ஹருண் முன்னால் போய் நின்றான். இப்பொழுது கோலானது ஹருணின் உள்ளங்கையில் சுழன்றது. 'பிடித்துக் கொள்' என்றபடி ஹருண் அதனை பத்திக்கிடம் எறிந்தான்.

பத்திக் அதனைப் பிடித்த பொழுதும் அவனது உள்ளங்கையில் அது சுழன்றது. இச்சுழற்சி அவனது முதுகந்தண்டில் சூடேற்றியது போல இருந்தது. இனியும் அவன் ஹருணுக்கு உதவியாளனல்ல; மாணக்கன்!

ஹருண் வேறொரு சுழல்கோலை அவனது வலக்கையில் போட பத்திக் தனது வலக்கரத்திலிருந்ததை இடக்கரத்திற்கு மாற்றிக்கொண்டான். மூச்சையே முட்டவைக்கும் வித்தையொன்று அப்பொழுது நிகழ்ந்தது.

இந்த வித்தை முடிந்ததும் ஹருண் பத்திக்கை அழைத்து வெண்கலப் பந்துகளை ஏறிந்து பிடிக்கும் வித்தைக்கு ஆயத்தமானன். பத்திக் சாக்குப்பையிலிருந்து பட்டு லேஞ்சி ஒன்றை எடுத்து ஹருணின் கண்களை இறுக்கிக் கட்டினன். அப்பொழுது மகத்தான எதிர் பார்ப்பு ஒன்றின் பிரதிபலிப்பாகப் பார்வையாளர் கூட்டத்திலிருந்து குசுகுசுப்பு எழுந்தது. இருள் மெல்ல மெல்லக் கவிந்தது பற்றிப் பத்திக் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் வெளியுலகம் ஹருணைப் பொறுத்த வரை இருளாகி விட்டது. தனது வித்தைக்கு அவன் வெளிச்சத்தை வேண்டி நிற்கவில்லை.

பந்துகள் மெல்ல எழுந்து நான்கு முறை சுழன்றன. ஐந்தாவது சுற்றில் பத்திக் எதிர்பார்க்காதது, எதிர்பார்க்கவே விரும்பாதது நடந்து விட்டது. ஆகாயமே தன் தலையில் விழுந்தாலும் நல்லது தான் என்ற உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று.

காதைச் செவிடுபடுத்தும் ஒலியோடு இருபந்துகள் வெளியில் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. பின் அவை இரண்டும் கீழே விழுந்து ஹருணுக்கு தொலை தூரத்தில் உருண்டன.

சனக்கும்பலின் நடத்தை வியப்பை ஏற்படுத்தியது. அது உற்சாகக் குரல் எழுப்பி, கைதட்டி ஆரவாரித்தது. பின்னர் ஹருணை நோக்கி அந்த ஆரவாரம் கேலிச் சிரிப்பாக கரடிக் கத்தலாக மாறியது.

ஆனல் இது நீடிக்கவில்லை. சனக்கூட்டம் ஐந்து நிமிடங்களில் கலைந்து போயிற்று. இடம் வெறுமையாகி விட்டது. ஹருண் தனது கண்கட்டை அவிழ்த்துக் கொண்டு பரப்பி வைத்திருந்த பொருட்களைத் தொகுத்துச் சாக்குப்பையுள் இட்டான். பத்திக் அங்கு கிடந்த காசுகளைப் பொறுக்கியபொழுது ஹருண் அவன் செயலை வன்மையாகக் கண்டித்துத் தடுத்தான். புல் தரையிலிருந்து எழும்பாமலே பீடி ஒன்றைப் பற்றவைத்தான். பத்திக் அவன் அருகில் அமர்ந்தான். அவன் உள்ளம் எதையும் சொல்லத் தயாரில்லை, விரும்பவும் இல்லை. சௌரஸ்கி வீதிகளிலே செல்லும் வாகனங்களின் இரைச்சல் அவன் செவிகளில் விழுந்தது. அங்கு வந்த நேரம் தொடக்கம் சற்று முன் வரை அந்த இரைச்சல் அவனுக்குக் கேட்காமல் இருந்தது.

பீடியை நான்கு ஐந்து தடவைகள் புகையிழுத்தபின் ஹருண் அதனை விட்டெறிந்தான். 'கைகள் மனத்தின் ஒட்டத்துக்கு ஏற்பச் செயற்படுவன. மனம் சோர்ந்திருக்கும் பொழுது கைகள் விறைத்துப் போகும்; வளைந்து கொடுக்கா. உனக்கு ஏதாவது ஓர் ஒழுங்கைச் செய்யும்வரை கண்கட்டி நடத்தும் இந்த வித்தையை நான் செய்யப் போவதில்லை.'

இந்தக் கதையின் பொருள் என்ன? பத்திக் வியப்படைந்தான். தான் நன்றாகத்தானே இருக்கிறேன்? தனக்கு இன்னும் ஹருண் செய்ய நினைப்பது என்ன? ஹருண் தொடர்ந்தான். ஷியாம்லாலைக் கண்டதிலிருந்து அவன் என்ன நோக்கத்தில் உன்னைக் கடத்தியிருப்பான், என்ன முறையைக் கையாண்டிருப்பான் என்பதெல்லாம் எனக்கு நன்கு புரிகின்றன. அவர்கள் காரில் உன்னைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓடினர்கள். உன்னை மறைவிடம் ஒன்றில் வைத்துக் கொண்டு உன் தகப்பனரிடம் பணயப்பணம் பெருமளவிற் பெறத் திட்டமிட்டார்கள். இடையில் உண்டான விபத்து அவர்களின் திட்டங்களைப் பாழடித்து ஷியாம்லாலும் மற்றவனும் தப்பிவிட்டார்கள்; இரண்டுபேர் விபத்தில் செத்துப் போனர்கள். நீ தரையில் கிடந்த கோலத்தைப் பார்த்து நீ இறந்துவிட்டதாக அவர்கள் நம்பியிருக்கவேண்டும். அதனல் தான் உன்னை நீ கிடந்த இடத்தில் விட்டுவிட்டு அவர்கள் ஓடித் தப்பியிருக்கிறர்கள். உபேனின் தேநீர்க் கடையிலே உன்னைக் கண்டபொழுது தங்களின் இரை இன்னும் கைநழுவிப் போகவில்லை என்பது அவர்களுக்குத் தெரியவந்தது. நான் உனது அறையிலே நேற்று உன்னைச் சந்தித்துத் திருப்பிய பொழுது அவர்கள் அந்த இடத்தில் திரிந்து கொண்டிருக்கக் கண்டேன். அவர்கள் இரவு பதினெருமணிவரை தங்கி நின்றனர். நான் அவர்கள் அவ்விடத்திலிருந்து சென்றபொழுது தொடர்ந்து போனேன். அவர்களின் தங்குமிடத்தை அறியத்தான் பொலிசுக்கு அறிவித்தால் உடனேயே அவர்கள் பிடிபடக்கூடும். ஆனல் அதனல் எல்லாம் வெளிப்பட்டுவிடும் என்றுசொல்லவியலாது. உன்னையும் நான் பொலிசில் ஒப்படைக்க வேண்டியிருக்கும்.''

''ஹருண் அண்ண, இல்லை, இல்லை.''

''எனக்குத் தெரியும். நீ என்ன நினைக்கிறய் என்பது எனக்குத் தெரிகிறது. அதனலேதான் என்னல் ஒன்றுமே செய்யக்கூடவில்லை-நீ யார் என்று மட்டும் தெரிந்தால் ...விஷயமே வேறு. இப்பொழுது உன்னைப் பொலிசிடம் ஒப்படைப்பதும் பெயர் தெரியாத தெருநாயை படைப்பதும் ஒன்றுதான்.''

பத்திக்கின் இதயம் துடித்தது.

''தெருநாய் கண்தண்டுவித்தை நடத்துமா?

ஹருண் புன்னகையுடன் அவனை உற்று நோக்கினன்.

''நீ பயிற்சி செய்கிறயா?

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' பத்திக்கின் உள்ளம் துவண்டு போயிற்று. ''ஒவ்வொருநாளும் இரவு படுக்கைக்குப் போகுமுன் ஒவ்வொரு மணித்தியாலம்.''

தனது சட்டைப் பையினுள்ளிருந்த இரண்டு பந்துகளை எடுத்து ஹருண் முன்னிலையிலே அவற்றை எறிந்து ஏந்தத் தொடங்கினன்.

''நல்லது. இன்னும் இரண்டொரு நாள் பொறுத்துப் பார்ப்பேன். யாரும் உன்னைப் பற்றி விசாரிக்காவிட்டால் என்னோடேயே அழைத்துச் செல்வேன்.''

''எங்கே?'' பத்திக் அதிர்ச்சியடைந்தான். ஹருண் எங்கோ செல்லவிருப்பதாகச் சொல்வது இதுவே முதல்முறை.

''நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. நேற்று வெங்கடேஷிடமிருந்து கடிதம் வந்தது. அவன் என்னைத் தென்னிந்தியாவிற்கு அழைக்கிறான். தரையில் வீசப்படும் காசுகளைப் பொறுக்குவது எனக்கு அலுத்து விட்டது... இனி ஏதாவது...''

'இதார் இந்தப் பெடியன்? உன் கையாளா?'' வார்த்தைகள் சடுதியாக வெளிப்பட்டதால் பத்திக்கின் இருதயம் அச்சத்தாலும் அதிர்ச்சியாலும் படபடத்தது.

வார்த்தைகள் சடுதியாக வெளிப்பட்டதால் பத்திக்கின் இருதயம் அச்சத்தாலும் அதிர்ச்சியாலும் படபடத்தது. இருமனிதர்கள் இருளில் அவர்களின் பின்னால் ஒளித்து நின்றார்கள். கால்சட்டை அணிந்த ஷியாம்லாலின் வில்போல் வளைந்த கால்கள் பத்திக்கின் தோள்களை அழுத்தின.

பத்திக் தன் காதருகில் கத்தியொன்று விரிக்கப்பட்ட நிலையில் அசைவதை உணர்ந்தான். பின் அது பத்திக்குக்கும் ஹருணுக்கும் நடுவில் நிலையாக நின்றது.

ஹருண் ஷியாம்லாலைத் தனது கடைக்கண்ணால் பார்த்தான். ''ரகு நாணயங்களைப் பொறுக்கு. சந்தாவின் கடைக் கொடுப்பனவுக்கு உதவும்.''

மற்றவன் புல்லில் அவர்கள் முன்பு சிதறிக் கிடந்த நாணயங்களைக் குனிந்து பொறுக்கினான்.

''நல்லது, உன் மறுமொழிக்குக் காத்திருக்கிறேன்''

ஷியாம்லால் சொல்லி முடிக்கவில்லை. வெண்கலப் பந்துகள், கத்திகள், மூங்கிற்கோல்கள் நிறைந்த சாக்குப்பை நெருக்கட வேகத்தில் தரையிலிருந்து கிளம்புவதை பத்திக் கண்டான். அது ஷியாம்லாலின் நாடிப் பக்கத்தில் மோதி அவனை உருண்டு விழவைத்தது.

''பத்திக்'' ஹருண் கத்தினான்.

பத்திக் புயற்காற்று வேகத்தில் பாய்ந்து ஹருணின் கைகளுக்கருகில் வந்தான். சகிட்மினர் அருகில் புழுதிப்படலம் ஒன்று எழுந்தது. சனங்கள் பாதுகாப்பிடங்களை நோக்கி ஓடினார்கள்.

''உன்னால் ஓட முடியுமா?''

''ஓம்''

முதலில் சிறிது தடுக்கினாலும் பத்திக், ஹருணின் பின்னால் ஓடி இருவரும் டாக்சி நின்ற இடத்தை அடைந்தனர்.

'டாக்சி' என்ற சொல் எழுந்தவுடனேயே கார் ஒன்றின் கதவு திறந்து கொண்டது. இருவரும் பாய்ந்து உள்ளே ஏறிக் கதவைச் சாத்தினர்.

''சென்றல் அவெனியூ''

டாக்சிகள், பஸ்கள், சைக்கிள்களைப் பின்னுக்கு விட்டு அவர்களின் டாக்சி விரைந்தது. ஷயாம்லாலும், ரகுநாத்தும் புயற்காற்றினிடையே விரைந்து ஓடிவந்தனர். இன்னும் முற்றாக இருள் கவியவில்லை. வீதி விளக்குகள் எரியத் தொடங்கின. கடைகளிலுள்ள விளக்குகளும் தொடர்ந்து ஒளி விட்டன.

வீதித்தடைகள் எதுவும் இல்லாதிருந்ததால் டாக்சி மேலும் மேலும் விரைவைக் கூட்டியபடி ஓடியது. ஹருண், ''தோழரே, உனக்கு மேலதிக பணம் தருகிறேன்'' என்று டாக்சி சாரதியை ஊக்கினான். டாக்சி பறந்தது. கௌரஸ்கியைக் கடக்கையில் டுறும்டோலாக் கடவையில் அதுவரை சிவப்பு விளக்கு எரிந்து அப்பொழுதுதான் பச்சை விளக்கு எரியலாயிற்று. கடவையைக் கடந்து மின்விநியோக நிலயத்தைத் தாண்டி சென்றல் அவனியுவின் அகன்ற வீதியை டாக்சி அடைந்தது. ஞாயிற்றுக்கிழமையாதலால் வாகனப் போக்குவரத்துக் குறைவாகவே இருந்தது. பின்பக்கத்தில் கார் ஹோரண் ஒன்றின் பலத்த சத்தம்...

''இன்னும் விரைவாய் அவர்கள் தொடர்கிறார்கள்.''

பத்திக் ஹருணைப் பார்த்தான். தொடர்ந்து பின்னால் நோக்கினான்.

''ஹருண் அண்ணா, அவர்கள் எங்களைப் பிடிக்கப் போகிறார்கள்.''

''இல்லை அவர்களால் முடியாது''

அவன் காதுகளில் காற்றின் வீச்சோசை பலமாகக் கேட்டது. காரின் முன் லைட்டுகளின் ஒளி சிறிது தாக்கப்பட்டது. கார்க்கதவுகளில் மழைத்துளிகள் பலமாக மோதின. வின்ட்ஸ்கிரீன் மீது மழைநீர் சோனாவாரியாக வீழ்ந்தது. ஒன்றன்பின் ஒன்றாகக் கார்கள் வருவதும் போவதுமாயிருப்பதன் அறிகுறியாக அவற்றின் லைட்டுகளின் குறைந்த கூடிய வீச்சுக்கள்.

இப்பொழுது முன்னால் பெரிய வெளிச்சம். சோடியாக ஒளி விடுகிறது. அது பஸ் லைட்டுகள் தாம். பஸ் பூதத்தின் வெளிச்சம் விரிந்து பெரிதாகி... அவை லைட்டுகளல்ல. அந்தப் பூதத்தின் கண்கள்...

பஸ் ட்றக்காக மாறுகிறது. வீதிப்புறக் கட்டடங்கள் மறைகின்றன. லைட் ஒளியும் மறைகிறது. இருள் ஆட்சிபுரிகிறது. இருள்' இருள், இருள், மரங்கள், மரங்கள், மரங்கள்.

''பத்திக் உனக்கு என்ன? தலையை ஏன் சரிக்கிறாய்?'' பத்திக்கின் நினைவிலே வெள்ளமாகப் பெருகிக் கொண்டிருந்த பலவகை ஓசைகளுக்குள் ஹருணின் கேள்வி ஆழ்ந்து மறைந்து விடுகிறது. காதுகளைச் செவிடுபடுத்தும் வகையில் ஏற்பட்ட கார்- ட்றக் மோதலிலே அவன் ஆகாயத்தில் தூக்கி வீசப்படுவது போல உணர்கிறான். அதைத் தொடர்ந்து செவிகளிலே தெளிவில்லாத சத்தம். நினைவுகள் மீண்டு வந்து பெருக்கெடுக்கின்றன. எல்லா விஷயங்கள் பற்றியும் ஞாபகங்கள். தனது பன்னிரண்டு வருஷ வாழ்க்கையில் நிகழ்ந்த எல்லாம்... அலை அலைகளாக எழுகின்றன. ''நாங்கள் இங்கே இருக்கிறோம். உனக்கு எந்த ஞாபகம் விருப்பமோ, அதனை எடுத்துக் கொள்'' என்கின்

றன. அவற்றுள் ஒன்றை எடுத்த பொழுது அது அவனது பெயராக இருந்தது. அவன் பெயர் நிகில். அதுதான் உண்மைப் பெயர். செல்லப் பெயர் பாப்லு. தகப்பனர் பெயர் சாரதிந்து சன்யால். அவனுக்கு மூன்று தமையன்மார், தமக்கை ஒருத்தி. சாயா என்ற பெயருடைய அவள் மணம் புரிந்தவள். கணவனுடன் சுவிற்சர்லாந்தில் வாழ்கிருள். தொடர்ந்த அவனது நினைவுகள் அவனுடைய பாட்டி பற்றியும் எடுத்துரைத்தன. பாட்டி மாடிவிருந்தையின் மூடிவிலிருக்கும் தனது பூசை அறையில் தலைகுனிந்தபடி காசிராம்தாசின் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிருள். அவளுடைய தங்கச் சட்டமிட்ட மூக்குக்கண்ணுடி அவளின் மூக்கில் வந்து இருக்கிறது. ''இப்பொழுது கவனி. நீ டென்னிஸ் பந்தை ருக்கட்டால் அடிக்கும் பொழுது உனது மணிக்கட்டு எப்படித் திரும்புகிறது என்று பார்.'' இப்படி அண்ணு சொல்லிக் கொண்டிருக்கிருன். அவனுடைய கணித ஆசிரியர், சுக்ளா ''நிறுத்து, நிறுத்து மன்மோகன்'' என்று கத்துகிருர். மன்மோகன் சந்திரன் போல வட்டமான முகமுடைய குழப்படிகாரன். விக்ரம் தனது பென்சிலைச் சீவி டெஸ்கினுள் வைக்கும் ஒவ்வொரு தடவையும் றப்பரில் கடதாசியைக் தொழுவி அடித்துப் பென்சிலைக் கீழே விழப்பண்ணிக் கூர் முறியுமாறு செய்வது மன்மோகனின் விளையாட்டு... அக்காவின் கல்யாணத்தின்போது கிருமபோனில் பிஸ்மில்லாகானின் ஷெனய் வாத்திய இசைத்தட்டினை இட்டபொழுது ஊசி குத்தி, இசைத்தட்டு உடைந்து அந்த இடத்தில் ஊசி வரும் போதெல்லாம் திரும்பத் திரும்ப ஒரே இசைதான் கேட்கிறது. அதைக் கேட்டபொழுது திருமண விருந்து மேசையில் உணவருந்திக் கொண்டிருந்த விருந்தினர்கள் ஒருமுகமாகச் சிரித்த சிரிப்பு... ஆம்... பின் டார்ஜீலிங் சென்றது. அதற்கு முன் வருஷம் பூரி. மீண்டும் டார்ஜீலிங். வால்ட்டயர் கடற்கரையில் சின்னஞ் சிறியவனுய் அவன் நிற்கிருன். அலைநீர் வந்து கால்களை அலம்புகிறது. காலுக்குக் கீழே மணல் நீரினுல் அரித்துச் செல்லப்படக் குதிக்காலிலே உண்டான அந்தக் கிளுகிளுப்பு. காலின் கீழ் ஏராளமான எறும்புகள் ஊர்வதுபோல ஓர் உணர்வு அப்பொழுது ஏற்பட்டது. ''பாப்லு நீ விழுந்து விடுவாய்'' என்று அம்மா கத்துகிருள். அவனும் விழுந்து எழுகிருன். அவனுக்கு அம்மாவைத் தெளிவாக நினைவிற் கொண்டு வர முடியவில்லை. அவள் இப்பொழுது படமாக வீட்டுச் சுவரிலே தொங்குகிருள். அவ்வளவுதான். பிரமாண்டமான அந்த வீட்டில் மூன்றே மூன்று பேர்கள் தாம் இன்று வாழ்கின்றனர். மூளை சுகமாயிருந்த காலமெல்லாம் மாமாவும் கூட இருந்தார். இப்பொழுது அவருக்கு மூளைப்பிசகு. லும்பினி மனநோய் வைத்திய சாலையில் இருக்கிருர்...

## பட்டம்

வண்ண வண்ண பட்டம்
வாங்கி வந்தார் அண்ணு
வாலும் நூலும் கட்டி
வாடைக் காற்றில் விட்டார்
விண்ணை நோக்கி பட்டம்
விரை வாய் உயரப் பறந்து
வீசிய வேகக் காற்றில்
பட்டம் கரணம் அடித்து
பற்றையுள் சென்று வீழ்ந்ததுவே
முட்கள் அதனைக் கிழித்தனவே.

— கீதன் —

மீண்டும் டாக்சி. அதன் ஓசை இப்பொழுது கேட்டது. வீதி விளக்குகளையும் பார்த்தான். ஹருண்? ஆம். அவன் பக்கத்தில் தான், கார் கண்ணுடியைத் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தான்.

''பயந்துவிட்டாயா பத்திக், பயப்பட ஒன்றுமில்லை. அவர்கள் போய்விட்டார்கள்'' ஹருண் சொன்னன்.

அல்சேஷன் நாயின் ஆழமான ஊளைச் சத்தம் அவனது காதுகளில் விழுந்தது. அந்த நாய் அவன் வீட்டின் பக்கத்து வீட்டினரான றய்ட்ஸ் என்பவருக்குச் சொந்தமானது. அதன் பெயர் டியூக். டியூக்குக்கு அவன் பயப்படுவதில்லை. உண்மையில் அவன் துணிச்சற்காரன் தான். தனித்து இரவில் தூங்குவான். தன் வேலைகளையெல்லாம் தானே செய்து கொள்வான்.

டார்ஜீலிங்குக்குப் போயிருந்த பொழுது ஒருநாள் பேச் மலையில் பனிப்புகார் வந்து மூடி எதுவுமே கண்ணுக்குப் புலனுகாது அவன் தனித்தவனுய் நின்ற சமயத்திலும் பயப்படவில்லை.

''ஏதாவது வருத்தமா? என்னவாவது உன் மூளையைப் போட்டுக் குழப்புகிறதா?''

பத்திக் தலையை ஆட்டினன்.

''பின் என்ன?''

அவன் ஹருணைப் பார்த்தான். வெளியில் பலத்த மழை. டாக்சி இப்பொழுதும் ஓடிக்கொண்டிருந்தது. டாக்சியின் கண்ணுடி மூடப்பட்டிருப்பதால் அவன் சிறிய ஒலியிலே சொன்னலும் அது ஹருணுக்குக் கேட்கும்.

''ஹருண் அண்ணு, பழைய ஞாபகம் எல்லாம் திரும்பி விட்டது'' அவன் அமைதியாகச் சொன்னன்.

## செய்து பாருங்கள்

அன்புத் தம்பி தங்கைகளே! இது மாயாஜாலம் அல்ல. ஆனுல் இதைச் செய்து மற்றவர்களை திகைப் பூட்ட வைக்கலாம்.

### (1) குண்டூசி அல்லது பிளேட்டு (சவரக்கத்தி) நீரில் மிதக்கவிடல்

ஒரு கண்ணுடிக் கிண்ணத்தில் தண்ணீரை விட்டு அதில் மைஒற்றும் தாள் ஒரு சிறிய துண்டை வைத்து, அதன் மேல் குண்டூசி அல்லது பிளேட்டை வைக்க வேண்டும். சிறிது நேரத்தில் மைஒற்றும் தாள் நீருக்குள் அமிழும். குண்டூசி அல்லது பிளேட்டு நீரின் மேல் மிதக்கும்.

### (2) கற்பூரத்தை தானே எரியச் செய்தல்

கறபூரத்தை ஒரு தட்டில் வைத்து அருகில் பொஸ்பரஸ் துண்டை வைக்கும் போது சிறிது நேரத்தில் கற்பூரம் தானே எரிகிற மாதிரி தோற்றமளிக்கும்.

### (3) வெற்றுத் தாளில் எழுத்துகள் தோன்றுதல்.

ஒரு வெற்றுத்தாள் எடுத்து நீரில் நனைத்து கண்ணுடி மேல் வைத்து, அதற்குமேல் ஒரு உலர்ந்த தாள் வைத்து குமிழ்முனைப் பேனையால் எழுதவும். பின்னர் உலர்ந்த தாளை எடுக்கவும் ஈரமான தாளில் எழுத்துக்கள் தெரியும். அதை வெயிலில் காயவைக்கும் போது எழுத்துக்கள் மறைந்து போகும். அதை நண்பர்களுக்கு காட்டி இதில் எழுத்து உண்டாக்கப் போவதாக கூறி நீரில் நனைக்கவும். அதில் மீண்டும் எழுத்துக்கள் தோன்றும்.

### (4) தேசிக்காயில் இரத்தம் வருதல்.

ஒரு மேசைக் கத்தியை எடுத்து அதில் சிவப்பு சாயம் பலதடவை பூசி உலரவையுங்கள். பின்னர் அதை எடுத்து தேசிக்காயை வெட்டும் போது தேசிக்காயிலிருந்து இரத்தம் வடிவதைப்போல் தோன்றும்.

—கீதன்—

# உனக்கு நல்லது!

- வ. இராசையா -

எந்த வேலை எந்த நேரம்
செய்ய வேண்டுமோ - நீ
அந்த வேலை அந்த நேரம்
அறிந்து செய்து கொள்.

விடியற் காலை எழுந்திருந்து
பாடம் படித்திடு. - சும்மா
வீண ரோடு கதைய ளக்கும்
வேலை விட்டிடு.

பொன்னைப் போன்று நேரந் தன்னைப்
போற்றி நடந்திடு. - வாழ்வில்
போன பொழுது திரும்பி டாது;
நினைவில் வைத்திரு.

பொய்கள் பேசும் சிறுவ ரோடு
பேசக் கூடாது. - அந்தப்
பொல்லாப் பழக்கம் உனக்கும் வந்து
சேரக் கூடாது.

மற்ற வர்கள் பொருளுக் காக
ஆசைப் படாதே. - உனது
மனதுக் குள்ளே பொறுமை போக
வாசல் விடாதே.

பெரிய வர்க்கும் நல்ல வர்க்கும்
பணிந்து நடந்திடு. - வஞ்ச
நரியைப் போன்ற கயவர் முன்பு
நிமிர்ந்து நின்றிடு.


முதிய வர்கள் நமது சேவைக்(கு)
உரிய வர்கள்; - ஆதலால்,
முறைமை யாக அவர்க ளுக்கு
உதவி செய்திடு.

ஏழை சிந்தும் கண்ணீர் கண்டால்
இரங்கிடல் வேண்டும் - நாட்டின்
ஏழை மைக்குக் காரணத்தை
எண்ணவும் வேண்டும்.

உனது வயிற்றுக்(கு) உணவை நீயே
உண்ணுதல் போலே - என்றும்
உனது கருமம் நீயே செய்தல்
உத்தமம் ஆகும்.

நல்ல சிறுவன் என்ற பெயர்
நாட்டுவ தோடு - செயலில்
வல்ல சிறுவன் என்ற பெயரும்
வாங்கிடு தம்பி!

# சோதிடம்



**15-7-86**

**தொடக்கம்**

★

**15-8-86**

**வரை**

## மேஷம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1–ம் பாதம்)**

உங்களுக்கு பண விசயத்தில் பாதிப்பு இல்லை என்றாலும் பிடிப்பான சூழ்நிலை இருந்துகொண்டு தான் இருக்கும். தொழில் வழியில் இருந்த தடைகள் நீங்குவதற்கு சிறிது காலதாமதம் ஏற்படும். சொல்லைக் காப்பாற்ற முடியாமை, தூக்கம் குறைவு. ஆரம்ப காலத்திற் இருக்கும். தக்க சமயத்தில் மூன்றாவது மனிதரின் உதவிகிட்டும். சிலருக்கு அயல் நாட்டுப் பிரயாணம் கூடிவரும். பல்சம்பந்தப்பட்ட பிணி ஏற்படும்.

கணவன் மனைவியரிடையே உள்ள பிணக்குகள் தீர்ந்து சுமுக நிலை ஏற்படும். பழைய ஆபரணச் சேர்க்கை பெண்களுக்கு கிட்டும். உத்தியோகத்தவர்க்கு முயற்சிக்கு தக்கபலன் தள்ளியே போகும். சிலர் வீடுகட்டும் முயற்சியில் ஈடுபடுவர், நன்மைகிட்டும். கலைப்பிரிவினர்க்கும். மாணவர்க்கும் நன்மையான காலம். ஆகஸ்ட்மாத ஆரம்பத்தில் இவ்விராசியினர்க்கு ஆரோக்கிய கெடுதல் ஏற்பட வாய்ப்புண்டு. மூலச்சூடு, உஷ்ணப் பிணி, இரத்த சம்பந்த நோய் போன்றன உண்டாம்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2,3,4ஆம் பாதம் ரோகிணி, மிருகசிரிடம் 1, 2–ம் பாதம்)**

உங்களுக்கு காலம் கடந்து போன கடனைக் குறித்து சிந்தனை உடையவர்களாக இருப்பீர்கள். கட்டிடம் கட்டல் விருந்து வேடிக்கையில் பங்குகொள்ளல் புத்திரர் புத்திரியர் வகையில் புதுச்செலவுகள் புதுச்செலவுகள் உண்டாகும். ஒப்பந்த தொழில் உள்ளவர்கள் அரசாங்க தொடர்புடையவர்கள் பகை நேராமல் இருத்தல் அவசியம். கணவன் மனைவியரிடையே இடைவெளி அதிகமாகும். உத்தியோகப் பிரிவினர்க்கு மேலதிகாரிகளிடம் முரண் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். பழையகடன் பண்பை குறைகூறுவதாக இருக்கும். பெண்களுக்கு சுமாரான காலம். மாணவர்க்கும் கலைப்பிரிவினர்க்கும் சிறந்த காலமன்று. வாகனம் இயந்திரக் கருவி தொழில் செய்பவர்க்கு வரவு பாதிக்கும். குடும்பத்தி சுபச்செலவு பிரயாணம் போன்றன ஏற்படும். போகும் இடத்தில் வாக்குவாதங்களை வளர்த்தாதீர்.

## மிதுனம்

**(மிருகசிரிடம் 3,4ம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதம்)**

உங்களுக்கு இப்போது நல்லவர் நட்பு நல்கும். நாகரீகப் பொருள் சேரும். ஆரோக்கிய தெளிவு, கௌரவ உயர்வு ஏற்படும். சிலருக்கு விமானப் பயணம் ஏற்படும். கணவன் மனைவியரிடையே பாசப் பிணைப்பு அதிகமாகும். தொழில் புரிபவர்கள் எழுத்து மூலம் நன்மை அடைவர். மாணவர்களுக்கு சிறந்த காலம். பெண்கள் தம் கருத்துக்கினிய போக்கு உடையவராய் இருப்பர். பெண்களுக்கு கலைப்பிரிவினர்களால் அனுகூலங்கள் உண்டாடாகும். போட்டி பந்தயம் போன்றவற்றில் ஈடுபடுவதை குறைக்க வேண்டும்.

நிதானமான போக்கை கடைப்பிடிக்க வேண்டிய நேரம். அதிர்ஸ்டவசமான சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு. மனைவி அல்லது இதரவழி சொத்து பொருள் வந்து சேரும். இரு இடத்தில் உள்ள சொத்து பொருள்களை விற்பதோ, காலி செய்வதோ போன்றநிலை ஏற்படும். மருத்துவச் செலவுகளும் உண்டாகும்.

## கடகம்

**(புனர்பூசம் 4வது பாதம். பூசம், ஆயிலியம்)**

உங்களுக்கு தொழில் வழி கூட்டு ஈடுபாடுகள் தான் சிறப்பு தரும். தனித்து இயங்கும் வழிகள் சிறப்பைத்தரா. வெளியூர் பிரயாணம்பல பிரமுகர் தொடர்பு ஏற்படும். சகோதர சகோதரிகள் வகையில் சுபச்செலவு ஏற்படும். புத்திரர் ஆரோக்கியத்தில் கவனம் தேவை

கணவன் மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ள வேண்டும். புத்திரர் புத்திரியர் கல்வியில் மேன்மை ஏற்படும். தொழிற் பிரிவினர்க்கு நல்லநேரமல்ல கடன் வாங்கும் நிலைக்கு ஆளாவர். கலைப் பிரிவினர்க்கு கவர்ச்சிகரமான கடிதம் வரும். காதல் கல்யாண தொடர்புகள் திருப்திகரமானதே. உத்தியோகத்தில் பதவி உயர்வு அல்லவா இடமாற்றத்தை எதிர்பார்க்கலாம். ஜுலை மாத இறுதியில் நீங்கள் எதிர்பார்த்தவை பார்க்காதவை எல்லாம் ஒன்றுகூடி உங்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தும். உங்களின் நிலைமையை மற்றவர் பார்த்துப் பிரமிப்பர்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)**

உங்களுக்கு முக்கியமான பிரச்சினைகளை உருவாக்கியவன் 7 ல் குரு. நல்ல ஆலோசனைக்கு மற்றவரை நாடவேண்டும். உரிய காலத்தில் தூக்கம் கொள்ள முடியாது. திருப்தியான உணவு கிடையாது. சில மனிதர்களை தேடியலைய வேண்டி ஏற்படும். பெண்கள் வகையில் சிலருக்கு பெரும் செலவு ஏற்படும்.

கணவன் மனைவியரிடையே சிறு பிணக்குகள் ஏற்படும். உத்தியோகப் பிரிவினர் தம் இருக்கையை காப்பற்றிக் கொள்ள வேண்டும். பெண்கள் வகையில் எச்சரிக்கை தேவை. மாணவர் மாணவியர்க்கு இடையூறுகள் தொடரும். கலைப்பிரிவினர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவசியமற்ற பிரயாணங்கள் ஏற்படும். நீங்கள் இப்போது பலமற்றவர்கள் என்பதை மனதில் கொள்ளுங்கள். பெண்களுக்கு கர்ப சம்பந்த நோய் ஏற்படும்.

## கன்னி

**(உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம்பாதம்)**

உங்களுக்கு கூட்டுமனிதரிடையே ஓர் அளவு திருப்தியான போக்கு இருக்கும். குடும்ப சொத்து விவகாரம் திருப்தியானதே. பழைய நண்பரைச் சந்திப்பீர்கள். நாள்பட்ட காரியங்கள் அனுகூலமெய்தும். தோல், நகம் சம்பந்தப்பட்ட பிணிகள் தீரும். கணவன் மனைவியரிடையே ஒற்றுமை நிலவும். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகப்பிரிவினர்க்கு உடன் இருப்பவர்களால் கசப்பான நிகழ்வுகள் ஏற்படும். மாணவ மாணவியர்க்கு சுமாரான

**சாமிசங்கரதாஸ் JR.**

நேரம். கன்னியர்க்கு சலனம், பயம் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வெச்ரிக்கை மூலம் பயம் வேண்டாம். உங்கள் போக்கில் நிதானம் தேவை. சிக்கல்கள் தானே தீரும். இப்போதைக்கு இடையிடையே தன வரவு காரிய அனுகூலம் ஏற்படும். ஆகஸ்ட் நடுப்பகுதியில் மேல் உங்களுக்கு மறுபடி பிரச்சினைகள் எழலாம். உடன் இருப்பவர் கூட்டு மனிதர்களிடையே உட்குமுறல் காணப்படும்.

---

ஒட்டக் கூத்தனுக்குப் பிறகு இன்று வைரமுத்துவுக்குத்தான் அர்த்தமில்லாத ஆணவம் அதிகமாக இருக்கிறது. முதல் மரியாதையில் பல பாடல் வரிகள் இளையராஜா சொன்னவை. பல்லவிகள் அனைத்தும் அவருடையவை. அப்படிப் பார்க்கப் போனால் இணையில்லாத இசைக்காகவும், தானே சொல்லிக் கொடுத்த பாட்டு வரிகளுக்காகவும் வைரமுத்து வாங்கிய தேசியப் பரிசில் — முக்கால் பங்கு இளையராஜாவுக்கே சேரும். கால் பங்கு தான் வைரமுத்துவுக்கு. இந்தக் கால் பங்கிலும் யார் யாருக்கு 'கைப்பங்கு' இருக்கிறதோ தெரியவில்லை.

**கல்கண்டு பேட்டியில்**
**— கவிஞர் மு. மேத்தா**

---

## துலாம்

**(சித்திரை 3, 4, ம் பாதம் சுவாதி விசாகம்1, 2, 3.)**

உங்களுக்கு இப்போது ஆரோக்கியம் திருப்தியானதே. தொழில் சம்பந்தமான முன்னேற்றம் மற்றவர் பாராட்டும் அளவிற்கு இருக்கும். பணநெருக்கம் படிப்படியே குறையும். எதிரே இருக்கும் புதுவருடத்திற்கு இது முன்னோடியான காலம். பாதத்தில் இருக்கும் சனியினால் குடும்பவகையில் பெரும் தனமாற்றம் உண்டாகும். குழந்தைப் பாக்கியம் கிட்டும்.

கணவன் மனைவி உறவில் இனிமேல் தான் இனிமை கூடும். உத்தியோகப் பிரிவினர்க்கு நினைத்தது நிறைவேறும் நேரம். மாணவ மாணவியருக்கு உன்னதமான காலம். கன்னியர்க்கு திருமணம் கூடிவரும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். வியாபாரிகள் கூட்டு ஒப்பந்தம் மூலம் பலனடையலாம். கர்ப்பிணிப் பெண்கள் கவனமாக இருக்க வேண்டிய நேரம். ஜனனதெசை நன்றாக விருப்பின் உத்தியோகத்திற்கு பதவி உயர்வு கிட்டும். காது, பல் நோய் தோன்றி மறையும். ஆக உங்கள் துன்பங்கள் குறைந்த நேரமிது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ம் பாதம். அனுசம் கேட்டை)**

உங்களுக்கு இப்போது அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படவேண்டியிருக்கும். தைரியம் பிறந்து விட்டது உங்களுக்கு. பணசேர்க்கை தொழில் வழியில் முறையான ஈடுபாடு நன்மைகள் இருக்கின்றன. உங்கள் வார்த்தைக்கு மதிப்பு மிஞ்சும். நீங்கள் வழக்காடும் நிலையில் இருந்தவர்க்கு இப்போது அதற்கு அவசியமின்றி முடிவுகள் அனுகூலமாக வந்துவிட்டன.

கணவன் மனைவி உறவு திருப்தியாயிராது. மாணவ மாணவியர்க்கு நல்ல நேரம். குழந்தைகளின் ஆரோக்கியம் சிறப்பாயிருக்கும். உத்தியோகப் பிரிவினர்க்கு நல்ல மாற்றங்கள் குறித்து தகவல் கிடைக்கும். ஒகஸ்ட் கடைசியில் அயல் நாட்டுப் பிரயாணம் கூடிவரும். தடைப்பட்ட காரியங்கள் செவ்வனே நிறைவேறும்.

வழக்குகள் திசைதிரும்பி உங்களுக்கு சாதகமாக இருக்கும். மனைவியின் உடல் நிலையி கல்வனம் தேவை. உங்களின் வார்த்தைக்கு மதிப்புப் பெருகும் காலமிது.

## தனுசு

(மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.)

உங்களுக்கு உங்கள் பெருமையை பிறர் அறிய நேரிடும் நேரமிது. சிறுசிறு தடை ஏற்பட்டாலும் காரியம் வெற்றியடையும். சுபவிடயம் குறித்து பேச்சுகள் தொடங்கும். தூரத்திலிருந்து நற்செய்தி வரும். கணவன் மனைவியிடையே உறவில் திருப்தியாயிருக்கும் உத்தியோக பிரிவினர்க்கு சிறு சிறு நன்மை உண்டாகும். உணவு திரவப்பொருள் வியாபாரிகள் சிறு நன்மை அடைவர். மாணவர்க்கு மாணவியர்க்கும் சுமாரான காலம். பெண்களுக்கு சூதக, வயிறு சம்பந்தப்பிணி வந்து மாறும்.

கருத்து வேறுபாட்டிற்கு இடம் கொடாது இருத்தல் நலம். புத்திரர் புத்திரியர் வகையில் செலவுக்கு இடமுண்டு. உங்கள் உடல்நிலையும் பாதிப்படையும். மருத்துவச் செலவுக்கு இடமுண்டு. சத்துருக்கலால் பாதிப்பு இல்லாவிட்டாலும் அலைச்சல் உண்டு.

உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். காலம் தரும் பரிசு எதுவாயினும் நீங்கள் ஏற்க வேண்டியிருக்கும். அதற்காக பின்னிற்காதீர்கள். அயல் நாட்டுபிரயாணம் தாமதப்படும். வாகன வகை செலவுகள் ஏற்படும்.

## மகரம்

[உத்தராடம் 2,3,4–ம் பர்தங்கள்' திருவோணம். அவிட்டம்: 1, 2–ம் பாதம்]

உங்களுக்கு வார்த்தையின் கௌரவம் உயரும் காலமிது. வழக்காடும் நிலையில் இருந்தவர்க்கு அதற்கு அவசியமின்றி முடிவுகள் அநுகூல மாயிருக்கும். சித்தி, லாபம் என்பன கிட்டும்.

கணவன் மனைவியிடையே உறவில் திருப்தி நிலை இருக்கும். உத்தியோகப் பிரிவினர்க்கு பதவி மாறல், பணவரவு, திருமணம் போன்ற சுப முடிவுகள் கிட்டும். மாதக் கடைசியில் சில பிரச்சினைகள் தோன்றும். பணப்பற்றுக்குறை ஏற்படும். குழந்தைகளுக்கும் மருந்துச் செலவு ஏற்படும். மாணவர்க்கும் மாணவியர்க்கும் ஏற்ற காலமிது. தொழில்வகை பணத்தேவையை ஈடுகட்ட வீடு, வாகனம் விற்க நேரிடும். 4 ல் நிற்கும் ராகுவால் பல வழியில் நன்மை வந்து சேரும்.

ஆகஸ்ட் மாத நடுப்பகுதிக்குள் உங்கள் பிரச்சினைகள் நெருங்கி வந்து பிற்பகுதியில் சுமுகமாக முடியும்.

## கும்பம்

(அவிட்டம் 3, 4–ம் பாதம், சதயம்) பூரட்டாதி 1, 2, 3–ம் பர்தங்கள்)

உங்களுக்கு தடைகள் ஏதும் இல்லைதான். ஆனுல் குடும்பத்தில் குழப்பம், சலனப் போக்கு அதிகமாகும். சொத்து சம்பந்தமான பிரச்சனைகள் இருக்கும். இம்மாதம் வாகனப் பிரயாணங்களை குறைத்தல் அவசியம். காயம் ஏற்பட வாய்ப்புண்டு.

கணவன் மனைவியிடையே சிறு சிறு பிரச்சினை தோன்றிமறையும். ஆண், பெண்களுக்கு திடீரென திருமணம் கூடி வரும். கலைப்பிரிவினர்க்கு நல்ல ஆதாயம் கிட்டும். மாணவ மாணவவியர்க்கு மேன்மையான நேரம். எது எப்படியாயினும் கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு ஒரு வழியில் ஆதாயம் கிட்டினுலும் செலவும் இன்னோர் வழியில் வந்து சேரும். சுபச் செலவுகள் ஏற்படும். பணப் பற்றுக்குறையால் புதிய கடன் படவேண்டி இருக்கும். தேக ஆரோக்கியம் ஓரளவு முன்னேறிவரும்.

## மீனம்

(புரட்டாதி 4-ம் பாதம் உத்திரட்டாதி ரேவதி)

உங்களுக்கு குருவக்ரம் தீர்ந்து விட்டபடியினுல் உங்கள் வாட்டம் குறைந்துவிடும். இவ்விராசி மாணவ மாணவியர்க்கு மிகமிக உயர்வான நேரம். வியாபாரிகளுக்கு எழுச்சி மிக்க நேரம். உத்தியோக துறையினர்க்கு நல்லநேரம் பெண்களுக்கு ஆபரணச்சேர்க்கைகிட்டும். சிறுசிறு இடையூறுகளையும் தாண்டி உங்களுக்கு வெற்றி வந்தடையும். கணவன் மனைவியிடை ய உறவு சுமாரானதே. அன்னிய நாட்டு பிரயாணம் கூடிவரும். தடைதள் விலகி விட்டன. பகைத்துச் சென்றவர் சுமுகமாக வருவர். சொல்லளவில் நின்றவை செயலளவில் வரும். கடன் தீரும். பழையதை நினைத்து இனி வரும் உங்கள் நடவடிக்கைகள் தீர்க்கமானதாக இருக்கும் ஜெயமே கிட்டும். ●

## வெள்ளை மாளிகை

அமெரிக்க ஜனுதிபதியின் உத்தியோக வாசஸ்தலம் வெள்ளை மாளிகை. வாஷிங்டனிலுள்ளது. 132 அறைகள், திரைஅரங்கு நீச்சல் குளம், சலூன், டாக்டர், பல் டாக்டர்களுக்கான அறைகள், 27 குளியல் அறைகள் என்பன உண்டு.

வெள்ளை மாளிகையில், விருந்தின் போது ஜனுதிபதிக்குத் தான் முதலில் உணவு பரிமாற வேண்டும். அவர் சாப்பாட்டு அறைக்குள் வந்ததும் எல்லாரும் எழுந்து நிற்க வேண்டும். அவ்வறையிலிருந்து அவர் எழுந்து போகும் வரை எவரும் அசையக் கூடாது.


உங்கள் முதலீட்டுக்கு
மாதாந்தம்
30%
வட்டி
100%
பாதுகாப்பு
'LANKA'
யாழ். தமிழர் நிதியம்.
140 நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் அண்மையில்.)
22437